


Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 466 பிலவ வருடம், மாசி மாதம் 16ஆம் திகதி திங்கட்கிழமை (28.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 26, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30




# எந்த தேவாலயத்திலும் சத்தியம் செய்வேன்!



## உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் குறித்து முன்கூட்டிய தகவல் கிடைக்கவில்லை என்கிறார் மைத்ரி

யோ.தர்மராஜ்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பாக புலனாய்வுப் பிரிவோ அல்லது பாதுகாப்பு பிரிவோ ஏதேனும் தகவல்களை வழங்கியிருந்தால் நிச்சயம் நான் நாட்டைவிட்டு வெளியேறியிருக்க மாட்டேன். எனவே, தாக்குதல் குறித்து எனக்கு முன்கூட்டியே எந்த தகவலும் கிடைக்கவில்லை என எந்த தேவாலயத்திலும் சிலுவையின் முன்னால் சத்தியம் செய்வேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். பொலன்னறுவை நவ நகரப் பகுதியில் அமைந்துள்ள புதிய கிறிஸ்தவ தேவாலயத்தை அமைப்பதற்கு தலைமை தாங்கிய அனைவருக்கும்... 02 பக்கம்

## வாரத்தில் 4 நாட்கள் மட்டுமே வேலை; கடமைக்கான நேரமும் அதிகரிப்பு

### எரிபொருள் நெருக்கடியை சமாளிக்க மத்திய வங்கியின் புதிய யோசனைகள்

டொலர் தட்டுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு முகங்கொடுத்து நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான யோசனையொன்றை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளார். 02 பக்கம்

## சுற்றுலாப் பயணிகளுக்கான பி.சி.ஆர். தொடர்பான அறிவித்தல்



முழுமையாக கொரோனா தடுப்பூசிகளை பெற்று, வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள், நாளை முதல் பி.சி.ஆர். அறிக்கை பெறவேண்டிய அவசியம் இல்லை என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

முழுமையாக தடுப்பூசிகளை பெற்று 02 வாரங்கள் நிறைவடைந்த சுற்றுலாப் பயணிகள், இந்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள புதிய வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளது. 02 பக்கம்



ரஷ்ய தாக்குதலையடுத்து மேற்கு உக்ரைனில் உள்ள Lviv மத்திய ரயில் நிலையத்தில் தரையில் அமர்ந்திருக்கும் பெண்ணொருவர் அகதியாக அண்டை நாட்டுக்கு செல்லக் காத்திருக்கிறார்.

## 5 மணி நேரத்திற்கும் அதிகமான மின்வெட்டு இன்று அமுலாகிறது

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



நாங்களும் சின்ன வயசில எத்தின பொய்ச் சத்தியம் செய்திருக்கம்... இப்போ அரசியல்வாதிகள் சொல்லுற பொய்க்கு உண்மையைச் சொன்னாலே சனம் நம்பாது பாருங்கோ..

# உக்ரைனில் மோதல் உக்கிரம்!



- ரஷ்யாவுக்கு எதிராக மேற்குலகம் கடும் பொருளாதாரத் தடை
- பேச்சுக்கான அழைப்பை நிராகரித்தது உக்ரைன்
- அமெரிக்கா - ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு ஆயுத உதவி
- இலட்சக்கணக்கான உக்ரேனியர்கள் ஐரோப்பாவுக்குள் தஞ்சம்

15 பக்கம்

## சடலங்கள் எம்பாமுக்கு போர்மலின் தட்டுப்பாடு!

### 24 மணி நேரத்துக்குள் இறுதிச்சடங்கை செய்யும் நிலை

நாட்டில் ஏற்பட்டுள்ள அந்நியச் செலாவணி நெருக்கடியால் எதிர்காலத்தில் நாடுமுழுவதும் போர்மலின் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதாக மலர்ச்சாலை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் தற்போது போதுமானளவு போர்மலின் மட்டுமே இருப்பதாகவும், இதனால் மலர்ச்சாலைத் தொழில் எதிர்காலத்தில் சிக்கலுக்குள்ளாகும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து போர்மலின் இறக்குமதி செய்யப்படுகிறது. எரிபொருள் போன்ற அத்தியாவசிய பொருட்களுக்கு டொலர் வழங்கும் முயற்சியில் அரசாங்கம் போர்மலின் இறக்குமதியை நிறுத்தியுள்ளதாகக் கூறுகின்றனர். 02 பக்கம்

## உஷ்



பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஜெனீவாவில் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லே அம்மையாரை சந்தித்து பேசவுள்ளார்.

ஆனால், இந்த சந்திப்பினை தடுக்க இலங்கை அரசு இராஜதந்திர மட்டங்களில் முயற்சிகளை எடுத்து வருகிறது.

ஆனாலும் வரும் 6ஆம் திகதி ஜெனீவாவில் இந்த சந்திப்பு நடக்குமெனத் தெரிகிறது.






### 5 மணி நேரத்திற்கும்...

நாட்டில் இன்றைய தினம் 5 மணி நேரத்துக்கும் அதிகநேரம் மின் துண்டிப்பு மேற்கொள்ளப்பட உள்ளது.

மின்சார உற்பத்திக்கு தேவையான எரிபொருள் பற்றாக்குறையால் இன்று மின்துண்டிப்பை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கைக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி அளித்துள்ளது. இதற்கமைய, A,B,C ஆகிய வலயங்களுக்கு 4 மணித்தியாலங்களும் 40 நிமிடங்களும் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது.

P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்குட்பட்ட இடங்களில், 5 மணித்தியாலங்களும் 15 நிமிடங்களும் மின்துண்டிப்பு நடைமுறைப் படுத்தப்பட உள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சடலங்கள் எம்பாமுக்கு ....

உடல்களை எம்பாமிங் செய்வதில் மாற்று இல்லை என்பதால் ஒரு மாதத்துக்குள் போர்மலின் இறக்குமதி செய்ய முடியாவிட்டால், உடலை எம்பாமிங் செய்யாமல் 24 மணி நேரத்தில் இறுதிச் சடங்கை முடிப்பதைத் தவிர உடலைப் பாதுகாக்க வழியில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

### சுற்றுலாப் பயணிகளுக்கான...

08 வயது அல்லது அதற்கு குறைந்த சிறார்கள், ஒரு தடுப்பூசியேனும் ஏற்றியிருப்பின் அது முழுமையான தடுப்பூசி ஏற்றிக்கொண்டதாக கருதப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், 12 அல்லது அதற்கு மேற்பட்ட வயதானவர்கள் முழுமையாக தடுப்பூசி பெற்றிருக்காவிடின், நாட்டிற்கு வருகை தருவதற்கு 72 மணித்தியாலத்திற்குள் பெற்றுக்கொண்ட பி.சி.ஆர். அறிக்கையை சமர்ப்பிப்பது கட்டாயமானது என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழன் தமிழன் ஜூனியர்

கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

# நாட்டை மீட்க உடனடியாக அனைத்துக்கட்சி பேச்சு தேவை

## முன்னாள் ஜனாதிபதி மைத்ரி கோரிக்கை

*யோ.தர்மராஜ்*

நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைகளால் உருவாகியுள்ள மோசமான நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கு எந்தவொரு தியாகத்தையும் செய்யவேண்டும். பதவிகள், அதிகாரங்கள் முக்கியமல்ல. பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாங்கள் ஒன்றுசேர வேண்டும். அனைத்து தலைவர்களும் ஒரே வட்டமேசைக்கு வந்து கலந்துரையாடி உரிய தீர்வுகளை எடுக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலன்னறுவையில் நேற்று (27) இடம்பெற்ற கட்சி கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று திருடன், மோசடிக்காரர் என என்னை விமர்சித்தாலும் அதற்கு நான் வீழ்ந்து விடமாட்டேன். நான் பாலூட்டி வளர்த்த என்னுடைய பிள்ளை போன்றவரே இன்று என்னை ஊடகங்களுக்கு முன்னால் விமர்சிக்கிறார். அதற்காக நான் கவலையடையமாட்டேன். விமர்சனங்கள் எனக்கு பழக்கப்பட்டவை எனவே, பொலன்னறுவை மக்களின் ஆசிர்வாதத்துடன் முதுகெலும்புடன் பலமாக இருக்கின்றேன்.

இன்று நாட்டில் அதிக பிரச்சினைகள் உள்ளன. விவசாயிகள் கண்ணீருடன் போராடுகின்றனர். நான் விவசாய அமைச்சராக இருந்தபோதும் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதன் பின்னரும் சேதனப் பசளைத் திட்டத்தை முன்னெடுத்தேன். ஆனால், உலகில் எங்கும் நூறுவீத சேதனப் பசளை விவசாயத்தை முன்னெடுக்கவில்லை. இது சிறந்த கொள்கையாக இருந்தாலும் நாட்டின் நிலையை ஆராய்ந்தே சேதனப் பசளை விவசாயத்தை முன்னெடுக்க வேண்டும்.

பொலன்னறுவையில் என்னைத்தவிர ஆளுந்தரப்பிலிருக்கும் மூன்று உறுப்பினர்கள் விவசாயிகள் பிரச்சினை குறித்து எங்கும் பேசியதில்லை. அனைத்து விடயங்களுக்கும் ஆம் சேர், இல்லை சேர் என்று மட்டுமே பதிலளிக்கின்றனர். ஆனால், தனிப்பட்ட ரீதியில் எந்த நன்மை, தீமை வந்தாலும் விவசாயிகளின் பிரச்சினைக்காக நான் குரல் கொடுத்து, அரசுக்கும் நாட்டுக்கும் வெளிப்படுத்துவேன்.

தற்போது நாட்டில் வேலையின்மை, துன்பங்கள், துயரங்கள் நிறைந்துள்ளன. இதற்கான அரசாங்கத்தை குறைக்கூறமாட்டேன். ஆனால், நான் நாட்டை கொடுக்கும்போது இவை எதுமில்லாத சிறந்த நாட்டையே வழங்கினேன். என்னுடைய ஆட்சியில் பிரச்சினைகள் இல்லாதிருக்கவில்லை. ஆனால், பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை இவ்வாறான மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கவில்லை. அனைவருக்கும் உணவிருந்தது, விவசாயிகளும் சிறந்த முறையில் விவசாயம் செய்துகொண்டிருந்தனர்.

இந்த பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கான 15 யோசனைகளை நாங்கள் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளேன். ஆனால், அரசாங்கத்தின் மீது குறைக்கூறி தற்போதைய பிரச்சினையில் இருந்து மீளமுடியாது. மாறாக, நாட்டிலுள்ள அனைத்து கட்சிகளின் தலைவர்களும் ஒரே வட்ட மேசையில் அமர்ந்து நாட்டை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உக்ரைன் - ரஷ்யா போர் எங்களுடைய நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, தற்போதைய நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கு எந்தவொரு தியாகத்தையும் செய்யவேண்டும். பதவிகள், அதிகாரங்கள் முக்கியமல்ல. பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாங்கள் ஒன்றுசேர வேண்டும். நாட்டின் தற்போதைய பிரச்சினைகளை சாதாரணமாக எடுக்கமுடியாது. அனைத்து தலைவர்களும் ஒரே வட்டமேசைக்கு வந்து கலந்துரையாடி உரிய தீர்வுகளை எடுக்க வேண்டும். எனவே, சர்வ கட்சி குழுவொன்றை நியமிக்குமாறு நாங்கள் யோசனையை முன்வைத்துள்ளோம்.

இவற்றை செய்வதோடு, எதிர்வரும் காலத்தில் ஆட்சியை அமைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பலப்படுத்த வேண்டும். நாட்டை மீட்பதற்கு நாங்கள் எந்தவொரு தியாகத்தையும் செய்ய தயாராகவுள்ளோம். கட்சிபேதமின்றி, இனமத பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்தாலேயே நாட்டை மீட்கமுடியும். எனவே, அனைத்து கட்சித் தலைவர், மதத்தலைவர்கள், புத்திஜீவிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நாட்டுக்கு புதிய வேலைத்திட்டங்கள், கொள்கைகள் தேவையாகவுள்ளது. எனவே, விவசாயிகள் உள்ளிட்டு அனைத்து மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் உணவுத் தட்டுப்பாட்டைத் தடுப்பதற்கு அரசாங்கத்திற்கு நாங்கள் முழு ஆதரவையும் வழங்குவோம் - என்றார்.

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில்
வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்
தமிழன் தமிழன்

## இரணைதீவில் கைதான 8 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி – இரணைதீவில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 08 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்ரமணியம் முன்னிலையில் மீனவர்கள் நேற்று (27) பிற்பகல் 2.45 மணியளவில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகளால் மன்றில் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது மீனவர்களை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து அவர்கள் யாழ். சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டில், இரணைதீவு கடற்பரப்பில் குறித்த 08 இந்திய மீனவர்களும் அவர்கள் பயணித்த படகுடன் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் (26) கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் 16 வயது சிறுவன் ஒருவரும் அடங்குவார்.

இராமேஸ்வரம் – தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு பின்னர் இலங்கை கடற்பரப்பிற்குள் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களில் 51பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்களின் 10 படகுகளும் இம்மாதத்திற்குள் மாத்திரம் கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இலங்கையில் கைதுசெய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களுடன் அவர்களது படகுகளையும் விடுவித்துக்கொள்வதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழக மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை – இந்திய அரசாங்கங்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என இராமேஸ்வரம் மீனவ சங்கத் தலைவர் எமரிட் கோரிக்கை விடுத்துள்ளார்.

## 3 மாதங்களுக்கு தேவையான மருந்துகள் கையிருப்பில்

### ஔடத உற்பத்தி இராஜாங்க அமைச்சு தெரிவிப்பு

அடுத்த 03 மாதங்களுக்கு தேவையான ஔடதங்கள் அரச வைத்தியசாலைகள் வசமுள்ளதாக ஔடத உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

தனியார் பிரிவுகளுக்கு மருந்துப்பொருட்களை கொள்வனவு செய்யும்போது ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடி தொடர்பில், சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடவுள்ளதாக இராஜாங்க அமைச்சின் செயலாளர், வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பெரசிட்டமோல் மருந்து உற்பத்தியை துரிதப்படுத்துமாறு உரிய தரப்பிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பரவிவரும் நோய்கள் காரணமாக பெரசிட்டமோல் மருந்துக்கான கேள்வி அதிகரித்துள்ள தாக இராஜாங்க அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## அனைத்து விருந்தகங்களிலும் மதுபான விற்பனைக்கு அனுமதி

சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து விருந்தகங்கள், விருந்தினர் இல்லங்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் மென் மதுபானங்கள் - பியர் மற்றும் வைய்ன் விற்பனைக்கு அரசாங்கம் அனுமதி வழங்கவுள்ளது.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கடற்கரைகள் மற்றும் பூங்காக்கள் போன்ற பொது இடங்களில் மது அருந்துவதையும் சட்டவிரோத மதுபானம் வழங்குவதையும் இது தடுக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த திட்டம் சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த சேவைகளை வழங்கும்," என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

### எந்த தேவாலயத்திலும் ...

ஆசிர்வாதம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஏப்ரல் தாக்குதல்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் தெரிந்துகொண்டே நான் வெளிநாட்டுக்குச் சென்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால், அது முற்றிலும் போலியான கருத்தாகும் என்பதை இந்த தேவாலயத்தில் வைத்து உறுதியாக கூறுகின்றேன்.

தாக்குதல் தொடர்பாக புலனாய்வு பிரிவோ அல்லது பாதுகாப்பு பிரிவோ ஏதேனும் தகவல்களை வழங்கியிருந்தால் நிச்சயம் நான் நாட்டைவிட்டு வெளியேறியிருக்கமாட்டேன். ஆனால், நான் சிகிச்சை ஒன்றுக்காகவே சிங்கப்பூர் சென்றேன். அங்கு இரு நாட்களாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன்.

எனினும், நான் வைத்தியசாலையில் இருந்தபோது, தொலைபேசி ஊடாக எனக்கு தாக்குதல் தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டதாக சில குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. ஆனால், சிங்கப்பூரிலுள்ள எலிசபெத் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டால் தொலைபேசிகளுக்கு அனுமதி வழங்கப்படாது. அதற்கு அமையவே நான் இரண்டு மூன்று நாட்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். ஏப்ரல் தாக்குதல் தொடர்பாக நான் நியமித்த ஜனாதிபதி ஆணைக்குழுவில் கூட இதனைக் கூறியுள்ளேன்.

எனவே, நான் பௌத்தனாக இருந்தாலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து எனக்கு முன்கூட்டியே எந்த தகவலும் கிடைக்கவில்லை என எந்த தேவாலயத்திலும் சிலுவையின் முன்னால் தன்னால் சத்தியம் செய்ய முடியும்.

அவ்வாறான தகவல்கள் தெரிந்திருந்தால் உரிய நடவடிக்கை எடுக்காதிருந்திருக்க மாட்டேன். ஒருவேளை, நான் சிங்கப்பூரில் இருக்கும்போது, தாக்குதல் தொடர்பான தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தால் பாதுகாப்பு அமைச்சுக்கு ஆலோசனை வழங்கி, ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்துமாறு கூறியிருப்பேன் - என்றார்.

### வாரத்தில் 4 நாட்கள்....

எரிபொருள் நெருக்கடி தொடர்பில் ஆராய்வதற்காக கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இந்த யோசனையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கடனுதவியைத் தொடர்ந்தும் வழங்கினால் இரண்டு வங்கிகளும் வீழ்ச்சியடைவதைத் தடுப்பது கடினமாகும் என்பதால், அதற்கான கடனை உடனடியாக நிறுத்தவும் மத்திய வங்கி முன்மொழிந்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இரண்டு அரச வங்கிகளுக்கும் சுமார் 56 பில்லியன் ரூபாவை (28 பில்லியன் அமெரிக்க டொலர்கள்) செலுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், கூட்டுத்தாபனத்திற்கு மேலும் கடனுதவி வழங்கினால் இரண்டு வங்கிகளும் வீழ்ச்சியடைவதற்கும் பொருளாதாரத்தில் பாரிய நெருக்கடிக்கும் வழிவகுக்கும் என்பதால், உடனடியாக மாற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய வங்கி பரிந்துரைத்துள்ளது.

எரிபொருள் விற்பனையில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படும் நஷ்டத்தைக் குறைப்பதற்காக எரிபொருள் விலையை கணிசமாக அதிகரிக்குமாறும் மத்திய வங்கி அரசாங்கத்திற்கு முன்மொழிந்துள்ளது.

வார வேலை நாட்களின் எண்ணிக்கையை நான்காக குறைத்து, நாளொன்றின் வேலை நேரத்தை அதிகரிக்க மத்திய வங்கி முன்மொழிந்துள்ளது. இதன்படி, நிறுவனங்களின் செயற்பாடுகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5:30 மணிவரை தொடரவேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சொந்த வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், பொதுமக்கள் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்த ஊக்கப்படுத்த வேண்டுமென்றும் மத்திய வங்கி கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, மத்திய வங்கியின் பிரேரணையானது நெருக்கடி மற்றும் எரிபொருளைச் சேமிப்பதன் அவசியத்தை பொதுமக்களுக்கு உணர்த்தும் வகையில் பாரிய ஊடகப் பிரசாரத்தை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளது.

தற்போது விற்பனையில்




விலை ரூ.40/=
தொடர்புகளுக்கு : 0777 983308 - விநியோகப்பிரிவு

# இன்றைய ராசி பலன்

**28.02.2022 திங்கட்கிழமை மாசி 16**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

| | |
|---|---|
| **நட்சத்திரம்: திருவோணம்** | **திதி: அமர பட்ச திரயோதசி** |
| காலை 7.02 - 01.03.2022 | அ.கா. 5.42 - 01.03.2022 |
| அதிகாலை 5.19 வரை | அதிகாலை 3.16 வரை |
| **யோகம்: வரீயான்** | **முற்கரணம்: கரஜம்** |
| பிற்பகல் 2.26 வரை | அ.கா. 5.42 - மாலை 4.28 |
| **பரிகம்** | **பிற்கரணம்: வணிஜம்** |
| பி.ப. 2.26 - 01.03.2022 | மாலை 4.28 - 01.03.2022 |
| காலை 11.18 வரை | அதிகாலை 3.16 வரை |

| | | |
|---|---|---|
| **சுப நேரங்கள்** | பிற்பகல் 1.53 - 3.23 | லோகநாயகி |
| காலை 6.24 - 7.24 | **எமகண்ட காலம்** | ஸஹஸ்ர சீர்ஷ |
| மாலை 4.53 - 6.23 | காலை 10.53 - பி.ப. 12.23 | வதனா அன்னை |
| **அசுப நேரங்கள்** | | பிரத்யங்கிராவின் |
| **ராகு காலம்** | **துர் முகூர்த்தம்** | கருணையாலே |
| காலை 7.54 - 9.23 | பிற்பகல் 12.47 - 1.35 | நற்பவி நற்பவி |
| **குளிகை காலம்** | மாலை 3.11 - 3.59 | நற்பவி |

**மேஷம்:** சமுதாயத்தில் புகழ் மேம்படும். வணிக விற்பனையில் கொடுத்த கடன் கிடைக்கப் பெறலாம். வேலைத்தளத்தில் பாராட்டு கிடைக்கலாம். உங்களுக்கு இன்று சூழ்நிலையும் சாதகமாக அமையலாம்.

**ரிஷபம்:** பிள்ளைகளின் சாதனைகளால் மகிழ்ச்சி உண்டாகலாம். கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு வாய்ப்புகள் உண்டாகலாம். வீட்டின் மூத்தவர்களின் ஆலோசனை சில விடயங்களில் நன்மை தரும். பணிகளில் கவனம் தேவைப்படலாம்.

**மிதுனம்:** வேலைத்தளத்தில் அவமரியாதை ஏற்படலாம். புதிய தொழில் அல்லது வேலை இன்று துவங்க நல்ல நாள் இல்லை. குடும்பச் சூழ்நிலையும் சாதகமாக அமையாமல் இருக்கலாம். ஆடம்பரம் மற்றும் எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். இறைவணக்கம் தேவை.

**சந்திராஷ்டமம்: திருவாதிரை நட்சத்திரத்திற்கு அ.கா. 1.29 - இரவு 11.44 புனர்பூசம் நட்சத்திரம் பாதம் 1/2/3க்கு இரவு 11.44 - 01.03.2022 மாலை 4.32 வரை**

**கடகம்:** தம்பதியரிடையே மகிழ்ச்சி நிலவும். வேலைத்தளங்களில் பணிகள் தாமதமின்றி நிறைவேறுவதுடன், உங்கள் வழிகாட்டுதலும் சக ஊழியர்களுக்கு பயனளிக்கலாம். பெண்களுக்கு இன்று பாராட்டு கிடைக்கலாம். கூட்டு தொழில் திட்டங்கள் உருவாகலாம்.

**சிம்மம்:** வணிகத்தில் மேலதிக முதலீடு செய்யப்படலாம். பணிகளில் மேலதிகாரிகளுடன் அனுசரிப்பு தேவைப்படலாம். அன்றாட வழக்கங்களில் தாமதத்தை தவிர்ப்பது நல்லது. பணிகளில் பிறரின் மீதான நம்பிக்கையில் கவனம் தேவைப்படலாம். இறைதியானம் நன்மை.

**கன்னி:** அரசாங்க சம்பந்தப்பட்ட வேலைகளில் சிறிய கவனம் தேவைப்படலாம். தரகு சம்பந்தப்பட்ட தொழில் லாபம் கிடைக்கலாம். காதலில் இன்று இனிமையான நாளாக அமையலாம். சமூக தொண்டுகளில் ஆர்வம் உண்டாகலாம்.

**துலாம்:** மாணவர்களுக்கு கல்வியில் சிறந்த நாளாக அமையலாம். வரி சம்பந்தப்பட்ட விடயங்களில் கவனம் தேவைப்படலாம். தொழில் ஆர்வம் மேம்படும். வாழ்க்கைத்துணையுடன் பிரச்சினைகளை தவிர்த்து அனுசரிப்புடன் இருப்பது நன்மை தரலாம்.

**விருச்சிகம்:** மாணவர்களுக்கு எதிர்கால தொழில் பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கலாம். சில தடைப்பட்ட வேலைகள் நிறைவேறலாம். உடல்நலம் சீராகும். அனுபவசாலிகளின் ஆலோசனை அனைத்து விடயங்களிலும் நன்மை தரலாம்.

**தனுசு:** காணி/வீடு/சொத்து பிரச்சினைகள் கவலை தரலாம். நிதிப் பிரச்சினை உருவாகலாம். சுயநலம் சிறிது குறைப்பது நல்லது. நண்பர்களின் உதவி மன ஆறுதல் தரலாம். சில வளங்களுக்கான சூழ்நிலையும் உண்டாகலாம்.

**மகரம்:** மருத்துவம் சம்பந்தப்பட்டவர்களுக்கு சாதகமான நாளாக அமையலாம். காதலர்களுக்கு இனிமையான நாளாக அமையலாம். உங்கள் பொறுப்பில் விசுவாசமாக இருப்பது நன்மை. அன்றாட வழக்கங்கள் ஒழுங்கு பெறும். மகிழ்ச்சியான நாளாக அமையலாம்.

**கும்பம்:** கடனாக கொடுத்த பணத்தை திரும்பப் பெறுவதில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். வாகனம் செலுத்துவதில் கவனம் தேவைப்படலாம். செரிமான பிரச்சினைகள் சிறிய அளவில் ஏற்படலாம். தம்பதியரிடையே உறவில் விட்டுக்கொடுப்பு நல்லது. இறைவணக்கம் நன்மை.

**மீனம்:** வணிக தொடர்புகளின் வலிமை மேம்படும். பண நிலைமையில் மகிழ்ச்சி உண்டாகலாம். புதிய பணிக்கு மாறிச் செல்லும் முயற்சி உண்டாகலாம். நண்பர்களுடன் இன்று மகிழ்வான நாளாக அமையலாம். குடும்பத்தின் அமைதியான சூழலால் மகிழ்ச்சி நிலவும்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழிக்க அனைவரும் இணைந்து குரல்கொடுக்க வேண்டும்

## சுமந்திரன் எம்.பி. வேண்டுகோள்





(வெல்லாவெளி செய்தியாளர்)

இந்த நாட்டில் மனித உரிமைகள் பேணப்படவேண்டுமானால், இந்த நாட்டில் மனித உரிமைகளுக்கு இடமிருக்கவேண்டுமானால் இந்த நாட்டில் பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும். இதற்கு அனைத்து மக்களும் குரல்கொடுக்க வேண்டும் - என ஜனாதிபதி சட்டத்தரணியும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசு கட்சி வடக்கு, கிழக்கு வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் "பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும்" என்ற கோரிக்கையைத் முன்வைத்து நாடு பூராகவும் முன்னெடுத்துவரும் கையெழுத்துப் போராட்ட ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பற்றி தமிழ் சமூகத்திற்கு எவரும் எதுவும் சொல்லவேண்டிய அவசியம் கிடையாது. இந்த சட்டத்தின் கீழ் கூடுதலாக கஷ்டங்களை அனுபவித்தவர்கள் தமிழ் மக்கள். சிங்கள இளைஞர்களும் 1988, 89ஆம் ஆண்டுகளில் இந்தச் சட்டத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்தார்கள். நான் சட்டத்தரணியாக தொழில்செய்த காலத்தில் அவர்கள் சார்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பல வழக்குகளில் ஆஜராகியுள்ளேன்.

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று இருந்தாலே ஒருவர் தனக்கு எதிரான சாட்சியமாக அதனை கொடுத்துவிடமுடியும். இந்த சட்டத்திலுள்ள பிரதான ஆட்சேபனைக்குரிய விடயம் அதுதான். பொலிஸார் எந்தவித விசாரணையும் செய்யவேண்டிய அவசியம் கிடையாது. ஒருவரை சித்திரவதை செய்து குற்ற வாக்குமூலத்தினைப் பெற்றுக்கொண்டால் அந்த குற்றத்தினை அவர்கள் தீர்த்துவிட்டதாக கருதப்படும். அவருக்கு எதிராக நீதிமன்ற தீர்ப்பு கொடுக்கப்படும். இவ்வாறு பல விடயங்கள் காணப்படுகின்றன. காலவரையறையின்றி ஒருவரை தடுத்துவைத்திருக்க முடியும். இந்த ஏற்பாட்டை தவிர 18 மாதங்கள் தடுத்துவைப்பதை 12மாதங்களாக குறைக்கப்போவதாக தெரிவிக்கின்றனர். இந்த 18 மாதங்கள் என்பது நீதிமன்ற உத்தரவு இல்லாமல் ஒருவரை தடுத்துவைத்திருக்கும் காலமாகும்.ஆனால், அவரை நீதிமன்றில் நிறுத்திவிட்டால் நீதிவானுக்கு இருக்கும் ஒரேயொரு அதிகாரம் அவரை விளக்கமறியலில் வைப்பதுதான். வழக்கு முடியும் வரையில் அவரை விளக்கறியலில் வைக்கவேண்டும் என்று பிரிவு 07 சொல்கின்றது. ஆகையினால் 18 மாதங்களை 12 மாதங்களாக குறைத்துவிட்டால் எதுவும் மாறப்போவதில்லை. 12 மாதங்களுக்குள்ளே அவரை நீதிவானுக்கு முன்பாக நிறுத்தினால் காலவரையறையின்றி தடுத்துவைக்கமுடியும்.

தற்போது மேல்முறையீட்டு நீதிமன்றில் பிணை கோரிக்கை வைக்கலாம் என்ற புதிய திருத்தம் கொண்டுவந்துள்ளார்கள். ஆனால், மேலும் முறையீட்டு நீதிமன்றம் பிணை வழங்கமுடியும் என்று கூறப்பட்டுள்ளதற்கு கீழாக மேலும் முறையீட்டு நீதிமன்றம் பிணை வழங்கிய பிறகு அதற்கு கீழ் உள்ள மேல் நீதிமன்றம் மீண்டும் அவரை விளக்கமறியலில் வைக்கமுடியும் என்றுதான் அதில் சொல்லப்பட்டுள்ளது.

உலகத்தில் எங்கும் இவ்வாறான சட்டம் இல்லை. இவ்வாறான சட்டதிருத்தங்களையே கொண்டு வருகின்றார்கள். அதனால்தான் இந்தத் திருத்தம் கண்துடைப்புக்கூட கிடையாது என நாங்கள் கூறியுள்ளோம்.

பலர் எங்களிடம் கடந்த ஆட்சிக்காலத்தில் இதனை நீக்கக்கூடிய காலம் இருந்தது. ஏன் நீங்கள் அதனை செய்யவில்லையென கேட்கின்றனர்.

அவ்வாறு கேட்கின்றவர்களுக்கு ஞாபகமறதி அதிகம் இருக்கின்றது. சென்ற ஆட்சிக்காலத்தில் இந்த சட்டமூலத்தினை இல்லாமல் செய்கின்ற சட்டமூலம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற அடிப்படையில் அது கொண்டு வரப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை முற்றாக ஒழித்து சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப பயங்கரவாத தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அது கொண்டுவரப்பட்டபோதும் அதனை நாங்கள் எதிர்த்தோம். அதிலும் மோசமான பல விடயங்கள் இருந்தன.

அதனை நாங்கள் எதிர்த்த காரணத்தினால் ஒரு நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவில் இது தொடர்பில் நீண்ட கலந்துரையாடல்கள் நடைபெற்று, நாங்கள் எதிர்த்த அனைத்து விடயங்களும் மாற்றியமைக்கப்பட்டன. அப்படியிருந்தும் வேறுசில புதுவிடயங்கள் அதிலிருந்த காரணத்தினால் பலர் எதிர்த்தார்கள். அவையும் மாற்றப்படவேண்டும் என்று நாங்கள் சொல்லியிருந்தோம் - என்றார்.

# பாடசாலை மாணவர்கள் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல்

## பஸ்ஸில் பயணித்தபோது அத்துருகிரியவில் சம்பவம்



(ஹேமந்த லியனபத்திரண)

பாடசாலை மாணவர்கள் இருவர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்கிய நபர் ஒருவரை அத்துருகிரிய பொலிஸார் கைதுசெய்துள்ளனர். முல்லேகம பகுதியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பஸ்ஸில் பயணம்செய்த இரு மாணவர்கள் மீது திடீரென கூரிய ஆயுதத்தால் நபர் ஒருவர் தாக்கியுள்ளார். இதன் காரணமாக அவர்கள் இருவரும் கடும் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இதனையடுத்து தாக்கியவரை தப்பிச்செல்லவிடாமல் பயணிகள் தடுத்துள்ளதுடன், இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவ்விடத்துக்கு விரைந்த அத்துருகிரிய பொலிஸார் சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர். அத்துடன், கடும் காயங்களுக்குள்ளான மாணவர்கள் இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர், மாணவர் ஒருவரின் தலை, கால் ஆகியவற்றுக்கும் மற்றுமொருவரின் கை, கால்களுக்கும் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

இந்த சந்தேக நபர் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகின்றமை ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர் இன்று (28) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கூரிய ஆயுதத்தால் தாக்கியமைக்கான காரணம் தொடர்பிலான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# கவனிப்பாரற்ற நிலையில் ஹட்டன் பஸ் நிலையம்



(செ.தி. பெருமாள்)

மத்திய மலைநாட்டிலுள்ள பிரதான நகரமான ஹட்டன் நகரில் உள்ள பிரதான பஸ் தரிப்பிடம் பாரியளவில் குண்டும் குழியுமாக இருப்பதால் பஸ் நடத்துனர்கள் மற்றும் பயணிகள் பாடசாலை மாணவர், மாணவிகள் பாதசாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டு முன் வைக்கின்றனர்.

இது குறித்து ஹட்டன் நகரசபைத் தலைவர், மற்றும் அரச பஸ் நிலைய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த தரிப்பிடத்திற்கு நாளொன்றுக்கு ஐந்நூறுக்கு மேற்பட்ட அரச மற்றும் தனியார் பஸ்கள் தரித்து செல்லும்போது கழிவுநீர் தேங்கி நிற்பதால் பயணிகள், பாடசாலை மாணவர், மாணவிகள், பாதசாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டு முன்வைக்கின்றனர்.

மழைக் காலங்களில் இவ்வாறு கழிவுநீர் தேங்கி நிற்பதால் அதனை செப்பனிட்டு தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# குடு ரொஷானின் சகா கடுவளையில் கைது

கடுவளை போதைப்பொருள் வர்த்தகரான குடு ரொஷானுடன் தொடர்புடைய ஒருவர் ஐஸ் ரக போதைப்பொருள் மற்றும் அதன் வர்த்தகத்தால் ஈட்டப்பட்ட பணத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார். கடுவரை-போமிரிய பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

35 வயதான சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதோடு அவரிடம் இருந்து 12 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 64 கிராம் ஐஸ் ரக போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு இலட்சம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு ஆணைக்குழு அமைப்பதற்கான பிரேரனை நாடாளுமன்றத்தில் விரைவில் முன்வைக்கப்படும்

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. மன்னாரில் தெரிவிப்பு







(மன்னார் நகர் செய்தியாளர்)

மாற்றுத்திறனாளிகளின் பல்வேறு பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கான பிரேரணை ஒன்றை விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளதாக சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. மன்னாரில் தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான நீதிக்கான எங்கள் குரல் எனும் தலைப்பில் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தை வலியுறுத்திய திட்ட பயனாளிகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் அரச அதிகாரிகளுடனான உடனான கருத்தமர்வு மன்னார் விழுது நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் அளவில் மன்னார் தனியார் விடுதியில் இடம்பெற்றது.

குறித்த கருத்தமர்வில் மாற்றுத்திறனாளிகள், சமூக மட்டத்தில் அனுபவிக்கும் பாரிய சவால்களையும் அவர்களின் தேவைகளையும் அரச அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களிடம் எடுத்துக் கூற, அவர்களுக்கு நேரடியாக சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

குறிப்பாக, நடைபெற்று முடிந்த யுத்தத்தினாலும் பல்வேறுபட்ட காரணங்களினாலும் மன்னார் மாவட்டத்தில் புள்ளி விபரப்படுத்தப்படாத 1,436 நபர்களுக்கு மேல் மாற்றுத்திறனாளிகளாக காணப்படுகின்றனர்.

இவர்கள் சமூக மட்டத்தில் அனைத்து விடயங்களிலும் ஓரங்கட்டப்பட்டவர்களாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப் பட்டது.

மாற்றுத்திறனாளி நபர்கள் சமூகத்தில் சம உரிமைகளை அனுபவிக்க உரிமையுடையவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டு அரசின் கல்வி, தொழில் வாய்ப்பு, அரசியல் போன்றவற்றில் இட ஒதுக்கீட்டை அதிகரித்து ஊக்குவிப்பு வழங்குவதுடன், அவர்களுக்கு சலுகைகளையும் வழங்கப்பட வேண்டும் போன்ற மிக முக்கியமான கருத்துகள் எடுத்துக்கூறப்பட்டது.

குறித்த கோரிக்கைகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கான ஏற்பாடுகளை தான் மேற்கொள்வதாகவும் மாற்றுத்திறனாளிகளால் முன்வைக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கான பிரேரனை ஒன்றை நாடாளுமன்றத்தில் தான் விரைவில் முன்வைப்பதாகவும் தெரிவித்தார். அதேநேரம் மாற்றுத்திறனாளிகள் போக்குவரத்தின்போதும் அதேநேரம் அரச அலுவலகங்களிலும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் தாம் கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் பிரதேச சபையின் உப தவிசாளர், மன்னார் போக்குவரத்துச் சபையின் முகாமையாளர் மன்னார் மாவட்ட பெண்கள் சமாசம், அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்களின் ஒன்றியம், இளையோர் தன்னார்வக் குழு, தேனி மாற்றுத்திறனாளிகள் அமைப்பினரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் கான்ஸ்டபிள் மீது கத்திக்குத்து

(ஹேமந்த லியனபத்திரண)

பாதுக்கையில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற இசை நிகழ்ச்சியொன்றின்போது பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கத்தியால் குத்தி காயப்படுத்தப்பட்டுள்ளார். பாதுக்கை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மதுஷங்க (92513) என்பவரே இதன்போது கடும் காயங்களுக்குள்ளாகியுள்ளார். இவர் மீது கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்ட இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அவர்கள் அரக்காவில பகுதியைச் சேர்ந்தவர்கள் என ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. மேலும், பல்வேறு குற்றச் சம்பவம் ஒன்று தொடர்பில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதுடன் எதிர்வரும் மார்ச்மாதம் 04 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# உக்ரைன் சுற்றுலாப் பயணி கண்டியில் தனித்துப் போராட்டம்




உக்ரைன் மீதான ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பு உலகம் முழுவதும் கலவையான அபிப்பிராயங்களை ஏற்படுத்தியுள்ளது. படையெடுப்பிற்கு எதிராக உலகம் முழுவதும் பல பகுதிகளில் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

இந்நிலையில், இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ள உக்ரைனிய பெண்ணொருவரின் போராட்டம் சமூக ஊடகங்களில் கவனம் ஈர்த்துள்ளது. கண்டி ஏரிக்கு முன்பாக அவர் பதாகையொன்றை ஏந்தியபடி நின்றார். அதில் உக்ரைனில் போரை நிறுத்தும்படி கோரும் வாசகங்கள் இடம்பெற்றிருந்தன. உக்ரைன் தேசியக் கொடியை அவர் போர்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் நடந்த பி.பி.சி. செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை தொடர்பில் இலங்கையை சேர்ந்த சந்தேகநபரை பிரிட்டன் பொலிஸார் கைதுசெய்துள்ளதை மனித உரிமை அமைப்புகள் வரவேற்றுள்ளன.

விசாரணைகளைத் தொடர்ந்து 48 வயது நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதாக தெரிவித்துள்ள லண்டனின் மெட்ரோபொலிட்டன் பொலிஸார், கைதுசெய்யப்பட்டவரின் பெயரை வெளியிடவில்லை. ஆனால், அவர் ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரென செய்திகள் வெளியாகியுள்ளன.

சந்தேகநபர் கைதுசெய்யப்படுவதற்கு காரணமான விசாரணைகள் 22 வருடங்களின் பின்னரும் நீதி பொறுப்புக்கூறல் குறித்து மெட்ரோபொலிட்டன் பொலிஸார் கொண்டுள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகின்றது என சர்வதேச உண்மை மற்றும் நீதித்திட்டத்தின் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

பிபிசி பத்திரிகையாளரின் கொலையாளி என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர் பிரிட்டனில் மறைந்து வாழ்ந்துள்ளமை அருவருப்பான விடயம் என அவர் தெரிவித்துள்ளார்.

2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி நிமலராஜன் கொலைசெய்யப்பட்டமை இலங்கையின் உள்நாட்டு மோதலில் பத்திரிகையாளர்கள் படுகொலைசெய்யப்படுவதன் ஆரம்பமாக காணப்பட்டது. கொல்லப்பட்டவர்களில் அநேகமானவர்கள் தமிழர்கள். ஆனால் அனைவரும் தமிழர்கள் அல்ல.

சந்தேகநபர் பிரிட்டனின் சர்வதேச குற்றவியல் சட்டத்தின் 51ஆம் பிரிவின்கீழ் வரும் குற்றச்சாட்டுகளின்கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சட்டம் பிரிட்டனை யுத்தகுற்றம் மனிதகுலத்திற்கு எதிரான குற்றம், இனப்படுகொலைகள் குறித்த விசாரணைகளை உலகின் எந்தப் பகுதியில் இடம்பெற்றாலும் சர்வதேச நீதிவரம்பின் கீழ் முன்னெடுக்க அனுமதிக்கின்றது.

இந்த வழக்கு மிகவும் முக்கியமானது. தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுவது சகித்துக்கொள்ளப்படாது என்பதை குறிப்பிடுவதாக தெரிவித்துள்ள ரெட்டிரெஸ் அமைப்பின் சார்லி லூடன், இலங்கை போன்ற நாடுகள் விசாரணைகளை முன்னெடுக்காவிட்டால் வேறு சாத்தியப்பாடுகள் உள்ளன என்பதை இந்த கைது தெரிவிக்கின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அதிகாரிகளின் ஒத்துழைப்பு இல்லாவிட்டாலும் பிரிட்டன் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பார்கள் என சார்லி லூடன் தெரிவித்துள்ளார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 28ஆம் திகதி, திங்கட்கிழமை

# தெய்வம் நின்றறுக்கும்!

2004 முதல் 2010 வரை 44 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதை பதிவுசெய்துள்ள ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள் என்ற இலங்கை அமைப்பு இந்த கைது முக்கியமான முன்னுதாரணமாக விளங்குகின்றது என தெரிவித்துள்ளது.

பாரிய குற்றங்களில் ஈடுபட்டவர்கள், தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்கள் இரண்டு தசாப்தங்களுக்குப் பின்னரும் அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் விளைவுகளை எதிர்கொள்ளவேண்டும் என தெரிவித்துள்ள அந்த அமைப்பு, நிமலராஜனிற்கு நீதி கிடைப்பது குற்றவாளிகளுக்கும் மோசமான குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களுக்கும் தெளிவான செய்தியை தெரிவிக்கும் என குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களில் அளவுக்கதிகமான குற்றங்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கின் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரானவையாக காணப்படுகின்றன. இந்தச் சம்பவங்கள் குறித்து சிறிதளவு கவனம் கூட செலுத்தப்படுவதில்லை. முன்னைய அரசாங்கத்தின் கீழ் கொழும்பில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்கள் குறித்து சிறிதளவு விசாரணைகளும் நீதிமன்ற நடவடிக்கைகளும் இடம்பெற்ற போதிலும் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான சம்பவங்கள் குறித்து எந்த விசாரணையும் இடம்பெறவில்லை.

தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுதல் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தொடர்வதற்கான அனுமதிப்பத்திரமாக இலங்கையில் மாறியுள்ளது. கைதுகள், தடுத்துவைத்தல், தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், அனுமதி மறுப்பு போன்ற வன்முறைகளே தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. பத்திரிகையாளர்கள் தொடர்ந்தும் நாட்டிலிருந்து தப்பியோடுவதுடன் தங்களை சுயதணிக்கைக்கும் உட்படுத்திவருகின்றனர்.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்காக ஒரு நபர் கூட தண்டிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கும் சுதந்திர ஊடக இயக்கம் இரண்டு சம்பவங்கள் மாத்திரமே விசாரணை கட்டத்தை அடைந்துள்ளன என தெரிவிக்கின்றது. ஒரு சம்பவம் தொடர்பான விசாரணைகள் நிறுத்தப்பட்டுள்ளன.


ஒட்டுமொத்தமாக இலங்கையை தொடர்ச்சியாக ஆட்சி செய்தவர்கள் ஊடகவியலாளர்களுக்கு எதிரான பாரதூரமான குற்றங்களுக்காக பொறுப்புக்கூறலை நிலைநாட்டத் தவறியுள்ளனர். இது மாற்றமடையும் என்பதற்கான அறிகுறி எதுவுமில்லை என்று நினைத்திருந்த சமயத்தில்தான் இப்போது மேற்படி கைது நடந்திருக்கிறது.

தற்போது ஊடகவியலாளர்களை விட ஊடக சுதந்திர அமைப்புகள், சங்கங்கள், ஊடகவியலாளர்களையும் ஊடகப் பணியாளர்களையும் வேலைக்கு அமர்த்தும் ஊடக முகவர் அமைப்புகள் போன்ற அமைப்புகள் இன்னமும் அதிகளவிற்கு ஆழமாக வேரூன்றியுள்ள ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களிற்கு தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுதல் மற்றும் அனைத்து விதமான தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலையும் மேலும் வலுவாக எதிர்கொள்ள தங்கள் அணுகுமுறைகளை ஆக்கபூர்வமானதாகவும் நிலையானதாகவும் விரிவானதாகவும் மாற்றிக்கொள்ளவேண்டும்.

நிமலராஜன் படுகொலை சந்தேகநபர் கைதென்பதை இலகுவில் கடந்து செல்ல முடியாது.ஜெனீவா மனித உரிமைகள் கூட்டம் நடக்கவுள்ள ஒரு தருவாயில் இது அரசுக்கு கனதியான செய்தியை சொல்லியிருக்கிறது.அதற்கப்பால் குற்றங்களை புரிந்தவர்கள் என்றாவது ஒருநாள் எதோ ஒருவகையில் அதற்குரிய பலனை அனுபவிப்பார்கள். தெய்வம் நின்றறுக்கும் என்பது இதைத்தான்.



# உக்ரைனை ஆக்கிரமிக்க திட்டமிடும் புட்டின்



சோவியத் ஒன்றியத்திலிருந்து வெளியேறி தனி நாடாக இருக்கும் உக்ரைனை ரஷ்யாவுடன் இணைக்கும் முயற்சியை ரஷ்ய ஜனாதிபதி புட்டின் மேற்கொள்கிறாரோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

உக்ரைன் எல்லையில் ரஷ்யப் படைகள் குவிப்பப்பட்டபோது யுத்தம் ஆரம்பமாகப் போகிறதென உலக நாடுகள் எச்சரிக்கை விடுத்தன. அதனை மறுத்த புட்டின் இராணுவப் பயிறசி என்றார். பயிற்சியை முடித்துக்கொண்ட இராணுவம் வெளியேறுவதாகப் போக்குக் காட்டிக் கொண்டு உக்ரைனைத் தாக்க உத்தரவிட்டார் புட்டின். உக்ரைனில் இருக்கும் ரஷ்ய உளவாலிகள் தாக்குதல்களை வழிப்படுத்துகிறார்கள்.

தரைப் படை, கடல் படை, விமானப் படை ஆகிய மூன்று படைகளும் ஒரேநேரத்தில் உக்ரைன் மீது தாக்குதலை ஆரம்பித்தன. அழகான வண்ணமயமான உக்ரைனின் தலைநகர் கீவ் புகைமண்டலமாகியது. பீரங்கி, ஹெலி, விமானம், ரொக்கெட் லோஞ்சர் ஆகியவற்றின் தாக்குதல்களால் கீவ் சின்னாபின்னமாகியது.


உக்ரைனில் இருக்கும் ரஷ்ய மொழி பேசுபவர்களை உக்ரைன் பழிவாங்குகிறது. இன அழிப்பு செய்கிறது போன்ற குற்றச்சாட்டுகளைச் அள்ளி எறிந்து உக்ரைனுக் குள் படையை நடத்திய புட்டினின் குறி உக்ரைனின் இராணுவக் கட்டமைப்பு. இராணுவத் தளங்கள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் ஆகியனவற்றின் மீது முதல் தாக்குதல் நடத்தப்பட்டது. பின்னர் பொதுமக்களின் குடியிருப்புகள் ரஷ்யாவின் தாக்குதலால் சீட்டுக்கட்டுபோல் சரிந்தன.

ரஷ்யாவின் படைபலத்துக்கு முன்னால் உக்ரைனின் படைபலம் தாக்குப் பிடிக்க முடியாது. ஆனால், ரஷ்யாவின் அத்துமீறலை தடுப்பதற்கு உக்ரைன் திடமுடன் நிற்கிறது. ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் அரசியல் அனுபவம் உக்ரைனின் ஜனாதிபதி வோலேடிமிர் ஜெலன்ஸ்கிக்கு கிடையாது. சோவியத் ஒன்றியமாக ரஷ்யா இருந்தபோது உளவுப் படையின் பிரதானியாக வெளிநாடுகளில் வலம் வந்தவர் புட்டின். ரஷ்யா உருவானபோது அரசியல் வாதியாகி சுமார் 30 வருடங்களாக அசைக்க முடியாத தலைவராக புட்டின் திகழ்கிறார்.

சோவியத் ஒன்றியத்திலிருந்து உக்ரைன் பிரிந்தபோது அங்கு ரஷ்யாவின் கைப்பொம்மையாக ஜனாதிபதி இருந்தார். தேர்தலில் புதிய ஜனாதிபதியாக வோலேடிமிர் ஜெலன்ஸ்கி பதவி ஏற்றார். நகைச்சுவை நடிகரான அவர், ரஷ்யாவின் பிடியிலிருந்து உக்ரைனை மெது மெதுவாக மீட்டார். இதனால் கோபமடைந்த அரசியல் எதிரியான உக்ரைன் ஜனாதிபதிக்கு நெருக்கடியைக் கொடுத்தார். ஆயுதம் ஏந்தி கிளர்ச்சி செய்பவர்களுக்கு ரஷ்யா உதவியது.

அமெரிக்காவின் தலைமையிலான நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைந்து விடுமோ என்ற அச்சம் புட்டினுக்கு ஏற்பட்டது. இந்த யுத்தம் தொடங்குவதற்கு அதுவே முக்கிய காரணம்.

## நகரங்களை அழிப்பது



எங்கள் நோக்கமல்ல என ரஷ்யா தெரிவித்தாலும் மக்கள் வசிக்கும் பகுதிகளில் ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்தியதை பார்த்ததாக பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர். தலைநகர் கீவ்வை கைப்பற்ற முயற்சி செய்த ரஷ்யப் படையினருடன் இவான்கிவ் என்ற இடத்தில் உக்ரைன் இராணுவத்தினர் கடுமையாக மோதினர். இந்த இடம் கீவ் நகரிலிருந்து 60 கி.மீ. தொலைவில் உள்ளது. ரஷ்யாவின் எல்லையிலுள்ள நேட்டோ நாடுகளைப் பாதுகாப்பதற்கு நேட்டோ நாடுகள் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா, உக்ரைன் மீது போர் தொடுப்பதோடு மட்டுமல்லாமல் இணையவழி தாக்குதல்களையும் அரங்கேற்றியுள்ளது. உக்ரைன் அரசின் அதிகாரப்பூர்வ இணையதள பக்கங்கள் முடக்கப்பட்டுள்ளன. அதன் அண்டை நாடுகளான லாட்வியா மற்றும் லித்துவேனியாவிலும் நூற்றுக்கும் மேற்பட்ட கணினிகள் முடக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இந்த இணையவழி தாக்குதலை அரங்கேற்ற ரஷ்யா மூன்று மாதங்களாக திட்டமிட்டு வந்தமை தெரியவந்துள்ளது.



ரஷ்யாவில் பாதுகாப்பான இடத்தில் இருந்தபடி போரை கண்காணிக்கிறார் புட்டின். உக்ரைன் ஜனாதிபதி வோலேடிமிர் ஜெலன்ஸ்கி இராணுவ கவச உடையுடன் இருக்கும் படத்தை வெளியிட்டு மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டியுள்ளார். துணை ஜனாதிபதியின் மனைவியும் இராணுவ உடை அணிந்தபடி காட்டியளிக்கிறார். உயிரைப் பொருட்படுத்தாத உக்ரைன் மக்கள் ரஷ்யத் தாங்கிகளை ஆங்காங்கே தடுக்கின்றனர். பொதுமக்களுக்கு துப்பாக்கிகளைக் கொடுத்த உக்ரைன் அரசு போராட வருமாறு அழைப்பு விடுத்துள்ளது. கருங்கடலில் சென்று கொண்டிருந்த ஜப்பானின் சரக்குக் கப்பல் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது. தாய்வானுக்கருகில் அமெரிக்காவின் போர்க்கப்பல் செல்வதற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் இந்த அத்துமீறலுக்கு ஒருசில நாடுகள் அங்கீகாரம் கொடுக்கின்றன. ரஷ்யாவின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்போதைக்கு ரஷ்யாவுக்கு பாதிப்பு ஏற்படாது. எதிர்காலத்தில் பாரிய சிக்கல் ஏற்படுவதிலிருந்து ரஷ்யா தப்ப முடியாது. உலகின் பொருளாதாரத் தடையால் ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்த உலக நாடுகளுக்கு உடனடி பாதிப்புகள் ஏற்படும்.

தற்போது ரஷ்ய துருப்புக்கள் உக்ரைனின் 2 ஆவது பெரிய நகரமான கார்கிவ் நகருக்குள் நுழைந்துள்ளன. ஆயிரத்துகும் அதிகமான ரஷ்ய வீரர்கள் கொல்லப்பட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. ரஷ்யா இதனை மறுத்துள்ளது. குறைந்தது 240 உக்ரைன் குடிமக்கள் கொல்லப்பட்டதாகவும் கொல்லப்பட்டவர்களில் செச்சென் ஜெனரல் மாகோமெட் துஷேவ்வும் அடங்குவர். இவர் உக்ரைன் ஆட்சியில் சக்தி வாய்ந்தவராவார். தற்போது ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மக்கள் வீடு வாசல்களை இழந்து அகதிகளாகியுள்ளனர்.

மக்களை வெளியில் வரவேண்டாம் என அறிவித்த உக்ரைன் அரசு ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது. இரவு 10 மணியிலிருந்து, காலை 7 மணிவரையிலான ஊரடங்கு, மாலை 5 மணியிலிருந்து காலை 8 வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் சாலைகளில் இருப்போர், எதிரி நாட்டைச் சேர்ந்தவர்களாக கருதப்படுவர் என அரசு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

எங்கள் அரசைக் கவிழ்த்து, தனக்கு ஆதரவான அரசை அமைக்க புட்டின் முயற்சிக்கிறார் என உக்ரைன் தரப்பில் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது. இதற்கான இரகசிய நடவடிக்கைகளை ரஷ்ய உளவு அமைப்பு ஏற்படுத்தியிருக்கலாம். உக்ரைன் ஆட்சியைக் கைப்பற்றும்படி ரஷ்ய ஜனாதிபதி புட்டின் அறிவித்ததால் இந்தச் சந்தேகம் உலகின் மத்தியில் எழுந்துள்ளது.

உக்ரைன் - ரஷ்யா மோதல் அதிகரித்து வருவதையடுத்து இங்கிலாந்து உட்பட பல்வேறு நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்களைக் கொடுத்து உதவுகின்றன. உக்ரைன் நாட்டுக்கு 350 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள இராணுவ போர்க் கருவிகளை வழங்க அமெரிக்க ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். மேலும் அமெரிக்காவில் செயல்படும் ரஷ்ய வங்கிகள், தொழில் ஸ்தாபனங்கள் உள்ளிட்டவை செயல்பட அனுமதி இரத்துசெய்யப்பட்டுள்ளன.

இந்த உத்தரவு குறித்து அமெரிக்க மாகாண செயலாளர் ஆன்டனி பிளிங்கன் கூறுகையில், அமெரிக்கா உக்ரைனுடன் தோளோடு தோள் நிற்பதை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் இந்த புதிய உத்தரவு தெளிவுபடுத்தியுள்ளது - என்றார்.

ரஷ்ய பொருளாதாரத்தை சீர்குலைக்கும் நோக்கில் பல்வேறு ரஷ்ய நிறுவனங்களுக்கு அமெரிக்காவில் தடை விதிக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் ரஷ்யா கடும் நிதி நெருக்கடிக்கு உள்ளாகக்கூடும் என்று கூறப்படுகிறது. ஜோ பைடனின் இந்த செயலும் உலகளவில் வரவேற்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அபி

## மூன்றாவது நாள்...

உக்ரைன் தலைநகரின் தென்மேற்கில் உள்ளூர் நேரப்படி நள்ளிரவுக்குப் பிறகு இரண்டு குண்டுவெடிப்புகள் நடந்தன.

வாசில்கிவ் நகரிலுள்ள எரிபொருள் கிடங்கு ரஷ்ய ஏவுகணைகளால் குறிவைக்கப்பட்டதாக அதன் மேயர் கூறினார்.

ரஷ்ய எல்லைக்கு அருகில் அமைந்துள்ள கிழக்கு உக்ரைனில் உள்ள கார்கிவ் என்ற இடத்தில் எரிவாயு குழாய் ஒன்றையும் ரஷ்யா வெடிக்கச் செய்தது.

விளாடிமிர் புட்டின் தனது படைகளின் வெளிப்படையான முன்னேற்றமின்மையால் கோபமடைந்ததாகக் கூறப்படுகிறது. மேலும் தனது பலத்த பாதுகாப்புடன் கூடிய ரஷ்ய மலைக் குகையில் புகைந்து வருவதாகக் கூறப்படுகிறது.

ஒரு வினோதமான ஒரேஞ் பிரகாசம் வானத்தை நிரப்பியது, எரிபொருள் கிடங்கு தாக்கப்பட்டிருக்கலாம் என்று CNN தெரிவிக்கிறது

கியேவின் இரண்டு விமான நிலையங்களில் ஒன்றான போரிஸ்பில் சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது.

வைத்தியசாலையின் நிலவறையில் பிரசவம்



## நக்கல் நமசிவாயம்

உக்ரைன் ஜனாதிபதிக்கு கொடுத்த கயிறை போலத்தான் எங்கட போராட்டத்துக்கும் வெள்ளைக்காரன் கயிறை கொடுத்தான்...



## இன்றைய நாளில்...

* 1784 – ஜோன் வெஸ்லி மெதடிஸ்த திருச்சபையை ஆரம்பித்தார்.
* 1922 – எகிப்தின் விடுதலையை ஐக்கிய இராச்சியம் அங்கீகரித்தது.
* 1935 – வொலஸ் கரோதேர்ஸ் என்பவரினால் நைலோன் கண்டுபிடிக்கப்பட்டது.
* 1953 – ஜேம்ஸ் வாட்சன் மற்றும் பிரான்சிஸ் கிரிக் ஆகியோர் தாம் டி.என்.ஏயின் வேதியியல் அமைப்பைக் கண்டுபிடித்ததாக அறிவித்தனர்.
* 1954 – என்.டி.எஸ்.சி. தரத்துடன் முதலாவது வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் விற்பனைக்கு வந்தன.
* 1991 – முதலாம் வளைகுடா போர் முடிவுற்றது.
* 2007 – புளூட்டோவை நோக்கி ஏவப்பட்ட நியூ ஹரைசன்ஸ் தானியங்கி விண்கலம் வியாழனை அண்மித்தது.

# பேரழிவிலிருந்து மக்களைக் காப்பாற்றும் தீர்க்கதரிசனத்துடனே வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண அரசை உருவாக்கினோம்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

(காரைதீவு செய்தியாளர்)

தமிழ் மக்கள் இந்த மண்ணில் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழவேண்டும் என்ற ஒரு நல்ல நோக்கத்திற்காகவே 1987ஆம் ஆண்டு பத்மநாபா தலைமையிலான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண அரசு உருவாக்கப்பட்டது - என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பின் மட்டு. அம்பாறை பிராந்திய பொறுப்பாளர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட தியாகிகளை நினைவுகூர்ந்து அவர்களின் உறவுகளை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (26) சனிக்கிழமை மாலை காரைதீவு லேடி லங்கா வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றபோது அதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பின் முக்கியஸ்தர் சர்மா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கு - கிழக்கு இணைந்த முதலாவது மாகாண சபையின் நிதியமைச்சராக இருந்த கிருபாகரன் 1990ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையாற்றும்போது ஒரு விடயத்தை குறிப்பிட்டிருந்தார். எதிர்காலத்தில் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு என்ன நடக்கப் போகிறதோ தெரியாது என்ற தீர்க்கதரிசனமான கருத்தை அவர் அப்போது தெரிவித்திருந்தார்

அவ்வாறு அவர் அன்று உரையாற்றும்போது வடக்கும் கிழக்கும் இணைந்திருந்தது இன்று வடக்கு மாகாணம் வேறாகவும் கிழக்கு மாகாணம் வேறாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. கடந்த யுத்த காலத்தில் பல ஆயிரக்கணக்கான பொதுமக்களை நாங்கள் பறிகொடுத்து இருக்கின்றோம். ஆயிரக்கணக்கான போராளிகளை இழந்திருக்கிறோம். மில்லியன் கணக்கான சொத்துகளை பறிகொடுத்து இருக்கின்றோம். இன்று நாங்கள் எங்கே இருக்கின்றோம்?

வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண அரசை அமைப்பதற்காக எங்களுக்கு கிடைத்த அந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தாவிட்டால் பாரிய அழிவை சந்திக்கவேண்டி வரும். தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை சந்திக்கவேண்டி வரும். இவற்றை தவிர்க்கும் நோக்கத்திற்காகவே அன்று தோழர் பத்மநாபாவும் ஏனைய தோழர்களும் இணைந்து ஒரு தீர்க்கதரிசனமாக வடக்கு, கிழக்கு மாகாண சபையை உருவாக்கினார்கள்

ஆனால், எங்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடுகள், இயக்கங்களுக்கு இடையே ஏற்பட்ட பிளவுகள், மிதவாத தலைமைகளுக்கு இடையே ஏற்பட்ட பிரச்சினைகள் எல்லாமே இன்று தமிழ் மக்களை நடுத்தெருவுக்கு கொண்டுவந்து நிறுத்தியிருக்கின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம்

ஆகவே, மாகாண அரசைத் தாங்கி மாகாண அரசை உருவாக்கிய தோழர்களுடைய தியாகங்களையும் அவர்களின் உறவுகளையும் கௌரவப்படுத்த வேண்டும் என்பதுதான் எங்களுக்குள் இருந்த ஆதங்கம். அது இன்று சுவாமி விபுலாநந்தர் பிறந்த புனித பூமியிலே மிக நேர்த்தியான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு நிறைவேறியிருக்கிறது.

இதற்காக மட்டு. அம்பாறை ஏற்பாட்டுக் குழுவினருக்கு கட்சியின் சார்பில் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டு உரையாற்றியதுடன், சுடரேற்றும் நிகழ்வு, புஷ்பாஞ்சலி, கௌரவிப்பு நிகழ்வு என்பனவும் இடம்பெற்றன.









# ஈ.பி.டி.பி. ஒருபோதும் கொலைகளை ஏற்றுக்கொள்ளவில்லை

## ஈழ மக்கள் ஜனநாயக கட்சி அறிக்கை

(யாழ் நிருபர்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம் ஒரு போதும் கொலைகளை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. கொலைகளுக்கூடாக பிரச்சினை களைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்களுமில்லை - என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லண்டனில் போர்க்குற்றங்களோடு தொடர்புபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட கைது தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்திகள் ஊடாக ஈ.பி.டி.பி. மீதான விஷமத்தனமான அவதூறுகள் பரப்பப்பட்டுள்ளதால், அதனை கண்டிப்பதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஊடகங்களுக்கு கண்டன அறிக்கை ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது. குறித்த அறிக்கையிலேயே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களுக்கு நாம் காட்டிய அரசியல் கொள்கைகளே இன்று நிதர்சனமாகியுள்ள நிலையில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மீது தொடர்ச்சியாக சுமத்தப்பட்டுவரும் அவதூறுகளையும், உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுகளையும் நாம் கண்டிக்கின்றோம்.

அண்மையில் இலண்டனில் போர்க் குற்றங்களோடு தொடர்புபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட கைதுகள் தொடர்பான செய்திகளை வெளியிட்ட சில ஊடகங்கள், குறித்த சம்பவத்தை ஈ.பி.டி.பியின் மக்கள்நலச் செயற்பாடுகளுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிட்டு மீண்டும் எம்மீது சேறுபூசும் கைங்கரியத்தை அரங்கேற்றியிருக்கினறன.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் பணியானது, இருப்பதைப் பாதுகாத்துக்கொண்டு எமது மக்கள் பெறவேண்டியதை நடைமுறைச் சாத்தியமான பொறிமுறையூடாகவும், தேசிய நல்லிணக்கத்தின் பாதையிலும் சாதித்துப் பெற்றுக்கொள்வதேயாகும் என்பதை மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக வலியுறுத்தி வருவது மட்டுமல்லாது நிரூபித்தும் காட்டி வருகின்றோம்.

அதற்கான எமது ஈடுபாட்டையும், அர்ப்பணிப்பையும் பொறுத்துக்கொள்ளாத பயங்கரவாதிகளும், அவர்களின் படுகொலைகளை நியாயப்படுத்தியும், அவர்களுக்கு துதிபாடியும் பிழைப்பு நடத்தியும் வந்தவர்களால் எமது கட்சியின் பல உறுப்பினர்கள் பலிகொள்ளப்பட்டனர்.

பலர் புலத்தில் வாழமுடியாத கொலை அச்சுறுத்தல் காரணமாக புலம்பெயர்ந்து போனதும் கடந்தகால கசப்பான வரலாறாகும்.

இந்நிலையில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம் ஒருபோதும் கொலைகளை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. கொலைகளுக்கூடாக பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்களுமில்லை என்பதை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

எம்மீது பல அவதூறுகளை சுமத்தியும் வந்துள்ள தரப்பினர், தற்போதும் எங்கெங்கோ நடந்தேறும் சம்பவங்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியுடன் தொடர்புபடுத்தி விசமத்தனமான உள்நோக்கத்துடன் செய்தி பரப்புவதானது அவர்களின் அரசியல் ரீதியான உள்நோக்கம் கொண்ட செயலாகும். அத்தகைய செயற்பாடுகளை நாம் கண்டிக்கின்றோம் - என்றுள்ளது.

# பன்வில தொழிற்சாலையில் திடீரென பரவிய தீ

## காரணம் கண்டறியப்படவில்லையென பொலிஸார் தெரிவிப்பு

கண்டி – பன்வில, ரக்ஸாவ தேயிலை தொழிற்சாலையில் தீ பரவியதால் தொழிற் சாலைக்கு பெருமளவு சேதம் ஏற்பட்டுள் ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.45 முதல் ரக்ஸாவ தேயிலை தொழிற்சாலையில் தீ பரவ ஆரம்பித்திருந்தது. இதனையடுத்து தீப்பரவலை கட்டுப்படுத்த தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்டனர்.

நீண்டநேர பிரயத்தனத்துக்குப் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீயினால் தேயிலை தொழிற்சாலையின் உபகரணங்கள் மற்றும் பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

தீப்பரவலுக்கான காரணம் தொடர்பில் பன்வில பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# காணி பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் வவுனியாவில் நடமாடும் சேவை







(வவுனியா செய்தியாளர்)

வன்னியின் மூன்று மாவட்டங்களிலும் காணப்படும் காணி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான காணி அமைச்சின் நடமாடும் சேவை ஒன்று காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தலைமையில் இடம்பெற்றது.

வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் இந்த நடமாடும் சேவை நேற்று (27) காலைமுதல் மாலைவரை இடம்பெற்றது.

வன்னியின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட காணி தொடர்பான பிரச்சினைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில் அவற்றிற்கு விரைவான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி காணி அமைச்சருக்கு வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக, குறித்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

இதன்போது வனவளத் திணைக்கள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்திற்குட்பட்ட காணிகள் உட்பட வன்னி மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு இதன்போது தீர்வு காணப்பட்டது.

குறித்த நடமாடும் சேவையில் காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, நாடாளுமன்ற உறுப்பினர்களான கு.திலீபன், கே.கே.மஸ்தான், செல்வம் அடைக்கலநாதன், காணி அமைச்சின் செயலாளர், காணி அமைச்சின் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், வனவள மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சின் செயலாளர்கள், வடமாகாண பிரதம செயலாளர், வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் போராட்டம்

## வலி. தெற்கு பிரதேச சபை முன்பாக நாளைமறுதினம் முன்னெடுக்க ஏற்பாடு



(யாழ். செய்தியாளர்)

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாடுகள் எல்லை மீறி செல்வதை தடுக்கவும் மக்களின் நலன்கள் அனைத்தும் மக்களின் விருப்புக்கமைவான தெரிவுகளாகவும் இருக்கவேண்டும் என்று வலியுறுத்தியும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் வலி. தெற்கு பிரதேச செயலகம் முன்றலில் நாளை மறுதினம் (02) போராட்டம் ஒன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர்.

வலி. தெற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை தவிசாளர் தலைமையில் நடைபெற்றது.

அதன்போது பிரதேசத்தின் அபிவிருத்திகள் தொடர்பில் ஆராயப்பட்ட நிலையில் பல அபிவிருத்திகளை முன்னெடுப்பதில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இடையூறாக உள்ளதாகவும் அவர்களின் தன்னிச்சையான முடிவுகளால் மக்கள் பல அவலங்களை எதிர்கொண்டு வருவதாகவும் அதிகளவான் உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பாக வட்டாரத்துக்கு நான்கு மில்லியன் முன்மொழிவுகளை அரசியல் நுழைவின்றி வட்டாரத்தின் பிரதிநிதிகள் ஊடாக தெரிவு செய்யப்படவேண்டும் என அரசாங்கம் அறிவித்துள் நிலையில் அது யாழ்ப்பாணத்தில் மட்டும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முடிவாக இருக்கக்கூடாது என்றும் வலியுறுத்தியிருந்தனர்.

நாடு முழுவதும் ஒரே நடைமுறை என்றால் அதை ஏற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவித்த உறுப்பினர்கள், ஆனால், இவ்வாறான மக்களின் முன்மொழிவு நடைமுறை யாழ்ப்பாணத்தில் மட்டும் காணப்படவில்லை என்று சுட்டிக்காட்டியிருந்ததுடன், இவ்வாறான நிலையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் வலியுறுத்திய உறுப்பினர்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரதும் அவர் சார் தரப்பினரதும் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப மக்களின் தேவைகளை நிர்ணயிப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் வலியுறுத்தியிருந்தனர்.

அத்துடன், இது தொடர்பில் நிதி அமைச்சருக்கும் ஜனாதிபதிக்கும் அறிவிக்க வுள்ளதுடன் அதை எதிர்த்து பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தனர்.

இந்நிலையில் எதிர்வரும் புதன்கிழமை குறித்த கவனயீர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்வதென சபையில் தீர்மானிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞர் குழுக்களுக்கிடையில் அடிதடி; கலவரபூமியான வவுனியா வைரவபுளியங்குளம்



வவுனியாவில் நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபனுடன் வந்த குழுவினருக்கும், பிறிதொரு தரப்பிற்கும் இடையில் இடம்பெற்ற மோதலால் வவுனியா வைரவபுளியங்குளம் விளையாட்டு மைதானம் அமைந்துள்ள பகுதி நேற்றுமுன்தினம் கலவரபூமியாக காட்சியளித்தது.

வவுனியா வைரபுளியங்குளம் பகுதியில் கடந்த இரு தினங்களாக இளைஞர் குழுக்களுக்கிடையில் தொடர்ச்சியாக அடிதடி சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளன. அதன் தொடர்ச்சியாக நேற்றுமுன்தினமும் குறித்த பகுதியில் அதிக எண்ணிக்கையிலான இளைஞர்கள் குழுமியிருந்தனர். இதனையடுத்து அந்தப் பகுதிக்கு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தனது சகாக்களுடன் சென்றிருந்தார்.

இதன்போது இளைஞர்கள் சிலருக்கும் அவர்களுக்கும் இடையில் முரன்பாடு ஏற்பட்டதுடன், மோதலும் இடம்பெற்றது.

இதேவேளை, சற்றுநேரத்தில் குறித்த பகுதிக்கு வந்திறங்கிய மற்றொரு குழுவினர் நாடாளுமன்ற உறுப்பினருடன் வருகை தந்திருந்த சகாக்களை தாக்கத் தொடங்கினர். அவர்களும் திரும்பித் தாக்கினர்.

இதனால் இருதரப்பிற்கும் இடையில் கடுமையான மோதல் இடம்பெற்றதுடன், நாடாளுமன்ற உறுப்பினரையும் தாக்க முற்பட்டனர். குறித்த சம்பவத்தால் அந்தப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது.

இச்சம்பவம் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது நாடாளுமன்ற உறுப்பினர் வாகனத்தில் ஏறி தனது அலுவலகம் நோக்கிச்சென்றார்.

எனினும், அவரது சகாக்களை துரத்திச்சென்ற குழுவொன்று மன்னார் வீதியில் அமைந்துள்ள மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரின் அலுவலகத்திற்குள் உட்புகுந்து தாக்க முற்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் மோதலில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட இருவரை கைதுசெய்து பொலிஸ் நிலையம் அழைத்துச்சென்றதுடன், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# 'பாபிகியுவ்' இயந்திரத்தால் பறிபோன உயிர்கள்; நுவரெலியாவில் கணவன் - மனைவி சடலமாக மீட்பு!








(க.கிஷாந்தன், டி.சந்ரு, செ.திவாகரன்)

கொக்கரல்ல பகுதியிலிருந்து நுவரெலியாவுக்கு சுற்றுலா வந்த இரு ஜோடிகள் சடலமாக இன்று நுவரேலியாவில் மீட்கப்பட்டுள்ளன. உல்லாசப் பிரயாணிகளாக நுவரெலியாவிற்கு வருகை தந்த ஆண் ஒருவரும் பெண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது

கடந்த வெள்ளிக்கிழமை (26) கதிர்காமத்திலிருந்து 8 பேர் கொண்ட குடும்ப உறுப்பினர்களுடன் தங்களுடைய விடுமுறையை கழிப்பதற்காக நுவரலியாவிற்கு வருகை தந்து நுவரெலியா கெலேகால பகுதியில் தனியார் விடுதி ஒன்றில் தங்கியுள்ளனர்.

இவர்களில் உயிரிழந்த இருவரும் தனியறையில் தங்கியுள்ளனர். எனினும், காலையில் குறித்த இருவரும் எழுந்திருக்காததை அறிந்த மகன் மற்றும் மகள்மார்கள் இருவரும் அறையின் மற்றொரு சாவியை பயன்படுத்தி கதவை திறந்து பார்க்கும்போது, இருவரும் உயிரிழந்திருப்பதை அவதானித்துள்ளனர்.

பின்னர் விடுதியின் முகாமையாளரின் ஊடாக நுவரெலியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை யடுத்து, விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சடலங்களை மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், தங்களுடைய இரவு உணவுத் தேவைக்காக பயன்படுத்திய 'பாபிகியுவ்' இயந்திரத்தை குளிரிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக அறைக்குள் வைத்து நித்திரைக்கு சென்றுள்ளனர்.

இதன்போது குறித்த இயந்திரத்திலிருந்து வெளியேறிய நச்சுவாயு காரணமாக இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் குருநாகல், கொக்கரல்ல பகுதியில் வசிக்கும் தொழிலதிபரான அஜித் குமார ஹேரத் (வயது 59), அவரின் மனைவியான ஆயுர்வேத தாதி மாலனி நந்தா மொலகொட (வயது 58) என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களுடைய சடலம் நேற்று (27) நுவரெலிய மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனை இடம்பெற்றதன் பின்பு உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவிருப்பதாக நுவரெலியா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.


இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



இலங்கை இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடமாடும் வைத்திய சேவையின் மூலம் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் தலைமையில் ஆரம்பமானது.
(படங்கள் : இரத்தினபுரி நிருபர்)

# சிவனொளிபாதமலைக்குச் சென்ற 193 பேர் போதைப்பொருளுடன் கைது









(மஸ்கெலியா நிருபர்)

சினனொளிபாதமலை பருவகாலம் ஆரம்பமாகி சுமார் இரண்டு மாத காலத்துக்குள் போதைப்பொருட்களுடன் சிவனொளிபாதமலை தரிசிக்க சென்ற் 193 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிவனொளிபாதமலைக்கு போதைப்பொருட்கள் கொண்டுசெல்வதனை தடுப்பதற்காக ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹட்டன் - கொழும்பு, பலங்கொடை - பொகவந்தலாவ, நோர்வூட் - மஸ்கெலியா, தியகல - நோர்ட்டன் உள்ளிட்ட பிரதான வீதிகளில் பல இடங்களில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து கேரள கஞ்சா, போதை மாத்திரைகள், தடைசெய்யப்பட்ட சிகரெட்டுகள், மதன மோதக்கய, ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சோதனை நடவடிக்கையின்போது பொலிஸ் மோப்பநாய் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாயின் உதவியுடன் போதைப்பொருட்கள் வைத்திருந்த 87 நபர்களை ஹட்டன் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஹட்டன் கோட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பிரேமலால் மற்றும் ஹட்டன் பொலிஸ் தலைமையக பொலிஸ் பரிசோதகரின் ஆலோசனைக்கமைய பொலிஸ் பரிசோதகர், தசநாயக்க தலைமையில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சிவனொளிபாதமலை யாத்திரை செய்வதற்காக கேரள கஞ்சாவுடன் சென்ற 13 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் இவர்கள் ஹட்டன் நீதவான் முன்னலையில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கைகளின்போது ஹட்டன் பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 87 பேரும் ஏனைய பொலிஸ் நிலையங்களிலிருந்து சுமார் 106 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்து வருகை தந்தவர்கள் என்றும் அவர்களில் பெரும்பாலானவர்கள் 22 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வீதிகளை புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை பிரதேசத்தில் பலாங்கொடை ராசகல வீதியில் எல்லெ வத்த என்ற இடத்தில் பிரதான வீதியின் நடுவில் ஏற்பட்டுள்ள வெடிப்பு காரணமாக வீதி தாழிறங்கும் அவதானம் ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் நீண்டகாலமாக அவதானிக்கப் படாமையால் இவ்விடத்திலுள்ள வெடிப்பின் அளவு அதிகரித்து வருவதாகவும் இதனால் இவ்வீதி பிளவுபட்டு பள்ளத்தாக்கின் பக்கம் தாழிறங்கும் அச்சம் நிலவுவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், தினமும் நூற்றுக்கணக்கில் பார ஊர்திகள் பயணிக்கும் இவ்வீதி விரைவில் பாதித்து ஆபத்தினையும் அதிகரித்த செலவையும் ஏற்படுத்த முன் பாதிப்படைந்துள்ள இவ்வீதியை திருத்தித் தருமாறு பிரதேச மக்கள் பலாங்கொடை பிரதேச சபையிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அத்துடன், பலாங்கொடை - தும்பகொடை பிரதேசத்தில் பிரதான வீதியில் மகளிர் கல்லூரிக்கு முன் ஏற்பட்டுள்ள இரண்டு குழிகளைப் பழுதுபார்த்து உதவுமாறு மாணவர்களின் பெற்றோர் நகர சபையிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# உக்ரைன் - ரஷ்யாவுக்கிடையிலான மோதலால் தேயிலை ஏற்றுமதியில் தாக்கம் ஏற்படும்

## பாரத் அருள்சாமி தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

நாட்டில் இன்று பொருட்களின் விலைகள் அதகரித்துள்ளன. தற்போதைய சூழ்நிலையில் அது இன்னும் அதிகரிக்கும் ஆபத்துள்ள நிலையில், உக்ரைன் - ரஷ்யாவுக்கிடையிலான மோதலால் தேயிலை ஏற்றுமதியிலும் தாக்கம் ஏற்படும். அதனையும் நாம் சமாளிக்க வேண்டும் - என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும், பிரஜாசக்தி அபிவிருத்தி செயல் திட்டத்தின் பணிப்பாளர் நாயகமுமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டி பன்வில ரங்கல பெரு தோட்டம் மற்றும் பன்வில ஆத்தல மேற்பிரிவு ஆகிய பகுதிகளில் நேற்று (27) நவீன வசதிகளுடன் சிறுவர் பராமரிப்பு நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"இந்த பகுதியில் அமையவுள்ள இந்த நிலையமானது, புள்ளக்காம்பரா அல்ல. இதனை சிறுவர் அபிவிருத்தி நிலையமென்றே விளிக்க வேண்டும். அதற்கேற்ற வகையி லேயே உட்கட்டமைப்பு வசதிகள் செய்துகொடுக்கப் படவுள்ளன. கணினி முதல் தேவையான அனைத்து பயிற்சிகளும், வழிகாட்டல்களும் வழங்கப்படும். அதன்மூலம் சிறந்ததொரு முன் அனுபவத்துடன் எமது பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் காலடி எடுத்துவைக்க முடியும்.

கண்டி மாவட்டத்துக்கு ஆளுங்கட்சியின் சார்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இருந்திருந்தால் பாரிய சேவைகளை முன்னெடுத்திருக்கலாம். ஆனால், எதிரணியில் இருப்பவரால் அதனை செய்யமுடியாது. அவர்களால் கோவில் மணி உள்ளிட்ட பொருட்களை மட்டுமே வழங்க முடியும். அதனை தாண்டி பாரிய அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியாது.

நாம் நாடாளுமன்றத்தில் இல்லாவிட்டாலும், எமது அமைச்சை பயன்படுத்தி, சேவைகளை செய்து வருகின்றோம். இப்பகுதியிலுள்ள வீதியை புனரமைத்துத் தருமாறு கோரியுள்ளனர். இதனையும் செய்துகொடுப்பதற்கு முயற்சிப்பேன்.

நாட்டில் இன்று பொருட்களின் விலைகள் அதகரித்துள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் அது இன்னும் அதிகரிக்கும். உக்ரைன், ரஷ்யாவுக்கிடையில் மோதல் இடம்பெறுகின்றது. இதனால் தேயிலை ஏற்றுமதியிலும் தாக்கம் ஏற்படும். இந்நிலையையும் நாம் சமாளிக்க வேண்டும்'' - என்றார்.

# புரொப்ட் பொலிஸ் நிலைய பெயர்ப்பலகை சேதம்








(கம்பளை நிருபர்)

புரொப்ட் தோட்ட பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் காரியாலயத்தின் பொலிஸ் நிலைய பெயர்ப்பலகை நேற்றுமுன்தினம் (27) இரவு இனந்தெரியாத நபர்களால் கற்கள் எறிந்து சேதமாக்கப்பட்டுள்ளது.

இதனால் கம்பளை பொலிஸ் அதிகாரி காரியலயத்தின் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை ஆரம்பித்துள்ளனர். எனினும், இதுவரை யாரும் கைதுசெய்யப்படாவில்லை.

மேலும் புரொப்ட் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

புசல்லாவ பொலிஸ் நிலையத்தின் உப பொலிஸ் காரியாலயம் அண்மையில் புரொப்ட் தோட்டப் பகுதியில் திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கொட்டகலை ஆசிரியர் கலாசாலையில் தேயிலைச் சாயம் புகைப்படக் கண்காட்சி

மலையக இளைஞர், யுவதிகளினால் மலையக தமிழ் மக்களின் வாழ்வியலை பிரதிபலிக்கும் கண்காட்சி இன்று (28) கொட்டகலை ஆசிரியர் கலாசாலையில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் சந்திரலேகா கிங்ஸ்லி தலைமையிலேயே இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. இதனையடுத்து, கண்காட்சி தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

இக்கண்காட்சிக்கு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், ஊவா சக்தி நிறுவனம், சுயசக்தி நிறுவனம் என்பன இணைந்து அனுசரணை வழங்குகின்றதுடன், ஜேர்மன் குடியரசு தூதுவர் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

# அரச பஸ்கள் இன்மையால் பயணிகள் - பரீட்சார்த்திகள் அவதி

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா காட்மோர் நெடுஞ்சாலையில் சேவையிலிருந்து வந்த அரச பஸ் கடந்த இரண்டு வாரங்களாக சேவையில் இன்மையால் பயணிகள், பாடசாலை மாணவர்கள், பாதசாரிகள் மற்றும் பரீட்சார்த்திகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

முன்கூட்டியே பயணச்சீட்டை வாங்கிய பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் தனியார் பஸ்களில் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

இது குறித்து ஹட்டன் அரச பஸ் நிலைய அதிகாரியிடம் வினவியபோது,

இந்த வீதியில் சேவையிலிருந்து வந்த அரச பஸ் சாரதி விடுமுறையிருக்கும்போது, மாற்று சாரதி இன்மையால் இந்த சேவை இடை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது சிவனொளிபாதமலை பருவ காலம் என்பதால் அங்கு சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் அங்கு அதிக பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருவதாக கூறினார்.

# பொருளாதார நிலைமை,இடைத்தரகர்களினால் மஞ்சள் - சிறுதேயிலை உற்பத்தியாளர்கள் பாதிப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலை மற்றும் இடைத்தரகர்களினாலும் இரத்தினபுரி மாவட்ட மஞ்சள் உற்பத்தியாளர்கள் மற்றும் சிறுதேயிலை தோட்ட உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டு வருவதாக அத்தொழிற்துறை சார்ந்த தொழிலாளர் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

தேயிலைத்தூள் ஒரு கிலோவின் விலை சந்தையில் 900 ரூபா முதல் 1,000 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றபோதிலும் தமக்கு ஒரு கிலோ பச்சைக் கொழுந்துக்கு 83 ரூபா மட்டுமே வழங்கப்படுவதாகவும் சிறு தேயிலை தோட்ட உரிமை யாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதற்கு முதல் பச்சை கொழுந்து ஒரு கிலோவின் விலை 100 ரூபாவுக்கும் மேல் கிடைத்தபோதிலும் தற்போது கிடைக்கும் தொகை மிகக்குறைவானது. அதிலும் கிடைக்கும் 90 ரூபாவிலும் 3 ரூபாவை போக்குவரத்து செலவுக்காக தேயிலைக் கொழுந்து சேகரிப்போர் அல்லது தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் அறவிடுவதாக கொழுந்து உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பச்சை மஞ்சள் உற்பத்தியை அதிகரிக்க ஊக்குவிப்புகள் கிடைத்து தற்போது உற்பத்தி அதிகரித்துள்ளபோதிலும் மஞ்சள் ஒரு கிலோ 150 ரூபாவிலும் குறைவான தொகையே கிடைப்பதாகவும் ஆனால், சந்தையில் மஞ்சள் தூள் 5,000 ரூபாவுக்கு மேல் விலை போவதாகவும் மஞ்சள் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தனியார் வர்த்தகர்கள், இடைத்தரகர்கள் தமக்கு போதிய விலையைப் பெற்றுத் தருவதில்லை எனவும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்

தமிழன்
www.thamilan.lk

# வணிக உலகம்
Business world

## அமானா வங்கி தனது சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை வங்கிச் சேவையை பிஸ்னஸ் ப்ளஸுடன் வலிமைப்படுத்தியுள்ளது

தனது மூலோபாயத்துக்கமைவாக கவனத்துக்கமைய பிஸ்னஸ் ப்ளஸ் தீர்வின் அறிமுகத்தினூடாக அமானா வங்கி தனது சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை வங்கியியல் பிரிவை வலிமைப்படுத்தியுள்ளது. வியாபாரங்களுக்கு தமக்கு அவசியமான நிதித்தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் மனநிம்மதியை வழங்கி தமது வியாபார வளர்ச்சியில் கவனம் செலுத்துவதற்கு அவர்களுக்கு உதவும் வகையில் அமைந்துள்ளது.

வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளுக்கான தீர்வு பற்றி கருத்துத் தெரிவிக்கையில், பொருளாதாரத்தை வலுப்படுத்தி முன்நோக்கி நகர்த்துவதில் சிறியநடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகள் முக்கிய பங்காற்றுகின்றன. இதன்காரணமாக, இந்தத் துறையில் அமானா வங்கி தொடர்ந்தும் கவனம் செலுத்துவதுடன் அண்மைக்காலத்தில் எழுந்திருந்த பாரியளவு சவால்களுக்கு மத்தியிலும் ஆதரவளித்திருந்தது. சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கு எதிர்காலத்தில் உறுதியான கூட்டாண்மை நிறுவனங்களாக வளர்ச்சியடைவதற்கு அவசியமான ஆக்கபூர்வமான மற்றும் உரிய காலப்பகுதியில் உதவிகளை வழங்கி அவற்றின் நம்பிக்கையை வென்ற பங்காளராக திகழ்கின்றோம். இந்தப் பிரிவில் ஈடுபாட்டைப் பெறுவதற்கான சிறந்த பிஸ்னஸ் ப்ளஸ் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக பிரத்தியேகமான உறவு பேண்முகாமையாளரையும் கொண்டுள்ளது. வழங்கப்படும் ஏனைய சேவைகளில் உள்ளடங்கலாக தனது இருப்பிடத்துக்கு வருகை தரும் வங்கிச்சேவை முன்னுரிமை அடிப்படையிலான கட்டணமிடல் வர்த்தக நாமம் பொறிக்கப்பட்ட காசோலைப் புத்தகங்கள், சம்பளக் கொடுப்பனவு கட்டமைப்பு payroll தீர்வுகள் மற்றும் பல அம்சங்கள் அடங்கியுள்ளன என்றார்.



அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில், நாம் பின்பற்றும் பிரத்தியேகமான வங்கியியல் மாதிரியினூடாக இடர்களையும் வெகுமதிகளையும் வாடிக்கையாளர்களுடனும் பகிர்ந்து கொள்கின்றோம். வங்கியுடன் ஈடுபாடு மற்றும் நம்பிக்கையுடனான உறவை பேண எதிர்பார்க்கும் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கு சிறந்த பொருத்தப்பாடாக இது அமைந்துள்ளது. எம்முடன் கொடுக்கல் வாங்கல்களை பேணமுன்வருமாறு இலங்கையின் சகல சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளையும் நாம் அழைப்பதுடன் எமது பிரத்தியேகமான வங்கியியல் மாதிரியை அனுபவிக்குமாறு கோருகின்றோம். அதனூடாக எமது பணித் திட்டத்துக்கமைவாக வளர்ச்சியை ஏற்படுத்துவது மற்றும் வாழ்வுக்கு வளமூட்டுவது என்பதை எய்த எம்மால் உதவக்கூடியதாக இருக்கும் என்றார்.

சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளின் பரந்தளவு நிதித்தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையிலமைந்த தீர்வுகள் மற்றும் சேவைகளை அமானா வங்கி வழங்குகின்றது. இதில் மூலதன செலவு நிதியளிப்பு, தொழிற்படு மூலதன நிதியளிப்பு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நிதியளிப்பு வியாபார சேவைகள், இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் லீசிங் நிரந்தர மேலதிகப்பற்று காசோலை, விலைக்கழிவு மற்றும் பண சேகரிப்பு தீர்வுகள் மற்றும் முதலீடுகள் போன்றன அடங்குகின்றன.

அமானா வங்கி பிஸ்னஸ் ப்ளஸ் இரண்டு அங்கத்துவ பிரிவுகளில் வழங்கப்படுகின்றன. அவற்றில் பிஸ்னஸ் ப்ளஸ் சில்வர் மற்றும் பிஸ்னஸ் ப்ளஸ்கோல்ட் ஆகியன அடங்கியுள்ளன. அமானா வங்கி பிஸ்னஸ் ப்ளஸ் அங்கத்துவம் பற்றிய மேலதிக தகவல்களை வங்கியின் இணையத்தளமான www.amanabank.lk என்பதற்கு விஜயம் செய்து வங்கியின் ஹொட்லைன் 011 7 756 756 இலக்கமான உடன் தொடர்பு கொண்டு அல்லது வங்கியின் எந்தவொரு கிளைகளுக்கும் விஜயம் செய்து பெற்றுக்கொள்ள முடியும்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கிபி.எல்.சி. திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக்கொண்டியங்கும் IsDB குரூப் பிரதான பங்காளராக திகழ்வதுடன் வங்கியின் பங்குகளை தன்வசம் கொண்டுள்ளது. 'AAA'குரூப் தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல் தேசிய அபிவிருத்தி நிதிச்சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. செப்டெம்பர் மாதத்தில் அமானா வங்கியின் நீண்டகால தரப்படுத்தலை 'AAA' உறுதியான தோற்றப்பாட்டுடன் வழங்கியிருந்தது அமானா வங்கி. வேறு எவ்வித துணைநிறுவனங்களையோ அங்கத்துவ அல்லது இணைநிறுவனங்களையோ கொண்டிருக்கவில்லை.

## இலங்கையில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை இல்லாமல் செய்யும் நோக்கில் SCC அறிமுகம் செய்யப்பட்டுள்ளது

### முதன்முறையாக CPA உடன் SCC இணைந்து சிறுவர் பாதுகாப்பு நலன்பேணல் தூதுவர்கள் நியமனம்





சிறுவர் பாதுகாப்பு ஒன்றிணைவு CPA SCC உடன் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை நிறுத்தும் நிதியம் SCC இணைந்து சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில், தேசிய திட்டமாக #NOஓபி என்பதை பெப்ரவரி 21 ஆம் திகதி அறிமுகம் செய்துள்ளது.

இந் நிகழ்வின்போது, இலங்கையில் முதன் முறையாக சிறுவர் பாதுகாப்பு நலன்புரி தூதுவர்கள் நியமனமும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. புகழ்பெற்ற பாடகி உமாரா சிங்ஹவன்ச மற்றும் 'Voice 2021 வெற்றியாளர் ஹரித் விஜயரட்ன மற்றும் ஆதித்யா வெலிவத்த ஆகியோர் இந்த நிகழ்வின்போது விசேட பாடல் ஒன்றையும் அறிமுகம் செய்திருந்தனர். சிறுவர் துன்புறுத்தலுக்கு ஆளாகியவர்களின் துன்பங்களின்மீது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்த பாடல் அமைந்துள்ளது.

இந்த அறிமுக நிகழ்வில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை நிறுத்தும் நிதியம் SCCஇணைஸ்தாபக தவிசாளரும் சிறுவர் பாதுகாப்பு ஒன்றிணைவு SCCஇன் இணைக் குழுத்தலைவருமான வைத்தியர் துஷ்விக்ரம நாயக்க கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை சமூகத்தில் அரிதளவில் பேசப்படும் விடயமாகசிறுவர் துன்புறுத்தல் என்பது அமைந்துள்ளது. வருடங்களுக்கு முன்னர் சிறுவர் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் மாநாட்டில் இலங்கை இதற்கு உறுதியளித்திருந்த போதிலும் காலப்போக்கில் இந்த விடயம் தொடர்பில் எவ்விதமான முன்னேற்றமும் எய்தப்படவில்லை. CPA உடன் SCC இணைந்து உறுதியான இந்த விடயம் தொடர்பில் வலியுறுத்தும் பணிகளைஆரம்பித்துள்ளது. கடந்தமாத காலப் பகுதியில் பத்து பிள்ளைகள் உடல்ரீதியாகவும் பாலியல்ரீதியாகவும் துன்புறுத்தப்பட்டுள்ளதுடன் கொலை செய்யப்பட்டுமுள்ளனர். ஆனாலும், இந்த நெருக்கடியை தீர்வுக்குகொண்டு வருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பினரால் எவ்விதமான அர்த்தமுள்ள நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. நிலைபேறான அபிவிருத்தி இலக்கு SDG என்பதன் பிரகாரம் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கு உறுதியளித்துள்ள ஒரே தெற்காசிய நாடாக இலங்கை காணப்படுகின்றது. இருந்தபோதிலும், சிறுவர்களுக்கு உலகளாவிய ரீதியில் பாதுகாப்பு குறைந்த நாடுகளில் ஒன்றாக அமைந்துள்ளது. நாம் இணைந்த சமூகசெயற்பாட்டாளர்களாக இந்தவிடயம் தொடர்பில்#NOஓபி ஊடாகபணியாற்றுகின்றோம். சிறுவர்களின் தவறான நடத்தைகளை சீர்செய்வதற்கு வன்முறையை பின்பற்றுவது தீர்வாகாதுஎன்றார்

SCC உடன் SCC இனால் #NOஓபி என்பது அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன் சிறுவர்களுக்கு எதிரான தண்டனைகளை இல்லாமல் செய்வது மற்றும் பெப்ரவரி மாதம் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொள்வதும் இலக்காக அமைந்துள்ளது. இந்தத் திட்டத்தை சிறுவர்கள்முன்னெடுப்பதுடன் அவர்களுக்கான வழிகாட்டல்களை நலன்பேண் தூதுவர்கள் மற்றும் இலங்கையின் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் போன்றோர் வழங்குவார்கள்.

இலங்கையில் சிறுவர் துன்புறுத்தல்கள் அதிகரித்துச் செல்லும்நிலையில் சிறுவர்களுக்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் சிறுவர் பாதுகாப்பு நலன்பேணல் தூதுவர்கள் தன்னார்வ அடிப்படையில் முன்வந்து கைகோர்த்துள்ளனர். இந்தப் பிரசாரத் திட்டத்தின் பரப்பும் நடவடிக்கைகளில் இவர்கள் முக்கிய பங்காற்றுவார்கள். இந்த #NOஓபி திட்டத்தில் அங்கம் பெறும் தூதுவர்களில் சாரங்க திசாசேகர தினக்ஷி பிரியசாத் உமாராசின் ஹவன்சஹரித் விஜயரட்ன ஆதித்யா வெலிவத்த வைத்தியர் விசாகேச சந்திரசேகரம் கலாகீர்த்தி நிரஞ்ஜனி சண்முகராஜா, அபிஷேகா பெர்னாண்டோ கௌஷல்யா பெர்னாண்டோ மற்றும் ஒடாரா குணவர்தன ஆகியோர் அடங்குகின்றனர்.

SCC இன் வர்த்தக நாமத் தூதுவரும் நடிகருமான சாரங்க திசாசேகர கருத்துத் தெரிவிக்கையில், சிறுவர்களின்மீது ஒரு போதும் கை ஓங்கக் கூடாது. அவ்வாறு மேற்கொண்டாலும் அது தொடர்பில் நாம் காலப்போக்கில் கவலைகொள்வோம். சிறுவர்கள் பெரியவர்களின் நடத்தைகளை பின்பற்றி செயற்படுபவர்கள் என்பதையும் நாம்கவனத்தில் கொள்ளவேண்டும். பெரியவர்கள் செய்யும் எந்த விடயத்தையும் மேற்கொள்வது பரவாயில்லை என அவர்கள் கருதுகின்றனர். நாம் எமது பிள்ளைகளுடன் பின்பற்றும் அதே ஒழுக்கமான நடத்தைகள் அவர்களின் பெற்றோர் பருவத்தில் அவர்களால் பின்பற்றப்படக்கூடும். எனவே, சரியான முறையில் பிள்ளைகளை வளர்ப்பது முக்கியமானது என்பதுடன் அடுத்த தலைமுறைக்கும் மோசமான பெற்றோர் பண்புகள் கடந்து செல்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். சிறுவர்களை அடிப்பது என்பது அவர்களுக்கு எதிர்மறையாக நினைவுகளை நிலைத்திருக்கச் செய்து விடும். கொடிய மற்றும் கொடூரமான சம்பவங்களை அவர்கள் அதிகளவு நினைவில்வைத்திருப்பார்கள். அடித்து துன்புறுத்துவதற்கு பதிலாக நாம் அன்பை காண்பித்து அவர்களுக்கு நன்மை மற்றும் தீமைகளை வேறுபடுத்தி காண்பிக்க வேண்டும். பெற்றோர்கள் எனும் வகையில் அவர்களுக்கு வரையறைகளுடன் சுதந்திரம் வழங்க வேண்டும். அதனூடாக அவர்களுக்கு சரியானது தவறானது போன்றவற்றுக்கிடையிலான வேறுபாட்டை உணர்த்தக்கூடியதாக இருக்கும் என்றார்.

இலங்கையில் சிறுவர் உரிமைகளை பேணி பாதுகாத்து ஊக்குவிப்பதில் அர்ப்பணிப்பான முதலாவதுSCC ஐ நிறுவும் பணிகளை SCC மற்கொண்டுள்ளது. இலக்கு வைக்கப்பட்ட விடயங்களை நோக்கி உறுதியாக செயலாற்றுவது என்பதனூடாக சிறந்த வெற்றியை எய்தக்கூடியதாக இருக்கும் என்பதுடன் சம்பந்தப்பட்ட அரசநிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதிலும் பங்களிப்பு வழங்கும்.

சிறுவர் பாதுகாப்பு என்பது திரண்ட சமூகப்பொறுப்புணர்வு செயற்பாடாக அமைந்திருப்பதுடன் SCC/CPA இனால் தொடர்ந்தும் சுயஆளுகையுடைய நடத்தை ஒழுக்கக்கோவை ஒன்று கட்டமைக்கப்பட்டு சிறுவர் பாதுகாப்புதொடர்பானஉரிமைகளைபேணி ஊக்குவித்து சமூகத்தில் மீளதாக்கத்துக்கு உள்ளாவதைதவிர்க்கும்நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படும். இந்த நடவடிக்கையில் தம்மை ஈடுபடுத்த ஆர்வமுள்ளவர்கள் www.stopchildcruelty.com எனும் இணையத்தளத்தைபார்வையிடமுடியும் என்பதுடன் சுய Facebook பக்கத்தில் www.facebook.com/stopchildcruelty அல்லது info@stopchildcruelty.com எனும் மின்னஞ்சல் வாயிலாக தொடர்பை ஏற்படுத்தலாம்.

திகதி 26.02.2022
சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4690
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 11,399,330.00
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 8 3 9 4 3 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 48,538,083.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2985
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,815,420.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 13 47 68 70
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,452,898.40

Mega POWER மெகா பவர் கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1038
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,372,060.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 238,166,538.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து E
சுப்பர் இலக்கம் 05
வெற்றி இலக்கங்கள் 21 24 26 78

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 720
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,947,200.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 22 45 48 69
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,323,690.00

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0031
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,839,980.00
இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 09 34 40 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,621,548.60

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1216
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,151,300.00
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 8 4 5 9 0 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,207,989.20

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

## எசட்லைன் வழங்கும் 'லிய திரிய'விடமிருந்து பாதுகாப்பாக வாகனம் செலுத்தும் நிகழ்ச்சி








எசட்லைன் புதிதாக அறிமுகப்படுத்திய 'லிய திரிய'வைக் கொண்டாடும் நோக்கில் மாத்திவெலவில் உள்ள ப்ரோரைட் சேஃப்டி ட்ரைடிங் அகடமியில் பாதுகாப்பாக வாகனம் செலுத்தல் பற்றிய நிகழ்ச்சி நடத்தப்பட்டது. முழு நாள் நடைபெற்ற இந் நிகழ்வில் கலந்துகொண்ட பெண்களுக்கு வாகனம் செலுத்துவது குறித்த உத்திகள் பற்றிய விரிவான பயிற்சிகள், வீதிப் பாதுகாப்பு நடைமுறைகள், வீதி ஒழுங்குகள் பற்றிய நடைமுறை மற்றும் கோட்பாட்டு ரீதியான விடயங்கள் பற்றிய எழுத்துப் பரீட்சை நடத்தப்பட்டதுடன், வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பெண்கள் இயங்குவதற்குத் தேவையான நிதித் தீர்வுகளை வழங்குவதில் கவனம் செலுத்தும் எசட்லைனின் 'லிய திரிய' திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இந்த நிகழ்வும் இணைந்துள்ளது. இதுபற்றி மேலும் விபரித்த எசட்லைன் லீசிங் நிறுவனத்தின் வர்த்தக அபிவிருத்திக்கான பிரதி பிராந்திய முகாமையாளர் திலான் கலன்சூரிய குறிப்பிடுகையில்,

"பெண்கள் சமூகத்தில் தாயாக, மனைவியாக, தொழில்முயற்சியாளர்களாக, துறைசார் நிபுணர்களாக, வர்த்தகத் தலைவர்களாகப் பல்வேறு பங்குகளை வகிக்கின்றனர். அவர்கள் தமது போக்குவரத்துக்கு சொந்த போக்குவரத்து சாதனங்களை வைத்திருப்பது இன்றைய கொவிட்-19 சூழலில் பாதுகாப்பையும், வசதியையும் உறுதி செய்வதோடு, அவர்களின் வணிகங்களைக் கட்டியெழுப்புவது, கற்பது, குடும்பத்தை அழைத்துச் செல்வது போன்றவற்றில் முக்கியமாக அமைகிறது. இதற்கான சுதந்திரம் மற்றும் வலுவூட்டல் என்பது தனிப்பட்ட நபராக நன்மையைக் கொண்டுவருவதற்கும் அப்பால் சமூகத்துக்கும் நன்மையை ஏற்படுத்துகிறது" என்றார்.

எசட்லைன் நாடு முழுவதிலும் இது போன்ற நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதற்கு உத்தேசித்திருப்பதுடன், இது பெண்களை மேம்படுத்தி, பலப்படுத்துவதுடன் இதுபோன்ற ஏனைய நிகழ்ச்சிகளுக்கும் முன்னோடியாக அமையும்.

வாகனங்களுக்கு நிதியுதவிகளை அளிப்பதற்கும் அப்பால் 'லிய திரிய' வின் சிறப்பு அம்சங்கள் குறித்தும் அவர் மேலும் விளக்கமளித்தார். இது இலவச ஆயுட் காப்புறுதியை வழங்குவதுடன், 42 மாதங்கள் வரை நீடிக்கப்பட்ட மீள்கொடுப்பனவு வசதி, தனிப்பயனாக்கப்பட்ட வட்டி, குறைந்த ஆவணங்களுடன் விரிவான சேவை போன்றவற்றை கொண்டுள்ளது. மிக முக்கியமாக, இது மேல் மாகாணத்துடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல், தேவைப்படும் இடங்களில் 54 எசட்லைன் கிளைகளின் ஊடாகவும் அணுகலை உறுதிசெய்கிறது.

இந்த முயற்சியானது, பெண் தொழில்முயற்சியாளர்களின் மேம்பாட்டில் கவனம் செலுத்தும் டேவிட் பீரிஸ் குழுமத்தின் வெற்றிபெற்ற பெண்களை பலப்படுத்தும் திட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையில் அமைந்துள்ளது. மேலதிக தகவல்களை 0114700100 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அல்லது www.assetline.lk என்ற இணையத்தளத்துக்கு விஜயம்செய்து பெற்றுக் கொள்ளவும்.

# வவுனியா தரணிக்குளத்தில் காணியை மீட்டுத்தருமாறு கோரி பொதுமக்கள் வீதியை மறித்து போராட்டம்







**(வவுனியா நிருபர்)**

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தரணிக்குளம் பொதுமக்கள் நேற்று முன்தினம் (26) தரணிக்குளம் பிரதான வீதியினை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2001ஆம் ஆண்டு தரணிக்குளம் பகுதியில் 1/2 ஏக்கர் காணி வீகிதம் 250 குடும்பத்தினர் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டனர். அதன்பின்னர் அப்பகுதி மக்கள் அவர்களின் வாழ்வதாரத்தினை மேம்படுத்துவதற்காக சட்டவிரோதமான முறையில் 2003ஆம் ஆண்டு தரணிக்குளம் பிற்பகுதியில் காடாக காணப்பட்ட புதியநகர் பகுதி காட்டினை வெட்டி விவசாயம் மேற்கொண்டிருந்ததுடன், தற்போது 612 குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், 2014ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டத்தின்கீழ் பேராறு நீர் வழங்கல், வடிகாலமைப்பு திட்டத்தில் உள்வாக்கப்படும் காணிகளுக்குப் பதிலாக முதலியார்குளத்தில் 15 ஏக்கர் அரச காணியினையும் பத்தியார்குளத்தில் 120 ஏக்கர் அரச காணியினையும் கற்குளம் கிராமத்தில் 40 ஏக்கர் அரச காணியினையும் நெற்செய்கைக்காக வழங்குவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் மாவட்ட காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுவினால் அனுமதி வழங்கப்பட்டு பேராறு நீர்த்தேக்கமும் நிர்மாணிக்கப்பட்டது.

கற்குளம் கிராமத்தில் 40 ஏக்கர் அரச காணியினை வழங்காது அவர்களை தரணிக்குளம் புதியநகர் பகுதியில் மேட்டுக்காணியில் குடியேற்றுவதற்கு பிரதேச செயலகத்தினர் நடவடிக்கையினை முன்னெடுத்து வருகின்றனர். இதன் காரணமாக அங்கு வசிக்கும் 612 குடும்பத்தினர் பாதிப்படைந்துள்ளனர். அரசாங்கத்தினால் பேராறு நீர்த்தேக்கத்தில் கீழ் வசித்தவர்களுக்கு நெற்செய்கைக்கான காணியை வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளபோதிலும் தற்போது 612 குடும்பத்தினர் வசிக்கும் மேட்டுக்காணியினை பிரதேச செயலகத்தினர் வழங்க முன்வந்துள்ளனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இக்கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தரணிக்குளம் பிரதான வீதியினை வழிமறுத்த பொதுமக்கள் இருப்பதற்கு வீடு காணி இல்லை எமது காணியினைப்பிரித்து இன்னொருவருக்கு வழங்குவது சரியா? , நீங்களே எமது நிலத்தை தந்து விடுங்கள் இல்லையெனில் நாங்கனே அதனை எடுக்க வேண்டி வரும் , வீடு இல்லை காணி இல்லை 60 ஏக்கர் காணியியை மீட்டுத்தா , 1/2 ஏக்கருக்குள் மீள்குடியேற்றம் செய்யும் பொழுது 250 குடும்பம் இன்று 570 குடும்பம் நாம் எங்கு சென்று வசிப்பது போன்ற பல்வேறு பதாதைகளை ஏந்தியவன்னம் சுமார் 1 மணிநேரம் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

# சாவகச்சேரியில் எட்டு வீதிகளை புனரமைக்க விசேட நடவடிக்கை



**(சாவகச்சேரி செய்தியாளர்)**

சாவகச்சேரி நகரசபையின் 2021ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி ஒதுக்க நிதியிலிருந்து நகரசபை எல்லைக்குள் எட்டு வீதிகள் மற்றும் நகர வளைவு ஆகியன அமைக்கப்படவிருப்பதாக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நகரசபையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற மாதாந்த அமர்வின்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;,

2021ஆம் ஆண்டிற்கான நகரசபையின் அபிவிருத்தி ஒதுக்க நிதியிலிருந்து எமது சபை எல்லைக்குட்பட்ட லிகோரியார் ஆலய வீதி, இத்தியடிப் பிள்ளையார் ஆலய வீதி, பாலையடி வீதி முதலாம் ஒழுங்கை, சண்முகம் வீதி இடதுபக்க முதலாம் ஒழுங்கை, சங்கத்தானை பெருங்குள வைரவர் கோவில் மூன்றாம் ஒழுங்கை, முதலியார் ஒழுங்கை, வேதாந்த மட வீதி இரண்டாம் ஒழுங்கை மற்றும் கலை மன்ற வீதி இரண்டாம் பகுதி ஆகிய வீதிகளுடன் நகர நுழைவாயில் பகுதிகளான மீசாலை அல்லது நுணாவில் பகுதியில் நகர வளைவும் அமைக்கப்பட இருப்பதாக மேலும் அவர் தெரிவித்தார்.

# நல்லூர் இராசதானியின் தோரண வாசல் புனருத்தாரண பணிகளின் பின்



**(யாழ் நிருபர்)**

யாழ்ப்பாணம் - நல்லூர் இராசதானியின் தோரண வாசல் புனருத்தாரண பணிகளின் பின்னர் எவ்வாறு காட்சி அளிக்கும் என்பது தொடர்பிலான மாதிரி ஒளிப்படங்களை யாழ். மாநகர சபை முதல்வரின் ஊடக பிரிவு வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - நல்லூர் இராசதானியின் தோரணவாசல் புனருத்தாரணம் செய்வதற்கான ஆரம்ப நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அன்று மதியம் 12 மணிக்கு யாழ்ப்பாண மரபுரிமையத்தின் தலைவர் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், மாநகர ஆணையாளர் இ.ஜெயசீலன், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ம.மயூரன், தேசிய கலாசர நிலையத்தின் யாழ். மாவட்ட செயற்றிட்ட பணிப்பாளர் ஆனந், தொல்பொருள் திணைக்கள யாழ் பிராந்திய உதவிப் பணிப்பாளர் நளின் வீரரத்ன, நல்லூர் பிரதேச செயலாளர், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உபதலைவர் பேராசிரியர் ரவிராஜ், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலையில் நான்கு பேர் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு



பேரா. சி.சண்முகதாஸ் | பேரா. சி.சிவேசன் | பேரா. பி. அபிமன் | பேரா. த.திருவரன்

**(யாழ் நிருபர்)**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் நால்வர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த இருவரும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், பொறியியல் பீடத்தைச் சேர்ந்த ஒருவருமாக நான்கு சிரேஷ்ட விரிவுரையாளர்களை பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று (27) ஞாயிற்றுக்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக் கமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின்படி, வணிக முகாமைத்துவ பீடத்தின் சந்தைப்படுத்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி திருமதி சிவாணி சண்முகதாஸ், கலாநிதி சி.சிவேசன் ஆகியோர் சந்தைப்படுத்தலில் பேராசிரியர்களாகவும், விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பி.அபிமன் இரசாயனவியலில் பேராசிரியராகவும், பொறியியல் பீடத்தின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் துறையின் தலைவரும், சிரேஷ்ட விரிரிவுரையாளருமான கலாநிதி த.திருவரன் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

# சிறப்பாக இடம்பெற்ற மகாஜனக் கல்லூரியின் கணித – விஞ்ஞானப் போட்டி பரிசளிப்பு விழா




**(யாழ் நிருபர்)**

மகாஜனக் கல்லூரியின் கணித, விஞ்ஞானப் போட்டி பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது.

மகாஜனக் கல்லூரி முன்னாள் கணித பாட ஆசிரியை அமரர் சௌபாக்கியவதி இராஜரட்ணம் நினைவாக வடமாகாண ரீதியாக தரம் 8 மாணவர்களுக்கு நடத்தப்பட்ட மகாஜனக் கல்லூரி கணித, விஞ்ஞானப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் இணுவில் அக்ஷய மஹால் மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான அங்கஜன் இராமநாதன் கலந்து சிறப்பித்தார். இப்போட்டிக்கான அனுசரணையை அமரர் சௌபாக்கியவதியின் மகனும் பிரபல சட்டத்தரணியும் தொழிலதிபருமான இராஜரட்ணம் செல்வஸ்கந்தன் வழங்கியிருந்தார். ஒவ்வொரு பாடங்களிலும் முதலாமிடம் பெற்ற மாணவருக்கு 40,000 ரூபாவும் இரண்டாமிடம் பெற்ற மாணவருக்கு 30,000 ரூபாவும் மூன்றாமிடம் பெற்ற மாணவருக்கு 20,000 ரூபாவும் வழங்கப்பட்டன.

மேலும் ஆறுதல் பரிசில்களாக மூவருக்கு தலா 15,000 ரூபாவும் நால்வருக்கு தலா 10,000 ரூபாவும் விஞ்ஞானப் பாடத்தில் மேலும் எழுவருக்கு தலா 5,000 ரூபாவும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மகாஜனக் கல்லூரியிலிருந்து உயர்தரப் பரீட்சையில் 3 ஏ சித்தி பெற்ற மாணவர்களுக்கும் மருத்துவபீடத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கும் தலா ரூபா 40,000 வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# யாழில் மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் நாய் வளர்ப்போர் கட்டாயமாக பதிவுசெய்யும் நடைமுறை விரைவில் அமுல்

**(யாழ் நிருபர்)**

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நாய் வளர்ப்போர் கட்டாயமாக நாய்களை பதிவுசெய்யும் நடைமுறையை விரைவில் அமுல்படுத்தப்பட உள்ளதாக யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்

அண்மையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன், மருத்துவ பீடத்தின் ஏற்பாட்டில் யாழ். ஆரோக்கிய நகரம் எனும் தலைப்பிலான கருத்தரங்கத்தில், வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாய்களை கட்டுப்படுத்துவதில் யாழ். மாநகர சபை பிரச்சினையை எதிர்நோக்குகிறது. அதாவது, தெரு நாய்களை மாநகர சபை பிடித்து வர முடியாது. அதேபோல் அவற்றை வைத்து பராமரிக்கக்கூடிய சிறந்த இடங்களும் தற்போதைய நிலையில் இல்லை.

ஆனால், நாங்கள் தற்பொழுது ஒரு நடைமுறையினை ஏற்படுத்தவுள்ளோம். வீட்டில் நாய்களை வளர்ப்போர் கட்டாயமாக மாநகரசபையில் அதற்குரிய அனுமதிப்பத்திரத்தை பெற்று வளர்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஏழாலை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு அருகில் அநாதரவாக நின்ற மோட்டார்சைக்கிள் மீட்பு

**(யாழ் நிருபர்)**

ஏழாலை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு அருகில் அநாதவராக காணப்பட்ட மோட்டார்சைக்கிள் ஒன்றினை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த ஆலயத்திற்கு அருகில் கடந்த வியாழக்கிழமைமுதல் மோட்டார்சைக்கிள் ஒன்று அநாதரவான நிலையில் காணப்படுவதாகவும், சந்தேகத்துக்கு உரிய முறையில் நிறுத்திவைக்கப்பட்டு உள்ளதாகவும் சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் (25) அவ்விடத்திற்கு சென்ற பொலிஸார் மோட்டார்சைக்கிளை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டுசென்றதுடன் , மோட்டார்சைக்கிளில் உரிமையாளரை கண்டறிய விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தென்மராட்சியில் இருவேறு வாள்வெட்டு சம்பவங்களில் இருவர் படுகாயம்

**(சாவகச்சேரி நிருபர்)**

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (26) இரவு இடம்பெற்ற இருவேறு வாள்வெட்டுச் சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் சனிக்கிழமை இரவு வேலை முடித்து வீடு திரும்பிய இளைஞனை மறைந்திருந்த குழுவொன்று வாளால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளது.

இதில் நாவற்குழி தெற்கு பகுதியைச் சேர்ந்த 24 வயதான சுவின்சன் என்ற இளைஞன் கை மற்றும் முதுகுப் பகுதிகளில் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

அதேசமயம் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலி மத்தி பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் 36 வயதான கோணேஸ்வரன் என்ற நபர் தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இரண்டு அசம்பாவிதங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நாட்டை ஆளும் ஜனநாயக முறைமையிலிருந்து நாங்கள் விலகவில்லை; அதனால் கிடைத்துள்ள சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தாதீர்கள்!

## மகாவலி ரண்பிம காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு







நாட்டை ஆட்சி செய்யும்போது, பொதுமக்களின் சுதந்திரம் மற்றும் எதிர்பார்ப்புகளை உறுதி செய்யும் ஜனநாயக முறைமையிலிருந்து விலகப்போவதில்லை - என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இருப்பினும், அதனால் கிடைக்கும் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டாமென்று அனைத்துத் தரப்பினரிடமும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

ஒரு இலட்சம் மகாவலி ரண்பிம காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் நிகழ்வு, நேற்றுமுன்தினம் (26) முற்பகல், எம்பிலிபிட்டிய மகாவலி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்துக்கமைய, சிக்கல்களற்ற காணிகளின் உரித்துரிமையை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், ரண்பிம காணி உறுதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில், சிக்கலற்ற ஒரு இலட்சம் காணிகளின் உரித்துரிமையை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, 35,000 காணி உறுதிப் பத்திரங்கள் 10 வலயங்களைச் சேர்ந்த விவசாய மக்களுக்கு வழங்கப்படுகின்றன. அடுத்த ஆண்டு இறுதிக்குள் மகாவலி பிரதேசங்களில் வசிக்கும் விவசாய மக்கள் அனைவருக்குமான காணி உறுதிப்பத்திரங்களை வழங்கி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

காணியின் சட்டபூர்வ உரிமை கிடைப்பதன் மூலம், அந்தக் காணியை குடும்ப உறுப்பினரொருவரின் பெயருக்கு மாற்றம் செய்தல், பாதுகாப்புக் கருதி நிதி நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுதல் போன்ற பல அனுகூலங்களைக் காணி உரிமையாளர் பெறுவார்.

ரண்பிம காணி உறுதி வழங்கும் நிகழ்வைக் குறிக்கும் வகையில், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரால் 30 பேருக்கான காணி உறுதிகள் வழங்கப்பட்டன.

அந்நியச் செலாவணி பற்றாக்குறையானது, இன்று நாம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும். கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக, சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளால் கிடைக்கப்பெறும் செலாவணி இழப்பு, இதற்கு ஒரு முக்கிய காரணமாகும். முந்தைய அரசாங்கங்கள் பெற்றிருந்த கடன்களை வட்டியுடன் செலுத்தவேண்டி ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகள் தனது அல்லது தனது அரசாங்கத்தின் தவறுகளால் ஏற்பட்டவை அல்லவென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தற்போது நிலவும் சவால்களுக்கு முகங்கொடுக்க, எதிர்க்கட்சிகளும் பொதுமக்களும், அரசாங்கமும் இணைந்துப் பணியாற்றவேண்டிய தேவையை எடுத்துரைத்த ஜனாதிபதி, இடையூறு விளைவிக்கும் வேலைநிறுத்தப் போராட்டங்கள், பொய்ப் பிரசாரங்கள் போன்றவற்றை எந்தவொரு பொறுப்பான தரப்பிடமிருந்தும் எதிர்பார்க்கவில்லை - என்றார்.

20 வருடங்களாக வாழ்ந்து வந்தும், அந்தக் காணியின் சட்டபூர்வ உரிமையற்றிருக்கும் மகாவலி மக்களுக்கு அந்த உரிமையைப் பெற்றக்கொடுக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியை அரசாங்கம் என்ற வகையில் உணர முடிகின்றது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இரசாயனப் பசளை இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அடுத்து, புரட்சியாளர்கள் என்று சொல்லிக்கொள்ளும் கட்சியினர், விவசாய மக்களை வீதிக்கு இறக்கினர். பயிர்ச் செய்த வயல்களுக்கு தீயிட்டுப் பயிர்களை அழித்துச் செய்த போராட்டங்கள் என்பன விவசாயி மீதுள்ள அன்பால் செய்யப்பட்டவை அல்லவென்றும் இதன்மூலம் அவர்கள் அரசியல் இலாபம் பெறவே முயற்சித்தனர் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

காணி உரித்துரிமையை வழங்குவதால் மாத்திரம் மகாவலி விவசாய மக்களின் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்வை எட்டப்போவதில்லை என்று தெரிவித்த அமைச்சர் சமல் ராஜபக்ஷ, தேசத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு, அனைத்து விவசாயக் காணிகளிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்வது விவசாய மக்களின் கடமையென்றும் தெரிவித்தார்.

மகாவலி வலயத்தின் மூன்றாவது தலைமுறையினரை தொழில் முயற்சியாளர்களாக மாற்றும் பொறுப்பை நிறைவேற்ற அரசாங்கம் தயாராக இருக்கின்றதென்றும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

மகாவலி வலய விவசாயிகளின் காணிகள் மாத்திரமல்ல, உயிர்களைப் பறிகொடுக்கும் காலத்தை மாற்றியதும் ராஜபக்ஷர்களே என்று குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத், வாவிகள், அணைக்கட்டுகளை நிர்மாணித்து மகாவலிக்கு உயிரூட்டி, இரண்டு போகங்கள் மாத்திரமன்றி மூன்றாவது போகமென மேலதிக போகமொன்றைச் செய்வதற்கான வசதிகளை வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்றும் குறிப்பிட்டார்.

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## திருட்டில் ஈடுபட்டிருந்த மூவரில் ஒருவர் கைது

(யாழ். நிருபர்)

இளவாலை பொலிஸ் பிரிவில் வீட்டிலுள்ளவர்கள் வெளியில் சென்றிருந்தவேளை திருட்டில் ஈடுபட்டிருந்த மூவரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் - என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டு நகைகளை அடகு மற்றும் விற்பனை செய்து பணம் வழங்கி உதவினர் என்ற குற்றச்சாட்டில் தந்தையும் மகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை வறுத்தவிளான் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டார். அவருக்கு உதவிய குற்றச்சாட்டில் 53 வயதுடைய தந்தையும் 36 வயதுடைய மகளும் கைதுசெய்யப்பட்டனர்.

இளவாலை பொலிஸ் பிரிவில் அண்மைக்காலமாக பட்டப்பகலில் வீட்டில் உள்ளவர்கள் வெளியில் செல்லும் வேளையில் வீடுடைத்து திருட்டுச் சம்பவங்கள் ஏழுக்கு மேற்பட்டன இடம்பெற்றன.

அவை தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

உதவிப் பொலிஸ் பரிசோதகர்களான நிதர்சன், கலாவினோதன் ஆகியோரின் பிரிவினரே இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 3 தங்கப்பவுண் நகைகள் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர்கள் மூவரும் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டனர்.

## புத்தளத்தில் கைதி தப்பியோட்டம்

(ஜூட் சமந்த)

புத்தளத்தில் சிறைக் கைதியொருவர் தப்பியோடிய சம்பவம் குறித்து தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. புத்தளம் சிறைச்சாலைக்கருகில் வைத்து நேற்றுமுன்தினம் கைதியொருவர் தப்பிச்சென்றுள்ளார்.

திருட்டுச் சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நபரே இவ்வாறு தப்பிச்சென்றுள்ளார். அவரை புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்தியுள்ளனர். அந்த நபரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லும் வழியில் அந்தக் கைதி தப்பியோடியுள்ளார். இந்தக் கைதி புத்தளம், தில்லையடி பகுதியைச் சேர்ந்தவரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தப்பியோடிய கைதியை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், தீவிர விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.





அரலகங்வில, பொரலந்தை ஆகிய பொலிஸ் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சிகளை முடித்து வெளியேறிய 806 உத்தியோகத்தர்களுக்கு சின்னம் அணிவிக்கும் நிகழ்வு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் தலைமையில் பொரலந்தையில் அண்மையில் நடைபெற்றது.

## சென்னையிலுள்ள இலங்கையின் துணை உயர்ஸ்தானிகராலயத்தால் பிறப்பு மற்றும் குடியுரிமைச் சான்றிதழ்கள் வழங்கல்








சென்னையிலுள்ள இலங்கையின் துணை உயர்ஸ்தானிகராலயம் கடந்த 15 மற்றும் 23ஆம் திகதிகளில் சான்சரி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட தூதரக முகாம்களில் 83 பிறப்புச் சான்றிதழ்களையும் 208 குடியுரிமைச் சான்றிதழ்களையும் வழங்கியுள்ளது.

2022 பிப்ரவரி 15ஆம் திகதி நடைபெற்ற விசேட முகாமில் இராமநாதபுரத்திலுள்ள மண்டபம் மற்றும் திண்டுக்கல் புதுப்பட்டி, கோபால்பட்டி, அடியனூத்து ஆகிய இடங்களில் உள்ள இலங்கையர்களிடமிருந்து 83 பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு 64 குடியுரிமைச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 2022 பெப்ரவரி 23ஆம் திகதி தமிழ்நாட்டின் கும்மிடிப்பூண்டி மற்றும் புழலைச் சேர்ந்த இலங்கையர்களுக்கு 208 குடியுரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சென்னையிலுள்ள இலங்கையின் துணை உயர்ஸ்தானிகராலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட தூதரக முகாம்கள் தென்னிந்தியாவில் வாழும் இலங்கையின் புலம்பெயர் சமூகத்திற்கு, குறிப்பாக, பிறப்பு மற்றும் குடியுரிமைப் பதிவுகளில் குறிப்பிடத்தக்க சேவையை வழங்குகின்றன. எனவே, இந்த முகாம்கள் அனைத்து சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களையும் பின்பற்றி தூதரகத்தால் தொடர்ந்தும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

## தர்கா நகர் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் 105ஆவது வருட பூர்த்தியும் பட்டமளிப்பு விழாவும்






தர்காநகர் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் 105ஆவது வருட பூர்த்தி விழா விழாவும் ஏழாவது பட்டமளிப்பு விழாவும் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் நிர்வாக சபைத் தலைவர் அல்ஹாஜ் மஸா ஆலிம் தலைமையில் நடைபெற்றது.

அரூஸிய்யதுல் காதிரிய்யாவின் ஆன்மீக தலைவர் சங்கைக்குரிய கலாநிதி தைக்கா அஹ்மத் நாஸிர் ஆலிம், தர்காநகர் நஜீப் ஹாஜியார், கல்வி நிலைய ஸ்தாபகர் நஜீப் பின் அமீர் ஆலிம் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.

பட்டம் பெற்ற மாணவர்களுக்கு பிரதம அதிதி உட்பட பிரமுகர்கள் சான்றிதழ்களை வழங்கினார்கள். கலா பீட நிர்வாக சபை உப தலைவர் ஏ.ஆர்.எம்.பதியுதீன் வரவேற்புரை நிகழ்த்தினார். அதிபர் மௌலவி அஸ்மிகான் முஅய்யிதி, ஜாமியதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா அதிபர் மௌலவி அப்துல் ராஸிக், பழைய மாணவர் ஒன்றிய பொருளாளர் மௌலவி அப்துல் முனாப், கலா பீட நிர்வாக சபை செயலாளர் எம் எல் ஏ அப்துல் அஃலா உரை நிகழ்த்தினர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்லம் ஹாஜியார், முன்னாள் அதிபர் அப்துல் வாஹித், அக்கறணை றஹ்மானிய்யூ, கல்லூரி முன்னாள் அதிபர் ரஹ்மானியா அரபிக் கல்லூரியின் முன்னாள் அதிபர் முகம்மத் ஜிப்ரி ரஹ்மானி ஆகியோர் உட்பட பெற்றோர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.




இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத்தின் முழு அதிகாரமுடைய மற்றும் சிறப்புத் தூதுவராக கலீத் நாசர் அல்அமெரி இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் ஐக்கிய அரபு இராச்சியத்தின் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது தகுதிச் சான்றுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் சமர்ப்பித்தார்.

# பாமன்கடை சந்தி பாலத்தின் நிர்மாணப் பணிகள் இவ்வருடத்தின் ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவடையும்!

## நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு






கொழும்பு, ஹொரணை 120 வீதியில் நிர்மாணிக்கப்படும் புதிய பாமன்கடை பாலத்தின் நிர்மாணப் பணிகளால் வீடுகளை இழக்கும் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ள புதிய வீடுகளின் சாவியை ஆளும் தரப்பு பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அண்மையில் கையளித்தார்.

பாமாங்கடையில் புதிய பாலம் கட்டுவதற்காக வீடுகள் அகற்றப்படுகின்றன. வெளியேற்றப்பட்ட வீடுகளுக்குப் பதிலாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கொழும்பு 05, காலிங்க மாவத்தையில் நகர மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறியதாவது,

இலங்கையின் அகலமான பாலம் பாமன்கடை சந்தியில் உள்ளது. இந்த பாலத்தின் அகலம் 44 மீற்றர். கடந்த ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்குள் பணியை முடித்துவிடுவோம் என நம்பினோம். ஆனால், அந்தத் திட்டங்களில் சில மாற்றங்கள் ஏற்பட்டதால், கூடுதலாக 90 நாட்கள் அவகாசம் கேட்கப்பட்டது. அதன்படி, மார்ச் 31ஆம் திகதிக்குள் பணிகளை முடிக்க எதிர்பார்க்கிறோம். இங்கு போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்தது. வீதியின் மறுபுறம் இந்த பணிகளை நிறைவு செய்து திறக்க எதிர்பார்க்கிறோம். எதிர்வரும் சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் மக்களின் வசதிக்காக இலங்கையின் அகலமான பாலமாக இந்தப் பாலத்தை திறந்துவைப்போம் என நம்புகிறோம். பாலம் கட்டப்பட்டதால் எட்டு வீடுகள் அகற்றப்பட்டுள்ளன. அந்த குடும்பங்கள் அனைவருக்கும் புதிய வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டு சாவிகள் இன்று கையளிக்கப்பட்டன.

மக்களுடன் மிகவும் நட்புறவுடன் இந்த அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். மக்களை வீதிக்கு அழைத்துச்செல்லும் அபிவிருத்தி எம்மிடம் இல்லை. அவர்களுக்கு வீடுகள் தருவதாக உறுதியளித்தோம். அந்த வீடுகள் இருந்த நிலத்தில்தான் நாங்கள் நிற்கிறோம். இன்று எமது அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சர் இந்திக்க ஆகியோர் இணைந்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்கான சாவிகளை கையளித்தோம். கடினமான காலங்கள் இருந்தபோதிலும், நாங்கள் அபிவிருத்திப் பணிகளை நிறுத்தவில்லை. நாங்கள் முன்னோக்கி நகர்கிறோம். சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின்கீழ் வீதி வலையமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் சுகாதார சேவையை மேம்படுத்துதல் மற்றும் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல் என எமது ஜனாதிபதி உறுதியளித்தார்.

இக்கட்டான காலத்திலும் அதையெல்லாம் நிறைவேற்ற அரசு கடுமையாக உழைத்து வருகிறது. கொவிட் காரணமாக எதுவும் செய்ய முடியாது என்று தலைமறைவாகும் அரசு அல்ல நாங்கள். மக்களுக்கு வாக்குறுதியளித்தபடி எத்தனை தடைகள், பொருளாதாரப் பிரச்சினைகள் வந்தாலும் நாட்டின் அபிவிருத்திப் பணிகளை நிறுத்த நாங்கள் தயாராக இல்லை. இன்னும் சில மாதங்களில் இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று நம்புகிறேன் - என்றார்.

# பிரான்ஸ் பொருளாதார அமைச்சருடன் ஜீ.எல்.பீரிஸ் விசேட கலந்துரையாடல்

## புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்து

வர்த்தகம் மற்றும் பொருளாதார ஈர்ப்பிற்கான அமைச்சர் பிராங்க் ரெய்ஸ்டரை பரிஸிலுள்ள வெளிநாட்டு அமைச்சில் வைத்து சந்தித்த வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், பல்வேறு துறைகளில் இலங்கையுடனான பொருளாதார உறவுகளை விரிவுபடுத்துவதற்கான பிரான்ஸின் ஆதரவு குறித்து கலந்துரையாடினார். இரு அமைச்சர்களினதும் கலந்துரையாடலின் முடிவில் அவர்களுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.



இது தொடர்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வெளிநாட்டு அமைச்சர் பிரான்ஸின் வர்த்தக சபையில் பல கூட்டங்களில் கலந்து கொண்டார். ஆலோசகர் பெர்னார்ட் குயின்ட் மற்றும் சர்வதேச வணிக வலையமைப்புகளின் தலைவர் எஸ்டெல் கில்லட் ஆகியோரை அவர் வணிக சபையில் வைத்து சந்தித்தார். இந்தக் கலந்துரையாடலின்போது, பிரான்ஸ் மற்றும் இலங்கை நிறுவனங்களுக்கு இடையேயான வலையமைப்பு ஏற்பாடுகள் மற்றும் தொழில் முனைவு, வணிக முகாமைத்துவம் மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்களில் கல்வித் ட்டங்களுக்கான பிரான்ஸின் நிபுணத்துவம் ஆகியன தொடர்பில் குறிப்பாக கவனம் செலுத்தப்பட்டது.

பிரான்ஸிலுள்ள நிறுவனங்களின் மிகப்பெரிய சங்கமான எம்.ஈ.டி.ஈ.எவ். இன்டர்நெஷனலின் ஃபிராங்கோயிஸ் கார்பினுடன் பேராசிரியர் பீரிஸ் கலந்துரையாடினார்.

அவர் பரிஸில் சந்தித்த பெருநிறுவனத் துறையின் பிரதிநிதிகளில் எம் 21 லைஃப் சயன்சஸ் நிறுவனத்தின் பொதுச் செயலாளர் கிறிஸ்டியன் லெரோக்ஸ் மற்றும் மார்க்கடிங் ஸ்ட்ரேடஜி தேல்ஸ் டி.ஐ.எஸ்ஸின் உப தலைவர் ஜீன் கிளவுட் பெரின் ஆகியோர் உள்ளடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இலங்கைக்கான லிபிய அரசின் முழு அதிகாரமுடைய மற்றும் சிறப்புத் தூதுவராக நாசர் யோனிஸ் அல்புர்ஜானி இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் லிபிய அரசின் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது தகுதிச் சான்றுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் சமர்ப்பித்தார்.

# இல்மனைட்டுக்காக அபகரிக்கப்பட்டன கொக்கிளாய் தமிழர்களின் நிலங்கள்

## சுமந்திரனின் ஆலோசனைப்படி மீட்க நடவடிக்கை என வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

**(முல்லைத்தீவு நிருபர்)**

முல்லைத்தீவு - கொக்கிளாயில், கம்பித்தறை மற்றும் வில்லுவெளி ஆகிய தமிழர்களின் பூர்வீக வயல்நிலங்களை இல்மனைட் அகழ்விற்காக கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தினர் அபகரித்துள்ளனர். இவ்வாறு அபகரிக்கப்பட்ட காணிகளை நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனின் ஆலோசனைப்படி சட்டரீதியாக மீட்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

அதேவேளை, தமிழர் தாயகப்பரப்பில் தற்போது அபகரிப்புச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன எனச் சுட்டிக்காட்டிய ரவிகரன், அந்த அபகரிப்புச் செயற்பாடுகளைத் தடுக்க சர்வதேச நாடுகள் தலையீடுசெய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட கொக்கிளாய் தமிழ் மக்களிடம் வழக்குத் தொடர்வதற்கான ஆவணங்களை சேகரிக்கும் செயற்பாட்டின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்கிளாய் பகுதியில் எவ்வித அறிவிப்புகளுமின்றி தங்களுடைய காணிகளை அளவீடு செய்து, அபகரிக்கப்படுவதாக மக்கள் எம்மிடம் செய்த முறைப்பாட்டிற்கு அமைவாக நாம் இங்கு வருகைதந்துள்ளோம்.

ஏற்கனவே இல்மனைட் அகழ்விற்காக கொக்கிளாய் - கம்பித்தறை என்ற பகுதியில் 44 ஏக்கருக்கும் மேற்பட்ட தமிழர்களின் பூர்வீக வயல் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தற்போது அதற்கு அருகிலுள்ள வில்லுவெளி என்னும் இடத்திலும், 60 ஏக்கருக்கும் மேற்பட்ட தமிழர்களின் பூர்வீக வயல் காணிகள் அளவீடுசெய்யப்பட்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்தவகையில் கடந்த 09.02.2022 அன்று இவ்வாறு அபகரிக்கப்படுகின்ற பகுதிகளைப் பார்வையிட்டோம். இறுதியாக இம்முறை எமது தமிழ் மக்களால் பெரும்போக நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைசெய்யப்பட்ட காணிகள், எமது தமிழ் மக்களின் நிலக்கடலை பயிர்ச்செய்கை காணிகள், தென்னங்காணிகள், வில்லுக்குளம் என்று சொல்லப்படக்கூடிய குளம் என இப்படியாக பாரியளவு நிலப்பரப்பு அளவீடுசெய்யப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டு, அபகரிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், இந்த விடயத்தை சட்டரீதியாக அணுகி, எமது தமிழ் மக்களின் இந்த பிரச்சினைக்குத் தீர்வினைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்ற நோக்கில், நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனிடம் ஆலோசனைகளைப்பெற்று, முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணியான தனஞ்சயனை அழைத்துவந்து அபகரிப்பு நிலைமைகளை நேரடியாகக் காண்பித்துமிருந்தோம்.

குறிப்பாக கொக்கிளாய் பகுதியில் தமக்குச் சொந்தமான கூடுதல் காணிகள் அபகரிக்கப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொக்கிளாய் மாத்திரமன்றி கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு, செம்மலை வரையில் கனியமணல் அகழ்விற்காக காணிகள் அபகரிக்கப்படப்போவதான தகவல்களும் வெளிவருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தவகையில் கொக்கிளாயிலிருந்து செம்மலைவரையில் கடற்கரையாக 12 கிலோமீற்றர் நீளமாகவும், கடற்கரையிலிருந்து உயரமாக 650 மீற்றர் அகலமாகவும் காணிகள் அபகரிக்கப்படப்போவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாகாண சபை ஆட்சிக்காலம் இருந்த காலத்திலே, கம்பித்தறை பகுதியில் இப்படியான காணிகள் அபகரிக்கவோ, வேலிகள் அமைப்பதற்கோ, கனியமணல் அகழ்விற்கான வேறு எந்த நடவடிக்கைகளையும் அங்கு செய்வதற்கு நாங்கள் இடமளித்திருக்கவில்லை. வடமாகாண சபை ஆட்சி இருந்தகாலத்தில்கூட இல்மனைட் அகழ்வுசெய்வது தொடர்பில் பேசப்பட்டது.

இந்நிலையில், இந்த இல்மனைட் அகழ்வு செய்வது தொடர்பில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் நானும் இருந்தேன். அப்போது நாங்கள் கடுமையாக வாதாடி எமது தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதற்கு இடமளிக்கவில்லை.

ஆனால், மாகாண சபை ஆட்சிக்காலம் முடிவுற்ற சூழலில், 2020ஆம் ஆண்டின் முற்பகுதியில் கம்பித்தறை பகுதியில் 44 ஏக்கருக்கும் மேற்பட்ட எமது தமிழ் மக்களின் வயல் காணிகளை அபகரித்து வேலிகள் அமைத்ததுடன், அங்கு மணல் அகழ்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் ஒருபுறம் இடம்பெற்றுக்கொண்டிருக்க, மறுபுறம் மேலதிக காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்த அபகரிப்பு நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, இந்த தகவலை நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரனிடமும், சட்டத்தரணி தனஞ்சயனிடமும் தெரிவித்து, இவர்களது ஏற்பாட்டில் வழக்கு தொடர்வதற்காக, உரிய ஆவணங்களை மக்களிடமிருந்து பெற்றுக்கொண்டோம். அதற்கமைய நாம் விரைவில், அபகரிக்கப்பட்ட எமது மக்களின் காணிகளை விடுவித்துத்தருமாறு நீதிமன்றினை நாடுவதற்கு இருக்கின்றோம்.

இவ்வாறு இடம்பெறும் இந்த கொடுமைகளை நாம் யாரிடம் தெரிவிப்பது? இங்கு இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவது பன்னாடுகளுக்குத் தெரியாதா?

இதுவரையில் எம்மோடு கலந்துரையாடிய சர்வதேச குழுக்களிடமும், இங்கு இடம்பெறும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிய வந்த அனைத்து சர்வதேச நாடுகளைச் சேர்ந்த தரப்புகளிடமும் நாம் இந்த தகவல்களைத் தெரிவித்திருக்கின்றோம்.

ஆனாலும் சிங்களத்தின் ஆதிக்கமும், ஆக்கிரமிப்புச் செயற்பாடும் தொடர்கின்றது. இவற்றைத் தடுத்துநிறுத்தவேண்டும்.எமது மக்களுக்குரிய காணிகள் எமது மக்களுக்கே வழங்கப்படவேண்டும். இவ்வாறான ஆக்கிரமிப்புக்கள் வேண்டாம். எமது மக்களை வாழவிடுங்கள் என்றுதான் நாம் கேட்கின்றோம்.

எமது நிலங்கள் எமக்கு வேண்டும், எமது கலாசாரங்கள் எமக்கு வேண்டும், எமது மதங்கள் இங்கு பாதுகாக்கப்படவேண்டும் என்பதைத்தான் நாம் கேட்கின்றோம்.

நாம் ஒரு பூர்வீகக் குடிமக்கள் என்றவகையில் எமக்கு நியாயமான தீர்வுகிடைக்க, இந்தவிடயத்தில் சர்வதேச நாடுகள் தலையீடுசெய்ய வேண்டும் - என்றார்.

# ரயிலில் மோதி ஒருவர் களுத்துறையில் உயிரிழப்பு

களுத்துறை வடக்கு பகுதியில் கொழும்பு கோட்டையிலிருந்து காலி நோக்கி பயணித்த இரவு அஞ்சல் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதான ராஜேந்திரம் சனாதனன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, களுத்துறை கல்லூரிக்கு முன்பாக சடலமொன்று கண்டெடுக்கப்பட்டதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் யார் என்பது நேற்றுமாலை வரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். இவ்விரு சம்பவங்கள் தொடர்பிலும் களுத்துறை பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# லொறியுடன் பஸ் மோதி விபத்து; எண்மர் வைத்தியசாலையில் சேர்ப்பு

**(அப்துல்சலாம் யாசீம்)**

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி வந்துகொண்டிருந்த சொகுசு பஸ்ஸொன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் பஸ்ஸில் பயணித்த எட்டு பேர் படுகாயமடைந்த நிலையில் தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து நேற்றுமுன்தினம் (26)அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து வந்துகொண்டிருந்த சொகுசு பஸ் கலேவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதாகவும் இதில் காயம் அடைந்த 8 பேர் தம்புள்ளை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்து தொடர்பிலான விசாரணைகளை கலேவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பில் 9736 விவசாயிகளுக்கு 36 கோடியே 19 இலட்சம் ரூபா இழப்பீடு

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தலைமையில் இன்று வழங்க தீர்மானம்





(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பில் பாதிக்கப்பட்ட 9,736 விவசாயிகளுக்கு சுமார் 36 கோடியே 19 இலட்சம் ரூபா நட்டஈட்டுக் கொடுப்பனவாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைக்கு பிரகடனத்திற்கு அமைவாக நாட்டை சுபீட்சத்தின்பால் கட்டியெழுப்பும் நோக்கில் நாடளாவிய ரீதியில் அரசாங்கத்தினால் பல்வேறு துறைசார் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுவரும் நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் மக்கள் நலன்சார் பல்வேறு வேலைத்திட்டங்கள் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைவாக விவசாயிகளின் நலன் நோன்புகை தொடர்பாக அரசாங்கம் கூடுதலான கவனத்தை செலுத்தி வருகின்றது. அந்த அடிப்படையில் கடந்த 2020 மற்றும் 2021ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பெரும்போக செய்கையின்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் இன்று (28) மட்டக்களப்பு மாவட்டத்தில் வழங்கப்படவுள்ள நிலையில், அது தொடர்பாக துறைசார் அரச அதிகாரிகளை தெளிவூட்டும் விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (26) மாலை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே.கருணாகரன் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந், மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத், விவசாய காப்புறுதிச் சபையின் உயரதிகாரிகள் மற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட துறைசார் திணைக்கள அதிகாரிகளும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 4 பகுதிகளில் விவசாயிகளுக்கான நட்டஈட்டுக் காப்புறுதி வழங்கப்படவுள்ளமை குறித்தும், மேலும் கடந்த காலங்களில் விடுபட்டிருந்த விவசாயிகளுக்கும் இவ்வாறான கொடுப்பனவு வழங்குவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவ்வாறாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 9736 விவசாயிகளுக்கு சுமார் 36 கோடியே 19 இலட்சத்து 11 ஆயிரத்து 742 ரூபா நட்டஈட்டுத் தொகையாக பகிர்ந்தளிக்கப்படவுள்ளதுடன், இவர்களுக்கான நட்டஈட்டு கொடுப்பனவானது இன்று காலை 9.30 மணியிலிருந்து இராஜாங்க அமைச்சரின் தலைமையில் பின்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது.

அதற்கமைவாக மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மண்டபத்தடியிலும் மண்முனை மேற்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்திலும், கரடியனாறு விவசாய ஆராய்ச்சி மையத்திலும், ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலத்தின் கேட்போர் கூடத்திலும் விவசாயிகளுக்கான நட்டஈட்டு கொடுப்பனவுகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

# இடிந்துவிழும் அபாயத்தில் காரைதீவு பாலம்

## புதிதாக அமைத்துத் தருமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை



(நிந்தவூர் நிருபர்)

காரைதீவு பிரதேச சபைக்குட்பட்ட விபுலானந்த தேசிய பாடசாலைக்கு செல்லும் வீதியில் அமைந்துள்ள பிரதான பாலம் இடிந்துவிழும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

இப்பாலத்தை தினசரி ஆயிரத்திற்கும் அதிகமானோர் பயன்படுத்தி வருகின்றனர்.

காரைதீவு விபுலானந்த தேசிய பாடசாலைக்கு செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயணிக்கும் இவ்வீதியில் கனகரெட்ணம் விளையாட்டு மைதானம், விதாதா வளநிலையம், வீரபத்திரசுவாமி ஆலயம், ஸ்ரீ சித்தானைக்குட்டி ஆலயம் என்பன அமைந்துள்ளன.

காரைதீவு தோணாவிற்கு மேலான அமையப்பெற்றுள்ள இப்பாலம் சுமார் 50 வருடங்கள் பழைமை வாய்ந்தது. பாலத்திற்குள் போடப்பட்டுள்ள இரும்புக்கம்பிகள் துருப்பிடித்து வெளியே தெரிவதோடு பாலத்தினூடாக வாகனங்கள் செல்லும்போது ஒருவிதமான அதிர்வும் ஏற்பட்டு எந்தநேரத்திலும இடிந்து விழக்கூடிய நிலைமையில் உள்ளது.

அண்மையில் இவ்வீதி கார்பட் வீதியாக புனரமைப்பு செய்யப்பட்டபோது பிரதேசவாசிகளினால் சம்பந்தப்பட்ட பொறியியலாளரிடம் இப்பாலம் சம்பந்தமாக எடுத்துக்கூறியபோதும் எந்தவித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.

எனவே, தற்போது பழுதடைந்த பாலத்தை முற்றாக அகற்றி புதிய பாலமொன்றை அமைத்து தருமாறு பொதுமக்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



இலங்கை கடலால் சூழப்பட்ட நாடு எண்டுதான் முந்தி அஞ்சாம் வகுப்புல படிச்சம் எலுவா..? இப்போ அந்தப் பாடம் மாறிப்போய்.. இலங்கை கடனால் சூழப்பட்ட நாடு, இருளால் சூழப்பட்ட நாடு, இனவாதத்தால் சூழப்பட்ட நாடு, எண்டல்வா சொல்ல வைச்சித்தாங்க சிவப்பு சால்வை ஆட்சிக்காறருகள்..இன்னும் கொஞ்சநாளால 24 மணித்தியாலமும் கலண்ட்ட கட் பண்ணுனாலும் ஆச்சரியம் இல்ல

# ஊடக அடக்குமுறைக்கு எதிராக மட்டக்களப்பில் மாபெரும் போராட்டம்

## எதிர்வரும் சனிக்கிழமை அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு




(வெல்லாவெளி நிருபர்)

ஊடக அடக்குமுறைக்கு எதிராக மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று மட்டக்களப்பில் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை (05) காலை 10 மணியளவில் காந்தி பூங்கா முன்பாக நடைபெறவுள்ள குறித்த போராட்டத்திற்கு ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்புகள், அரசியல்வாதிகள் மற்றும் நலன்விரும்பிகள் என அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு ஊடகவியலாளர் தொழிற்சங்கம் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்வதோடு, அண்மைக்காலமாக இலங்கையில் நடக்கும் ஊடக அடக்குமுறைக்கு ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றமையை கண்டித்தும், கண்டனங்களை தெரிவிக்கும் முகமாகவும் குறித்த நிகழ்வுக்கு வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

# காத்தான்குடியில் சிறப்பாக இடம்பெற்ற சிறுவர் சந்தை











(காத்தான்குடி நிருபர்)

புதிய காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் பாலர் பாடசாலையில் கல்வி கற்றுவரும் பாலர்களின் சிறுவர் சந்தை நேற்று முன்தினம் (26) பாலர் பாடசாலையில் இடம்பெற்றது.

முன்பள்ளி சிறுவர்களால் சுமார் முப்பதுக்கும் அதிகமான விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டு சிறுவர் சந்தை சிறப்பாக இடம்பெற்றதுடன், அதிகமான பொதுமக்கள் வாடிக்கையாளர்களாக கலந்துகொண்டு கொள்வனவில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில் காத்தான்குடி வர்த்தக சங்கத்தின் தலைவர் கே.எல்.பரீட், நகர சபை உறுப்பினர் ஜவாஹிர், முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் றுஸ்வின் முஹம்மட் ஆகியோர் கலந்துகொண்டு, சிறுவர் சந்தையை ஆரம்பித்துவைத்ததுடன், பாலர்களுக்கு நினைவுப் பதக்கம் மற்றும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவித்தனர்.

# கிட்டங்கி வீதியை ஊடறுத்துச் செல்லும் பகுதியில் முறிந்துவிழும் நிலையிலுள்ள மரங்களால் மக்கள் அச்சம்





(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நற்பிட்டிமுனை கிட்டங்கி பகுதியை இணைக்கும் பிரதான வீதியின் இரு மருங்கிலும் பாரிய மரங்கள் உடைந்து விழும் நிலையில் காணப்படுவதனால் வீதியில் பயணம் செய்யும் மாணவர்கள்m பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் இப்பிரதேசத்தில் எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள விபத்துகளை குறைத்து பெறுமதியான மனித உயிர்களை பாதசாரிகளின் நலன் கருதி உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றனர். நற்பிட்டிமுனை கிட்டங்கி வீதியை ஊடறுத்து செல்லும் பகுதியில் பாரிய மரங்கள் முறிந்து விழும் நிலையில் உள்ளமையினால் இவ்வாறு பொதுமக்கள் வாகன சாரதிகள் தினமும் உயிரை கையில் பிடித்து வீதியை கடக்கின்ற போது இவ்வாறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினருக்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும் அப்பகுதியிலுள்ள வீதியின் இருமருங்கிலுமுள்ள வடிகான்களுக்கு மேலாக இடப்படும் கொங்கிறீட் மூடிகள் முறையாக போடப்படாமையினால் விபத்துகளும் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன. எனவே, இப்பிரதேசத்தில் அதிகரித்துள்ள விபத்துகள், வாகனங்கள் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் முகமாகவும் பாதசாரிகளின் நலன் கருதி இந்நடவடிக்கை துரித கதியில் முன்னெடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த காலங்களில் கொரோனா 3 அனர்த்த அச்சுறுத்தல் நிலையிலும் கூட வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் வீதி போக்குவரத்திற்கு தடையாக இருந்த பாரிய மரக்கிளைகளை வெட்டி அகற்றியிருந்தனர். அண்மையில் கூட மலையக பகுதியில் பாரிய மரம் ஒன்றினை அகற்ற முற்பட்டபோது மரம் விழுந்து ஆசிரியர் ஒருவர் மரணமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 'காக்கை நிறச்சேலை' சிறுகதை நூல் வெளியீடு



(சியாத் எம்.இஸ்மாயில், நூறுல் ஹுதா உமர்)

கல்முனை கதீரின் 'காக்கை நிறச்சேலை' (சிறுகதைகள்) நூல் வெளியீட்டு விழா அக்கரைப்பற்று, சம்மாந்துரை ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகரும் கவிஞருமான வைத்தியர் அஸாத்.எம்.ஹனிபா தலைமையில் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபவத்தில் நேற்று (27) நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.எம்.ஏ. ஜவாத், கல்முனை மாநகர உறுப்பினர்களான எம்.எஸ்.எம்.நிசார், ஏ.எம்.பைறூஸ் மற்றும் எழுத்தாளர் ஏ.எம்.பறக்கத்துல்லா, சட்டத்தரணியும் கவிஞருமான ஏ.எல்.எம்.றிபாஸ், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், வரலாற்றாய்வாளர்கள், கல்விமான்கள் உட்பட பலர் கலந்துகொண்டு நூலின் பிரதிகளை பெற்றுக்கொண்டனர்.

# அட்டாளைச்சேனையில் இரத்த தான முகாம்





(அட்டாளைச்சேனை, திகாமடுல்ல நிருபர்கள்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிக்கு அன்பளிப்புச் செய்யும் நோக்கில், அட்டாளைச்சேனை மார்க்ஸ்மென் விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் இரத்த தான முகாம் அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தில் நேற்று (27) நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம்.ஹனிபாவின் வேண்டுகோளுக்கிணங்க, மார்க்ஸ்மென் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும் ஊடகவியலாளருமான நிசாத் ஏ.காதரின் ஒருங்கிணைப்பில் கொவிட் கால நிலைமை மற்றும் இரத்தப் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு மேற்படி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம்முகாமில் வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், விளையாட்டுக் கழக பிரதிநிதிகள் ஆகியோர் ஒத்துழைப்பு நல்கியதுடன், இதில் ஆண்கள், பெண்கள் என இரத்தக் கொடையாளர்கள் பெரும்பாலானோர் ஆர்வத்தோடு கலந்துகொண்டு, இரத்த தானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு மட்டக்களப்பில் கையெழுத்து சேகரிப்பு







(கல்லடி நிருபர்)

தமிழ் மக்களை அடக்கியொடுக்கப் பயன்படுத்தப்பட்டுவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை நீக்குவதற்கு அழுத்தங்களை வழங்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் கையெழுத்திடும் நடவடிக்கை நேற்று (27) மட்டக்களப்பு காந்தி பூங்காவில் வடக்கு, கிழக்கு தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஒருங்கிணைப்பில் மட்டக்களப்பு தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் மாவட்ட தலைவர் லோகிதராஜா திவாகரன் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம், மா.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், சீனித்தம்பி யோகேஸ்வரன், எஸ்.ஸ்ரீநேசன், ஜனாப் அமீர்அலி, முன்னாள் கிழக்கு மாகாணசபை பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், உறுப்பினர் இரா.துரைரத்தினம், முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார், மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா யோசேப், மட்டக்களப்பு மாநகரசபை நகரபிதா தியாகராசா சரவணபவன், மாநகர சபை உறுப்பினர்கள், பிரதேச சபைத் தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள், உறுப்பினர்கள், இளைஞர் அணித் தலைவர் கி.சேயோன், மகளிர் அணி உறுப்பினர்கள், சமயத் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் திரண்டு வந்து, தமது எதிர்ப்பினைத் தெரிவித்து, தமது கையொப்பத்தினைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை நீக்குமாறு கோரி இட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த இலங்கை தேசமானது அனைத்து மக்களுக்கும் பொதுவான நாடு என்று கூறப்படுகின்றபோதிலும் இந்த நாட்டில் தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு சட்டமும், பெரும்பான்மை மக்களுக்கு ஒரு சட்டமுமே பயன்படுத்தப்படுகின்றது.

இந்த நாட்டில் தமிழ்பேசும் மக்கள் தங்களுக்கு நடக்கும் அநீதிகளையும், அத்துமீறல்களையும் வெளிப்படுத்தும்போது பயங்கரவாதத் தடைச்சட்டம் எனும் இரும்புக்கரம் கொண்டு அடக்குவதற்கான நடவடிக்கைகளே தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைப் பொறுத்தவரையில் நல்லாட்சிக் காலத்திலும், அதற்கு முற்பட்ட காலத்திலும் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை நீக்க வேண்டுமென்று தொடர்ச்சியாக வலியுறுத்தியே வந்திருக்கின்றது. தற்போதைய ஆட்சிக் காலத்தில் ஜனநாயகத்தினை குழி தோண்டிப் புதைக்கும் வகையில் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஊடாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்டம் ஊடாக பல தமிழ் இளைஞர்களும், ஊடகவியலாளர்களும், சமூக செயற்பாட்டாளர்களும் கைதுசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்படும் நிலையினைக் காணமுடிகின்றது.

தனது இனத்திற்காக உயிர்நீத்த உறவுகளை நினைவுகூர முடியாத வகையில் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதுடன், ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்துவதற்கும் இந்தச் சட்டத்தின் மூலம் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன் காரணமாக வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து பகுதிகளிலும் வாழும் சிறுபான்மை சமூகம் மட்டுமன்றி, பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக அணி திரண்டுள்ளதைக் காணமுடிகின்றது.

அதேவேளை வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்கள் தவிர்ந்த மலையகம், பெரும்பான்மை மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் கையெழுத்துப் பெறப்படவுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் இதன்போது கருத்துத் தெரிவித்தார். அத்தோடு இதன்போது கலந்துகொண்டோர் இணைந்து அரசுக்கெதிரான கோசங்களை எழுப்பியிருந்தனர்.

இந்த கையெழுத்துப்பெறும் போராட்டத்தில் பெருமளவான முஸ்லிம் பெண்களும் கலந்துகொண்டு ஆதரவு வழங்கியிருந்ததுடன், பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்யுமாறு கோரும் போராட்டத்தில் நீதியமைச்சர் அலி சப்ரிக்கு எதிராக ஆவேசமான முறையில் சில கருத்துக்களை முன்வைத்திருந்தமையையும் அவதானிக்க முடிந்தது.

## ‘அந்தி பூத்த வைகறை’ கவிதை நூல் வெளியீடு



(அட்டாளைச்சேனை நிருபர்)

ஒலுவில் எஸ்.ஜலால்டீன் எழுதிய ‘அந்தி பூத்த வைகறை’ கவிதை நூல் வெளியீட்டு விழா அட்டாளைச்சேனை அல்-ஷகி வரவேற்பு மண்டபத்தில் நேற்று (27) இடம்பெற்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.ஏ.மஜீட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கவிதை நூலினை வெளியீட்டு வைத்தார். இந்நிகழ்வின்போது இலக்கிவாதிகள், நிர்வாக சேவை அதிகாரிகள், கல்வித்துறை அதிகாரிகள், சுகாதாரத்துறை உயரதிகாரிகள் உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் பலர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

# சர்வதேச அளவில் சாதித்தவர்களுக்கு சாய்ந்தமருதில் மகுடம் சூட்டி கௌரவிப்பு




(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது ஹோலி ஹீரோஸ் விளையாட்டு கழக 20ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் சர்வதேச அளவில் சாதனை படைத்த கழக வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வும் மற்றும் சாய்ந்தமருது பிமா விளையாட்டு கழக 10ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வும் சாய்ந்தமருது ஹோலி ஹீரோஸ் விளையாட்டு கழகத்தலைவர் ஆசிரியர் ஏ. ஆதம்பாவா தலைமையில் கல்முனை தனியார் விடுதியில் நேற்று முன்தினம் (26) இரவு நடைபெற்றது.

இந்நிகழ்வில் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் மற்றும் சர்வதேச நடுவராக தெரிவாகி பணியாற்றிவரும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.எம்.ஜப்ரான், சர்வதேச உதைபந்தாட்ட நடுவராக பணியாற்றிவரும் தேசிய ஒலிம்பிக் குழுவின் உறுப்பினரும், இலங்கை பூப்பந்தாட்ட சம்மேளன உதவிப் பொதுச் செயலாளருமான ஆசிரியர் அலியார் பைசர், தேசிய Tchoukball அணி வீரரும், Tchoukball சர்வதேச போட்டியின் வெண்கல பதக்க வெற்றியாளருமான ஆசிரியர் எம்.வை.எம்.றக்கிப் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக்கழக போஷகரும், அதியுயர் நிர்வாக குழுவின் உறுப்பினருமான மாளிகைக்காடு- சாய்ந்தமருது வர்த்தக சங்கத் தலைவர் கலாநிதி எம்.எஸ்.எம்.முபாரக், சாய்ந்தமருது ஹோலி ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் பிமா விளையாட்டுக் கழகத்தின் உயர்பீடத்தினர் மற்றும் நிர்வாகிகள், பிரதேசத்தின் முன்னணி கழகங்களின் முக்கிய நிர்வாகிகள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# கிழக்கில் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

(காரைதீவு நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் சில தினங்களாக உல்லாசப் பயணிகளின் வருகை வெகுவாக அதிகரித்து காணப்படுவதுடன், பூட்டப்பட்டிருந்த பல உல்லாச ஹோட்டல்கள் புதுப்பொலிவுடன் திறக்கப்பட்டு வருகின்றன.

கடந்த பல வருடங்களாக நிலவிய அசாதரண சூழ்நிலை காரணமாக உல்லாசப் பயணிகளின் வருகை மிகவும் அரிதாகக் காணப்பட்டது. கொவிட்-19 தடுப்பூசி செலுத்தும் பணிகள் இடம்பெற்று வருவதால் கொவிட்-19 தொற்று குறைந்த சூழல் உருவாகியுள்ளதாலேயே உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரசித்திபெற்ற பாசிக்குடா கடற்கரைக்கும் தினந்தோறும் உள்ளூர், வெளியூர் உல்லாசப் பயணிகள் பெருமளவில் வருகைதருவதுடன், விடுமுறை தினங்களில் இத்தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவ்வாறே அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் அறுகம்பை, உல்லை ஆகிய பகுதிகளுக்கும் உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துக் காணப்படுவதுடன், இங்கு நிறுவப்பட்டு மூடப்பட்ட நிலையில் உள்ள உல்லாச ஹோட்டல்கள் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் அப்பிரதேச மக்களின் பொருளாதார நிலையானது வளர்ச்சியடைந்துகொண்டு வருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்கூடம் திறந்துவைப்பு





(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் சிறு சத்திரசிகிச்சைக்கூடம் மீண்டும் திறந்துவைக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் கலந்துகொண்டு கூடத்தை திறந்துவைத்தார்.

கௌரவ அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சி.எம்.மாஹிர், விசேட அதிதியாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி யூ.எல்.எம்.நியாஸ் ஆகியோர் கலந்துகொண்டதுடன், இந்நிகழ்வில் வைத்தியசாலை அபிவிருத்திக்குழு செயலாளர், வைத்தியர்கள், தாதிய பரிபாலகர், நிர்வாக உத்தியோகத்தர், தாதியர்கள் மற்றும் ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

திறந்துவைத்த கடந்த வெள்ளிக்கிழமை அன்று 6 சிறு சத்திரசிகிச்சைகள் வெற்றிகரமாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



கல்முனை வலயத்தில் பல வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு ஏற்பாடுசெய்யப்பட்ட பிரியாவிடை நிகழ்வுக்கு வருகை தந்தோர் மாலை அணிவித்து அழைத்துச் செல்லப்படுவதை படத்தில் காணலாம். (நற்பிட்டிமுனை நிருபர்)

# முகப்புத்தகத்தில் பெண்கள்போல் குரலை மாற்றிப்பேசி ஆண்களிடம் பணமோசடியில் ஈடுபட்ட ஆயித்தியமலை இளைஞன் கைது

(கனகராசா சரவணன்)

அக்கரைப்பற்று இளைஞன் ஒருவனிடம் தனது குரலால் பெண்கள்போல் தொலைபேசியில் பேசி காதலிப்பதுபோல் நடித்து, பணமோசடியில் ஈடுபட்ட மட்டக்களப்பு ஆயித்தியமலையைச் சேர்ந்த இளைஞன் ஒருவனை கொக்குவில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஆயித்தியமலை பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் முகநூல் பக்கத்தில் இருந்த அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞனின் மெசேஞ்சர் ஊடாக தொலை பேசியில் உரையாடி அவனது தொலைபேசி இலக்கத்தை குறித்த இளைஞன் கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் பெற்றுக்கொண்டான்.

இதனைத் தொடர்ந்து அக்கரைப்பற்றைச் சேர்ந்த இளைஞனுடன் தொடர்ந்து உரையாடிவந்த நிலையில், குறித்த இளைஞன் திருமணம் முடிக்கவில்லை எனத் தெரிந்துகொண்ட நிலையில், தனது பெரியம்மாவின் மகள் இருப்பதாகவும் அவளுக்கு திருமணம் பேசிவருவதாக குறித்த இளைஞனுக்கு தெரிவித்து, பின்னர் முகநூல் பக்கங்களில் இருக்கும் அழகான பெண் ஒருவரின் படத்தை அனுப்பி இதுதான் எனது பெரியம்மாவின் மகள் எனத் தெரிவித்துள்ளார்.

குறித்த இளைஞனும் அழகான பெண்ணின் படத்தைப் பார்த்ததும் அவனுக்கு அந்த பெண் மீது ஆசை ஏற்பட்டதை கண்டுகொண்ட ஆயித்தியமலை இளைஞன் வேறு தொலைபேசி இலக்கத்திலிருந்து அந்த பெண் கதைப்பதுபோல் குரலை மாற்றி இளைஞனுடன் கதைத்து வந்ததுடன், பெண்ணின் தாயார் எனவும் குரலை மாற்றி கதைத்து வந்துள்ளார். தொலைபேசிக்கான ரீலோட் செய்யுமாறு தெரிவித்து அடிக்கடி அவனிடமிருந்து பணத்தையும் வாங்கி வந்துள்ளான்.

இந்த நிலையில் கொழும்பில் மேசன் தொழிலில் ஈடுபட்டுவரும் அக்கரைப்பற்று இளைஞனுக்கு அந்த பெண்மீது காதல் ஏற்பட்டதையடுத்து, அவளை திருமணம் முடிப்பதற்கான பேச்சுவார்த்தையில் இருவரும் ஈடுபட்டுவந்துள்ளனர். பெரியம்மாவின் மகளுக்கு சீதனமாக வீடு பணம் தருவதாகவும் அவர்கள் பணக்காரர் எனவும் பொய்களை கூறிவந்த நிலையில், பெண்ணின் பெற்றோர் மாப்பிளையை பார்ப்பதற்கு அக்கரைப்பற்றுக்கு வருவதற்கான திகதியை தீர்மானித்தனர்.

திகதி தீர்மானிக்கப்பட்டதையடுத்து மாப்பிளை வீட்டார் தமது வீட்டிற்கு வர்ணம் தீட்டி மற்றும் பெண் பகுதியினர் வரும்போது அவர்களுக்கான உணவு வழங்க பல ஆயிரம் ரூபா செலவுசெய்து உணவு ஏற்பாடுகள் செய்து தீர்மானிக்கப்பட்ட திகதியில் காத்திருந்தனர். நேரம் பகல் 12 மணியை தாண்டியதும் பெண்வீட்டாரைக் காணவில்லை என குறித்த ஆயித்தியமலை இளைஞனுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியபோது, மாப்பிளை பார்ப்பதற்கு வேன் ஒன்றில் வெளியேறியபோது வீட்டின் வாசலில் பூனை குறுக்கால் போனது சகுனம் சரியில்லை. அதனால் வரவில்லை எனத் தெரிவித்து வேறு ஒரு தினத்தில் வருவதாக தெரிவித்துள்ளான்.

இதனைத் தொடர்ந்து மாப்பிளையை பார்ப்பதற்கு வருவதற்கு பல சாக்குபோக்குகளை தெரிவித்து வந்துள்ள நிலையில், பெண்ணை பார்ப்பதற்கு பெண்வீட்டிற்கு தாங்கள் வருவதாக அக்கரைப்பற்று இளைஞன் தெரிவித்து, அதற்கான திகதியாக கடந்த 23ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டது. அன்று பெண்ணை பார்ப்பதற்கு மாப்பிளை வீட்டினர் வேன் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு காலையில் மட்டக்களப்பை நோக்கி பயணித்தபோது கல்முனையில் வைத்து ஆயித்தியமலை இளைஞனின் தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தினர். அந்த தொலைபேசி நிறுத்திவைக்கப்பட்டுள்ளதை அறிந்தனர். பலமுறை முயற்சித்தும் பலனளிக்கவில்லை. பெண்ணின் விலாசமும் தெரியாத நிலையில், என்ன செய்வது என தெரியாது நீண்டநேரம் கல்முனையில் காத்துநின்றுவிட்டு அங்கிருந்து வீட்டிற்கு திரும்பிசென்றனர்.

இதன்பின்னர் அன்று மாலை அக்கரைப்பற்று இளைஞனுடன் தொலைபேசியில் தொடர்பை ஏற்படுத்திக்கொண்ட ஆயித்தியமலை இளைஞன் மன்னிக்கவும் தொலைபேசியின் பட்டரி சார்ஜ் இல்லாததால் தொலைபேசி தானாக நின்றுவிட்டது. நான் உங்கள் வீட்டிற்கு வருகின்றேன் எனத் தெரிவித்து மட்டக்களப்பில் இருந்து பஸ்ஸில் அக்கரைப்பற்றுக்கு சென்ற நிலையில், அவனை தனது வீட்டிற்கு கூட்டிச் சென்று இரவு தங்கவைத்து உபசரிப்பு இடம் பெற்றதுடன், பெண்வீட்டிற்கு நாளைக்கு கூட்டிச் செல்வதாக தெரிவித்து கலந்துரையாடியுள்ளனர்.

அடுத்த நாளான கடந்த 24ஆம் திகதி வியாழக்கிழமை காலை குறித்த ஆயித்தியமலை இளைஞன் மற்றும் அக்கரைப்பற்று இளைஞன் அவனின் உறவினர்களான இரு பெண்களுடன் மட்டக்களப்பு பஸ்தரிப்பு நிலையத்துக்கு வந்தடைந்த பின்னர், பெண் வீடு கூளாவடியில் இருப்பதாகவும் பல சாக்குபோக்கு தெரிவித்து என்ன செய்வது என தெரியாது முழுசிக் கொண்டிருந்த அவனை அக்கரைப்பற்று இளைஞன் விடாப்பிடியாக பெண்வீட்டிற்கு கூட்டிச்செல்ல வற்புறுத்தியதையடுத்து அவனுக்கு என்ன செய்வது என தெரியாது கொக்குவில் பிரதேசத்திலுள்ள அவனின் தூரத்து உறவினர் வீட்டிற்கு கூட்டிச் சென்றபோது இவனின் நடவடிக்கையில் அக்கரைப்பற்று இளைஞன் சந்தேகம் கொண்டுள்ளார். அவன் உறவினரிடம் கூட்டிச்சென்ற நிலையில் அவன் தனது தாய் என அனுப்பிய படத்தைக் காட்டி இவனின் தாயா எனக் கேட்டபோது அவர்கள் இல்லை என்றதையடுத்து, அக்கரைப்பற்று இளைஞன் உசாரடைந்து கொண்டு அவனை பிடித்துக்கொண்டு கொக்குவில் பொலிஸாரிடம் சென்று தமக்கு நடந்ததை தெரிவித்து இவனால் சுமார் ஒன்றரை இலட்சத்துக்கு மேலாக கடந்த 2 மாதத்தில் செலவாகியுள்ளதாக அக்கரைப்பற்று இளைஞன் தெரிவித்தான்.

இதனைத் தொடர்ந்து குறித்த இளைஞன் தான் குரலை மாற்றி பெண்கள்போல் கதைத்து இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளதை ஒப்புக்கொண்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன், குரலை மாற்றி பெண்கள்போல் கதைத்தும் காட்டியுள்ளதையடுத்து, அவனை கைதுசெய்தனர்.

இதனைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்டவரின் சகோதரி பொலிஸ் நிலையத்துக்கு சென்று பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று இளைஞனின் குடும்பத்தினரிடம் தமது கஷ்ட நிலையை தெரிவித்து, சகோதரன் தவறு செய்துவிட்டார் என மன்னிப்பு கேட்டதையடுத்து அந்த இளைஞன் முறைப்பாடு செய்யாது சென்றான். அதேவேளை, சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்ட இளைஞனை ஆயித்தியமலை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை ஆயித்தியமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மூதூர் 64ஆம் கட்டை மலையடி பிள்ளையார் ஆலய காணியை விடுவிக்குமாறு கோரிக்கை

## மூதூர் பிரதேச இந்துகுருமார் சங்கத்தினர்



(மூதூர் நிருபர்)

அண்மையில் சர்ச்சையை ஏற்படுத்திய மூதூர் 64ஆம் கட்டை மலையடி பிள்ளையார் ஆலயத்தின் காணியை விடுவித்துத் தருமாறு கோரி மூதூர் பிரதேச இந்துகுருமார் சங்கத்தினர் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாரக்கிடம் கடந்த வெள்ளிக்கிழமை (25) கோரிக்கை அடங்கிய மகஜரொன்றை கையளித்துள்ளனர்.

மூதூர் - மலையடி பிள்ளையார் ஆலயத்தில் வழிபாட்டு பூசைகளில் ஈடுபட்டுவரும் சூழவுள்ள கிராமத்திலுள்ள 14 ஆலயங்களின் நிர்வாகத்தினர் அந்தந்த கிராமத்தின் மக்கள் சார்பாக மலையடி பிள்ளையார் ஆலயத்தின் காணியை விடுவித்துத் தரும்படி கோரிக்கை கடிதங்கள் திருகோணமலை மாவட்ட செயலாளருக்கு அனுப்பிவைக்கும்படி மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

இவ்வாறு பெறப்பட்ட மகஜர்கள் மூதூர் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டதாக மூதூர் பிரதேச இந்துகுருமார் சங்கத் தலைவர் சிவசிறி இ.பாஸ்கரன் குருக்கள் தெரிவித்தார்.

# வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டு காசோலைகள் வழங்கிவைப்பு

## செங்கலடியில் வியாழேந்திரன் எம்.பி. கையளிப்பு







பயங்கரவாத வன்செயல் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் வணக்கஸ்தலங்களுக்கான நட்டஈட்டு காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (26) திகதி செங்கலடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இளப்பீடுகளுக்கான தேசிய செயலகத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பயங்கரவாத வன்செயல் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் வணக்கஸ்தலங்களுக்கான நட்டஈட்டுக்கான காசோலைகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டுவரும் நிலையில் செங்கலடி ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் வணக்கஸ்தலங்களுக்கான நட்டஈட்டுக் காசோலைகள் வழங்கும் நிகழ்வானது ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்துகொண்டிருந்ததுடன், பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் வணக்கஸ்தலங்களுக்கான நட்டஈட்டுக்கான காசோலைகளையும் வழங்கினார்.

இதன்போது ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 56 நபர்களுக்கும் 09 வணக்கஸ்தலங்களுக்குமாக 39,71,000 ரூபா பெறுமதியான நட்டஈட்டுக் காசோலைகள் இதன்போது வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், முற்போக்கு தமிழர் கழகத்தின் பிரதிநிதிகள் மற்றும் ஆலய அறங்காவலர் சபையினர், நட்டஈட்டுக் காசோலைகளை பெற வருகை தந்திருந்த பயனாளிகள் என பலரும் கலந்துகொண்டிருந்ததுடன், தமக்கான நட்டஈட்டுக் காசோலைகளை பெற்றுக்கொடுத்தமைக்காக இராஜாங்க அமைச்சருக்கும், அரசாங்கத்திற்கும் தமது நன்றியை ஆலய அறங்காவலர் சபையினரும், ஏனைய பயனாளிகளும் இதன்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் ஊடகவியலாளர் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பில் ஊடகவியலாளர் தேவபிரதீபன் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த ஊடகவியலாளரான இலட்சுமணன் தேவபிரதீபன் எனும் ஊடகவியலாளரே நேற்று முன்தினம் (26) தாக்குதலுக்கு இலக்காகி செங்கலடி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வந்தாறுமூலை பிரதான வீதியில் அமைந்திருந்த பஸ் தரிப்பிடம் ஒன்று இடித்து அகற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக அங்கு செய்தி சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளர் மீதே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் உபாதைக்குள்ளான ஊடகவியலாளர் செங்கலடி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தான் சுதந்திரமாக செய்தி சேகரித்துக் கொண்டிருந்தபோது, திடீரென ஒருவர் வந்து தன்னை தாக்கியதாகவும், இதனால் தலையின் பின்பக்கம் மற்றும் கையிலும் வலி ஏற்பட்டுள்ளதாகவும், இவ்வாறு தன்னைத் தாக்கியவர் கிழக்கு பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஒருவர் எனவும் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் இலட்சுமனன் தேவபிரதீபன் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக வடக்கு, கிழக்கு பகுதியில் ஊடகவியலாளர்கள் தமது கடமைகளை சுயாதீனமாக மேற்கொண்டு வரும்போது அவர்களது கடமைக்கு இடையூறு மேற்கொள்ளப்பட்டு, தாக்குதல்களும் இடம்பெற்று வருகின்றமை எடுத்துக்காட்டத்தக்கது. எனினும், இவ்வாறான ஊடகவியலாளர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் மிலேச்சத்தனமான சம்பவங்கள் தொடர்பில் ஊடக அமைப்புகளும், சிவில் அமைப்புகளும், கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# தென்கிழக்குப் பல்கலை மெய்யியல்துறை பேராசிரியராக றியால் பதவியுயர்வு

(மாவடிப்பள்ளி நிருபர்)



தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மெய்யியல்துறை பேராசிரியராக கலாநிதி ஏ.எல்.எம்.றியால் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மெய்யியல்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி ஏ.எல்.எம்.றியால் 06.12.2019ஆம் திகதிமுதல் பேராசிரியராக பதவியுயர்வு பெறுகிறார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மெய்யியலில் விசேட கலைமாணிப் பட்டத்தையும் முதுதத்துவமாணி பட்டத்தையும் பூர்த்திசெய்துள்ள இவர் தனது கலாநிதி பட்டத்தினை சீன Xiamen பல்கலைக்கழகத்திலும் நிறைவுசெய்துள்ளார்.

பல்கலைக்கழகத்தில் பல்வேறு பதவிகளை வகித்துள்ள இவர் மேற்கத்தேய மெய்யியல், அரசியல் மெய்யியல், ஒழுக்க மெய்யியல் போன்ற துறைகளில் தனது ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதோடு பல தேசிய, சர்வதேச ஆய்வு மாநாடுகளிலும் பங்குபற்றி தனது ஆய்வுகளை சமர்ப்பித்துள்ளார்.

# திருமலையில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - கொட்பே மீன்பிடி கிராமத்தில் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் சந்தேகநபர் ஒருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் திருகோணமலை பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் (26) மாலை குறித்த சந்தேகநபரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 7 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப் பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர் அதே பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய குடும்பஸ்தர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த நபரை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் சீனக்குடா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை இன்று திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

# கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையில் பண்டகசாலை நிர்வாகம் தொடர்பான செயலமர்வு





(பொலிவேரின் நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைப் பிரிவின் கீழ் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்காக ஏற்பாடுசெய்யப்பட்ட பண்டகசாலை நிர்வாகம் தொடர்பான ஒருநாள் செயலமர்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கணக்காளர் உசைனா பாரிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண கணக்காய்வு திணைக்களத்தின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் எச்.எம்.எம்.றசீட் (SLACS-1) வளவாளராகக் கலந்துகொண்டார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, MOH மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைப் பிரிவின்கீழ் உள்ள வைத்தியசாலைகள் ஆகியவற்றில் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# 20 இலட்சம் ரூபா நிதியில் ஏறாவூரில் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம் திறப்பு





(ஏறாவூர் நிருபர்)

சபிரிகம தேசிய திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு ஏறாவூர் - 06 கிராம அபிவிருத்திச் சங்கத் திற்கென சுமார் 20 இலட்சம் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட நிரந்தரக் கட்டடம் பொதுமக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

ஏறாவூர் பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

ஆர். றிக்னாஸ் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி சாபிறா வசிம், பிரதேச திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ஏஎச்.சிகானா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

கடந்த சுமார் இருபது வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் இக்கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கென நிரந்தரக் கட்டடமொன்று அமைக்கப்படாதிருந்ததனால் இப்பிரதேச மக்களின் பொதுவான தேவைகளை நிறைவேற்றுவதில் பல்வேறு சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

திறப்புவிழா நிகழ்வின்போது கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றிய சிறுவர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

# முஸ்லிம்களின் வரலாற்றுத் தொன்மையான தப்தர் ஜெய்லானி மினாராவை திட்டமிட்டு அழித்துள்ளமை பாரிய அநீதியாகும்

## நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவிப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

இந்த அரசாங்கம் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுத் தொன்மையான தப்தர் ஜெய்லானி மினாராவை திட்டமிட்டு அழித்துள்ளமை பாரிய அநீதியாகும் - என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

தப்தர் ஜெய்லானி தொன்மைவாய்ந்த பள்ளிவாசலாகும். இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுச் சின்னங்களுள் இதுவும் முக்கியமான ஒன்று. இதற்கான வரலாற்று ஆதாரங்கள் பலவுள்ளன.

இந்தப் பள்ளிவாசல் குறித்து இரத்தினபுரி கச்சேரியில் பணிபுரிந்த ஆங்கிலேய அரசாங்க அதிபர்கள் தமது தினக்குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளார்கள். எச்.மூயாட்ஸ் 13 ஜனவரி 1857 இலும், எச்.வேஸ் 20 மார்ச் 1887 இலும், ஆர்.பி.ஹெலிங்கஸ் 12 பெப்ரவரி 1910 இலும் தமது டயரியில் ஜெய்லானி பள்ளிவாசல் குறித்து பதிவுசெய்துள்ளார்கள்.

அதேபோல ஜீ.கூக்ஸன் 12 ஜனவரி 1911இலும், ஆர்.என்.தைனி 26 மார்ச் 1914இலும், ஜீ.எச்.கொலின்ஸ் 1922இலும் தமது டயரியில் இப்பள்ளிவாசல் குறித்து பதிவுசெய்துள்ளார்கள். இதனைவிட இப்பள்ளிவாசலின் தொன்மை குறித்த இன்னும் சில வரலாற்று ஆதாரங்களும் உள்ளன.

இது இவ்விதமிருக்க சிறிமா அம்மையாரின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்காலத்தில் 1971இல்தான் இங்கு தாதுகோபுரம் அமைக்கப்பட்டது. அப்போது கலாசார அமைச்சின் செயலாளராக இருந்த கலாநிதி நிசங்க விஜேரத்ன இதனை நிர்மாணித்ததோடு அவர்தான் இந்தத் தாதுகோபுரத்திற்கு 2000 வருட வரலாறு உண்டு என்றும் குறிப்பிட்டார்.

21 ஜனவரி 1971 தவச பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையில் கிரியல்ல ஞானவிமல தேரோ கூரகலயில் புதிதாக தாதுகோபுரம் நிர்மானிக்கப்பட்டுள்ளதை குறிப்பிட்டுள்ளார். அவர் தொல்லியல் பிரதி ஆணையாளர் சார்ள்ஸ் கொடகும்புரவுடன் 5 தடவைகள் இப்பகுதிக்கு விஜயம் செய்து பரிசீலித்ததாகவும் எனினும், அங்கு பௌத்த கலாசாரத்துக்கான தடயங்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து இதற்கு முன் அங்கு தாதுகோபுரம் இருக்கவில்லை என்பது தெளிவாகின்றது.



13 செப்டெம்பர் 1973இல் தொல்லியல் திணைக்களம் 3 மொழிகளிலும் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் கூரகலயில் முஸ்லிம்களின் வணக்க வழிபாடுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சு செயலாளராக இருந்தபோது அவரது ஆசீர்வாதத்துடன் தடம் பதித்து இன்றும் அவரால் போசிக்கப்பட்டுவரும் ஞானசார தேரர் தான் வெசாக் கொண்டாட்டத்தை கூரகலயில் கொண்டாட வேண்டும் என்ற கோஷத்தை 2013 மார்ச் 17இல் முன்வைத்தார். இந்தக் கோஷத்துக்கு செயல்வடிவம் கொடுக்கும் செயற்பாடுகளையே ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ தற்போது முன்னெடுத்து வருகின்றார்.

இதன் பிரதிபலிப்புதான் தற்போது இடம்பெற்றுள்ள வரலாற்றுத் தொன்மைவாய்ந்த ஜெய்லானி பள்ளிவாசல் மினாரா அழிப்பாகும். ஜனாதிபதி இவ்வாறு உறுதியாகச் செயற்படுவதற்கு அவருக்கு பலத்தைப் பெற்றுக்கொடுத்தவர்கள் யார் என்பதை முஸ்லிம் சமூகம் மீண்டும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா உள்ளிட்ட முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20இற்கு ஆதரவாக வாக்களித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கி ஜனாபதிக்கு பலத்தைப் பெற்றுக்கொடுத்தமையே இதற்கு காரணம். இந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமூகத்தைப் பற்றி அக்கறையின்றி செயற்பட்டதன் விளைவுகளையே இப்போது நாம் அனுபவித்து வருகின்றோம்.

இந்த அரசினால் முஸ்லிம்களுக்கு என்ன அநியாயங்கள் நடந்தாலும் இந்த அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பன்மையைக் கொடுத்து இன்னமும் பலப்படுத்திக்கொண்டிருக்கும் இந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய்மூடி மௌனிகளாக இருப்பது குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன்.

காபட் வீதிக்கும், கொன்ரக்ட்களுக்கும் சோரம் போகாது சமூகத்தின் பாதிப்புகள் குறித்து பேச இவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கண்ணைக் குத்தியபின் வரையப்படுகின்ற அழகிய ஓவியங்கள் எமக்கு எந்தப்பலனும் தரப்போவதில்லை. இதேபோலத்தான் சமூகத்தின் இருப்புக்கான ஆதாரங்களை அழித்து சிறுசிறு சலுகைகளைப் பெற்றுக்கொள்வதால் சமூகத்திற்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை என்பதை இவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# ரஷ்யாவை நேரடியாக தொட அமெரிக்கா அஞ்சுவது ஏன்?

## இந்தியா ஏன் நடுநிலை வகிக்கிறது?

ரஷ்யப் படைகள் உக்ரைனின் டொனெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் ஆகிய இரு பகுதிகளைக் கைப்பற்றியதற்கே அமெரிக்காவைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா வரையில் பல நாடுகள் ரஷ்யா மீது பல்வேறு தடைகள் விதித்த நிலையிலும் ரஷ்யா நேற்றுமுன்தினம் மேற்கத்தேய நாடுகளுடன் பேச்சுவார்த்தைக்குத் தயாரானது.

இந்தப் பேச்சுவார்த்தையில் எவ்விதமான தீர்வும் எடுக்கப்படாத நிலையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் நேற்று காலையில் உக்ரைனின் கிழக்குப் பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கைகளை எடுக்க உத்தரவிட்டார்.

ரஷ்யா- உக்ரைன் ஆகிய நாடுகள் சோவியத் ஒன்றியத்துக்குக் கீழ் ஒன்றாகவே இருந்தன, ஆனால், 1991ஆம் ஆண்டு டிசம்பரில் சோவியத் ஒன்றியம் உடைந்தபோது உக்ரைன் தனித் தனியாகப் பிரிந்தது. உக்ரைன் பிரதமர்களைக் கட்டுப்படுத்தி ரஷ்யா நிழல் இராச்சியம் நடத்தியது.

ஆனால், ஆட்சி மாற்றம், மேற்கத்தேய நாடுகளின் தலையீடு ஆகியவற்றின் மூலம் ரஷ்யாவுக்கு ஆதரவாக இருக்கும் தலைவர்கள் தோற்கடிக்கப்பட்டனர், இதன் பின்புதான் 2014இல் உக்ரைனுக்குச் சொந்தமான கிரிமியாவை ரஷ்யா கைப்பற்றியது. ரஷ்யா அதை தனது நாட்டின் ஒரு பகுதியாக அறிவித்தது.

தற்போது உக்ரைனை ஆயுதப் போர் மூலம் கைப்பற்ற வேண்டும் என்பது ரஷ்யாவின் முக்கிய இலக்காகக்கொண்டுள்ளது, உக்ரைனை கைப்பற்றுவது மூலம் ரஷ்யாவின் எல்லை, வர்த்தகம், ஆதிக்கம் என அனைத்தும் விரிவாக்கம் அடையும்.

இதேவேளை, உக்ரைனில் பல பகுதிகளில் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியாளர்கள் உருவாகியுள்ளனர். இதை முக்கிய வாய்ப்பாக ரஷ்யா பார்க்கிறது. சர்வதேச சந்தையில் ரஷ்யா ஏற்கனவே ஆதிக்கம் செய்துவரும் நிலையில் ரஷ்யாவின் உக்ரைன் கைப்பற்றும் திட்டத்தை முடக்க வேண்டும் என்பதற்காக மேற்கத்தேய நாடுகள் ஒன்று கூடியுள்ளன. சரி அமெரிக்கா ரஷ்யாவை தொட தயங்குவது ஏன் தெரியுமா...?

### NATO அமைப்பு

உண்மையில் உக்ரைன் NATO அமைப்பின் உறுப்பினர் அல்ல. ஜூன் 2020இல் NATO அமைப்பின் Interoperability programஇல் உக்ரைன் சேர்க்கப்பட்டது. ஆனால், அதன் பின் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி பல முறை NATOவின் உறுப்பினராகச் சேர்க்க வலியுறுத்தியும் அமெரிக்கா மற்றும் பிற மேற்கத்தேய நாடுகள் திட்டமிட்டு ஒதுக்கிவைத்து வந்தன.

NATOவின் உறுப்பினராக இருக்கும் அனைத்து நாடுகளுக்கும், NATO நாடுகள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதுதான் ஒப்பந்தம். ஆனால், உக்ரைன் NATOவின் நிரந்தர உறுப்பினராக இல்லாத நிலையில் NATO படைகள் உக்ரைன் எல்லையிலுள்ளன. இது ரஷ்யாவிற்குக் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

### யார் யாருக்கு ஆதரவு?

ரஷ்யா NATO படைகளைத் தொட்டால் அது கட்டாயம் அமெரிக்காவுடன் நேரடியாகப் போர் தொடுப்பதாகும். இதனாலேயே ரஷ்யா கிழக்கு உக்ரைன் பகுதிகள் வாயிலாக நுழைகிறது. மேற்கு பகுதியிலிருக்கும் உக்ரைன், NATO படையைத் தாக்கினால் கட்டாயம் 3 உலகப் போர் நிச்சயம்.

உக்ரைனுக்கு அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா என NATO படையில் இருக்கும் அனைத்து நாடுகளும் உறுதுணையாக உள்ளன. இதேபோல் ரஷ்யாவுக்கு சீனா, ஈரான், வட கொரியா மற்றும் சோவியத் ஒன்றியத்தின் ஆர்மீனியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகள் உறுதுணையாகவுள்ளன.

அனைத்தையும் தாண்டி அமெரிக்கா மற்றும் ரஷ்யாவிடம் 8000 அணு ஆயுதங்கள் உள்ளன. இதைத் தாண்டி ரஷ்யாவிடம் உலகமே பயப்படும் TSAR bomb உள்ளது, மேலும் புட்டின் பேசுகையில், ரஷ்யாவின் செயலுக்கு எந்த நாடு தடையாக இருந்தாலும், ரஷ்யாவிடமிருந்து எதிர்பார்த்திராத பின்விளைவுகளை எதிர்கொள்ளும் என எச்சரித்துள்ளார்.

இதனால் அமெரிக்காவும் சரி, ரஷ்யாவும் சரி நேரடியாகத் தொடத் தயங்கி வருகின்றன. இதற்கிடையில் அமெரிக்காவின் முக்கிய வர்த்தகத் திட்டமான NORD Stream 2 gas பைப்லைன் திட்டம் தடை செய்யப்படும் என எச்சரித்து பின்பு தடையை ஒத்திவைத்தது.

2ஆவது உலகப் போருக்கு இணையாக வர்த்தகம், பொருளாதாரப் பாதிப்பை கொரோனா தொற்றுக் காலத்தில் இந்தியா உட்பட உலகில் அனைத்து நாடுகளும் எதிர்கொண்டுள்ள நிலையில், ரஷ்யா - உக்ரைன் போர் மூலம் 3ஆவது உலகப் போர் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

3ஆவது உலகப் போர் வெடித்தால் தற்போது இருக்கும் பணவீக்கம், நாணய மதிப்பின் ஆதிக்கம் மூலம் ஏழை நாடுகளுக்கு இணையாக வல்லரசு நாடுகளும் கடுமையாகப் பாதிக்கப்படும். இந்தச் சரிவிலிருந்து மீண்டு வர பல வருடங்களாகும். மேலும் 3ஆவது உலகப் போர் மூலம் உண்மையில் யார் வல்லரசு நாடு என்பதும் தெரிந்துவிடும்.

இந்தியா ஏற்கனவே பாகிஸ்தான், சீனாவை எதிர்கொண்டிருக்கும் நிலையில் 3ஆவது உலகப் போர் வெடித்தால் அதிகளவிலான பாதிப்பை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். இந்தியாவின் பொருளாதாரம், வர்த்தகம், வேலைவாய்ப்பு சந்தை தடுமாறிவரும் நிலையில் 3ஆவது உலகப் போர் என்பது இந்தியாவுக்குப் பெரும் பிரச்சினை.

மேலும் இந்தியா - ரஷ்யா நட்புறவு பல ஆண்டுகளாகச் சிறப்பாக உள்ளது, சீன எல்லை பிரச்சினை தவிர, அனைத்துப் பாதுகாப்பு சார்ந்த விடயத்திலும் இந்தியாவிற்கு ரஷ்யா துணை நின்றுள்ளது. குறிப்பாக, ஆயுத கொள்முதலில் இந்தியா- ரஷ்யாவுக்கு மத்தியில் நீண்டகால பந்தமுள்ளது. இதனாலேயே இந்தியா தற்போது ரஷ்ய - உக்ரைன் மோதலில் நடுநிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# நீங்கள் சொல்லும் இடத்தில் பேச்சு நடத்த முடியாது நாங்கள் சொல்லும் இடத்திற்கு நீங்கள் வாருங்கள்

## உக்ரைன் ஜனாதிபதி அதிரடி



''பெலாரஸில் வைத்து ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாது'' என அறிவித்த உக்ரைன் ஜனாதிபதி செலன்ஸ்கி, பேச்சுவார்த்தை நடத்துவதற்காக 5 இடங்களின் பெயர்களை பரிந்துரைந்துள்ளார்.

இருநாடுகளுக்கிடையேயான மோதல் முற்றியுள்ள நிலையில், ''பெலாரஸின் கோமல் நகரில் பேச்சுவார்த்தை நடத்த குழு அனுப்பத் தயார்'' என ரஷ்ய ஜனாதிபதி மாளிகை நேற்று அறிவித்திருந்தது.

இந்நிலையில், உக்ரைனை தாக்க பெலாரஸை ரஷ்யா பயன்படுத்துவதால் அங்கு பேச்சு நடத்த முடியாது என்றும், அதற்கு பதில் வேறொரு இடத்தில் பேச்சுவார்த்தை நடத்தினால் அதில் பங்கேற்க தயார் என்றும் ஜனாதிபதி செலன்ஸ்கி அறிவித்தார்.

மேலும், போலந்து தலைநகர் வார்சா, சுலோவாக்கியா தலைநகர் பிராட்டிஸ்லாவா, ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்ட் மற்றும் இஸ்தான்புல், பாகு உள்ளிட்ட 5 இடங்களில் வைத்து ரஷ்யாவுடன் பேசத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உக்ரைன் - ரஷ்ய போருக்கு மூல காரணமே அமெரிக்காதான்

## வடகொரியா குற்றச்சாட்டு



உக்ரைன் - ரஷ்யா இடையிலான போருக்கு மூல காரணமே அமெரிக்காதான் என வட கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

வடகொரியாவின் வெளியுறவுத்துறை அமைச்சின் இணையதளப் பக்கத்தில் ''அமெரிக்காதான் இந்தப் போருக்கு முழுக்க முழுக்க காரணம்'' என குற்றஞ்சாட்டி பதிவொன்றை பதிவிட்டுள்ளது.

அமெரிக்கா தன்னிச்சையாக உக்ரைனுக்கு ஆதரவு தர தொடங்கியதே இந்தப் போருக்கு முக்கிய காரணம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் இந்தப் பேரழிவு ஒருபோதும் நடந்திருக்காது



நான் தேர்தலில் வெற்றிபெற்று அமெரிக்க ஜனாதிபதியாக இருந்திருந்தால், உக்ரைன் - ரஷ்யா இடையே இந்த நிலைமை ஒருபோதும் ஏற்பட்டிருக்காது என முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

புளோரிடாவில் நடைபெற்ற கட்சி மாநாட்டில் பேசிய அவர்,

தனது தலைமையிலான ஆட்சியில் அமெரிக்கா சக்தி வாய்ந்ததாகவும், வலுவாகவும் இருந்ததால் உலக மக்களும் அமைதியாக இருந்ததாக குறிப்பிட்டார்.

தாம் ஜனாதிபதியாக இருந்தபோது அமெரிக்காவின் கருத்துகளை ரஷ்யா மதித்ததாகவும் ட்ரம்ப் குறிப்பிட்டார். தற்போது ஜோ பைடன் தலைமையிலான நிர்வாகம் பலவீனமாகவும், திறமையற்றும் இருப்பதாகவும் சாடிய ட்ரம்ப், இந்த திறமையற்ற நிர்வாகம்தான் உக்ரைனின் இந்த நிலைமைக்கு வழிவகுத்திருப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும், ''நான் மட்டும் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்திருந்தால் இந்த பேரழிவு ஒருபோதும் நடந்திருக்காது, நடந்திருக்க விடமாட்டேன்'' எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச பணப்பரிவர்த்தனை தளத்திலிருந்து ரஷ்யாவை நீக்க அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் முடிவு




சர்வதேச பணப்பரிவர்த்தனை தளத்திலிருந்து ரஷ்யாவை நீக்க அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் முடிவு செய்துள்ளன.

ஏற்கனவே ரஷ்யா மீது பல்வேறு பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், சர்வதேச பணப்பரிவர்த்தனை தளமான சுவிப்ட் (SWIFT) தளத்திலிருந்து ரஷ்யாவை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் வங்கியிலிருந்து மற்றொரு நாட்டின் வங்கிக்கு பாதுகாப்பாக பணப்பரிவர்த்தனை செய்ய உதவும் சுவிப்ட் தளம் தற்போது 200இற்கும் மேற்பட்ட நாடுகளில் 11ஆயிரத்திற்கும் மேற்பட்ட வங்கிகளால் பயன்படுத்தப்படுகிறது.

அமெரிக்காவுக்குப் பின்னர் சுவிப்ட் தளத்தை அதிகளவில் பயன்படுத்தும் நாடாக இரண்டாவது இடத்தில் இருக்கும் ரஷ்யாவில், 300இற்கும் மேற்பட்ட வங்கிகள், நிதி நிறுவனங்கள் இந்த சேவையை பயன்படுத்துகின்றன.

இந்த நடவடிக்கை ரஷ்யாவின் சர்வதேச எல்லை தாண்டிய பணப்பரிவர்த்தனைக்கு பாதிப்பை உண்டாக்கலாம் எனக் கூறப்படுகிறது. மேலும், ரஷ்யாவின் ஏற்றுமதி, இறக்குமதிக்கான பணப்பரிவர்த்தனையை தடுப்பதோடு, ரஷ்யாவில் விநியோகத்தையும் பாதித்து விலையேற்றத்திற்கு வழிவகுக்கும் என கூறப்படுகிறது.

# புட்டினை கௌரவ தலைவர் பதவியிலிருந்து நீக்கிய சர்வதேச ஜூடோ கூட்டமைப்பு

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு காரணமாக சர்வதேச ஜூடோ கூட்டமைப்பின் (ஐஜேஎவ்) கௌரவ தலைவர் பதவியிலிருந்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் இடைநீக்கம் செய்யப்பட்டதாக விளையாட்டு நிர்வாகக் குழு அறிவித்துள்ளது.

முன்னதாக தற்காப்புக் கலையான ஜூடோவில் ப்ளெக் பெல்ட் வாங்கியவர் புட்டின். பலமான தலைவராக மட்டுமன்றி, வலிமையான மனிதராகவும் தன் இமேஜைப் பார்த்துக்கொள்பவர். அவருக்கு 70 வயது என்றால் யாரும் நம்பமாட்டார்கள். விளாடிமிர் புட்டின், லெனின்கிராட்டில் (தற்போது செயின்ட் பீட்டர்ஸ்பர்க்) ஒரு குடியிருப்புப் பகுதியில் கடினமான சூழல்களில் வளர்ந்தார். பெரும்பாலும் பெரிய மற்றும் வலிமையான உள்ளூர் சிறுவர்களுடன் அவர் சண்டையிட்டார். அதுவே அவரை ஜூடோ கற்கத் தூண்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 50 இலட்சம் பேர் அகதிகளாகும் அபாயம்

## ஐ.நா. அகதிகள் ஆணையம் தகவல்

ரஷ்யாவின் படையெடுப்பால், 1.50 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உக்ரைனிலிருந்து போலந்து மற்றும் பிற அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். இதேநிலை நீடித்தால் அகதிகளின் எண்ணிக்கை 50 இலட்சமாக உயரும் என ஐ.நாவின் அகதிகள் ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உக்ரைனிலிருந்து வெளியேறியவர்களுள் பெரும்பாலானோர் போலந்து மற்றும் மோல்டோவாவுக்கு சென்றிருப்பதாகவும் 18 முதல் 60 வயதுக்குட்பட்ட ஆண்கள் நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டிருப்பதால் பெண்கள் மற்றும் குழந்தைகளே அதிகளவு வெளியேறி இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

போலந்து, சுலோவாக்கியா, ஹங்கேரி, ருமேனியா உள்ளிட்ட அண்டை நாடுகள் உக்ரைனிலிருந்து அகதிகளாக வருவோருக்கு தேவையான ஏற்பாடுகளை செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. உக்ரைனிலிருந்து வெளியேறும் அகதிகள் விசா இன்றி வரலாம் என அயர்லாந்து அறிவித்திருக்கிறது.

இதேபோல், பல ஐரோப்பிய நாடுகள் உக்ரைனிய அகதிகளுக்கு அடைக்கலம் கொடுக்க தயாராகி வருகின்றன. தற்போதைய சூழலில் உக்ரைனியர்கள் சுமார் 140 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்கலாம் என கூறப்படுகிறது.

### 50 இலட்சம் பேர் அகதிகளாகும் அபாயம்

உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதலுக்கு அஞ்சி 1.5 இலட்சம் பேர் அகதிகளாக தாய்நாட்டை விட்டு அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். இதேநிலை நீடித்தால் அகதிகளின் எண்ணிக்கை 50 இலட்சமாக உயரும் என்று ஐ.நா. அமைப்பு எச்சரித்துள்ளது.

உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யா, இன்றுடன் 5ஆவது நாளாக தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது. ரஷ்யப் படைகள் தங்களது ஏவுகணைகள், அதிநவீன ஆயுதங்களையும், பீரங்கிகளையும் பயன்படுத்தி உக்ரைனில் மிகப் பெரிய அழிவை ஏற்படுத்தி வருகின்றன. இருநாடுகளுக்கிடையே நிலவும் சூழல் நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதால் உலக நாடுகள் கவலையடைந்துள்ளன.



கடந்த சில நாட்களாக பொதுமக்கள் வாழ்விடங்களில் தாக்குதல் நடத்தப்படாத நிலையில், தற்போது உக்ரைன் நகரில் மக்கள் வசிக்கும் இடங்களிலும் ரஷ்யப் படைகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. அதேநேரத்தில், உக்ரைன் மீதான தாக்குதலுக்கு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உட்பட பல நாடுகள் ரஷ்யா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட 28 நாடுகள் உக்ரைனுக்கு மருத்துவ மற்றும் இராணுவ உதவிகளை வழங்க ஒப்புக் கொண்டுள்ளன. அதேநேரம், உக்ரைனுக்கு ஆயுதம் வழங்குவது குறித்தும் மேற்கண்ட நாடுகள் ஆலோசித்துள்ளன.

உக்ரைனின் தலைநகர் கீவ் உள்ளிட்ட சில முக்கிய நகரங்களை ரஷ்யப் படைகள் பெருமளவில் ஆக்கிரமித்துள்ளதாக அமெரிக்க நிறுவன செயற்கைக்கோள் புகைப்படங்கள் கூறியுள்ளன. சமீபத்திய ஆதாரங்களின்படி, உக்ரைனின் டினீப்பர் நதியிலுள்ள ககோவ்கா நீர்மின் நிலையத்திற்கு அருகே ரஷ்யா தனது படைகளை நிறுத்தியுள்ளது. இத்தனை நெருக்கடிகளுக்கு மத்தியில் உக்ரைன் ஜனாதிபதி, இராணுவத்தினருடன் இணைந்து ரஷ்யாவுக்கு எதிராக போராடி வருகிறார். உக்ரைன் டென்னிஸ் வீரர் செர்ஜி ஸ்டாகோவ்ஸ்கி, ரஷ்ய தாக்குதலை எதிர்த்துப் போராடுவதற்காக தன்னை உக்ரைன் இராணுவத்தில் இணைத்துக்கொண்டார்.

அதேபோன்று 36 உக்ரைன் இராணுவத்தில் 36,000 பெண் சிப்பாய்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று காலை நிலைவரப்படி உக்ரைன் இராணுவத் தாக்குதலில், ரஷ்ய விமானமொன்று கார்கிவ் நகரின் மையப்பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. தலைநகர் கீவ்விலுள்ள கட்டடம் ஏவுகணைகளால் தகர்க்கப்பட்ட புகைப்படத்தை வெளியிட்டுள்ள உக்ரைன் உள்துறை அமைச்சு, அமெரிக்காவின் 9/11 தாக்குதல்களை ஒப்பிட்டு இரு படங்களையும் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

உக்ரைன் மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து ரஷ்யாவில் ஜனாதிபதி புட்டினுக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அதேநேரம் ரஷ்ய ஊடகங்களில் உக்ரேனிய நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், ரஷ்யாவுக்கு எதிரான கருத்துகளை ஒளிபரப்பவும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. உக்ரைனுடனான போரில் தங்களது இராணுவ அதிகாரி நூர்மகோமெட் காட்ஜிமகோமெடோவ் என்பவர் கொல்லப்பட்டதாக முதன்முதலாக ரஷ்யா அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

பீரங்கி, வெடிகுண்டுகள், துப்பாக்கிகள், ஏவுகணைகள் பயன்படுத்தி தாக்குதல்களை நடத்திவந்த ரஷ்யா, தற்போது அணு ஆயுத தாக்குதலை உக்ரைனுக்கு எதிராக நடத்த வாய்ப்புள்ளதாக அஞ்சப்படுகிறது. இந்தப் போரில் ரஷ்யாவுக்கு பல வகையிலும் பெலாரஸ் உதவியாக இருந்துவருகிறது.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோவுடன் தொலைபேசியில் பேசினார்.

அப்போது அவர் பெலாரஸ் ஜனாதிபதியிடம், ''பெலாரஸ் மண்ணில் ரஷ்ய அணு ஆயுதங்களை நிலைநிறுத்த அனுமதிக்கக் கூடாது. உக்ரைன் மீதான தாக்குதல்களின் கூட்டாளியாக மாற வேண்டாம். அப்படிச் செய்வதால், யாருக்கும் சாதகமாக இருக்காது. ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான போரை முடிவுக்கு கொண்டுவர உதவவேண்டும். பெலாரஸை விட்டு ரஷ்ய துருப்புகளை வெளியேற்ற உத்தரவிட வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் தொடர் தாக்குதலால் கடந்த 4 நாட்களில் மட்டும் கிட்டத்தட்ட 1.5 இலட்சம் மக்கள் அகதிகளாக தங்களது குழந்தைகள், மூட்டை முடிச்சுகளுடன் போலந்து உள்ளிட்ட நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கடந்த 24ஆம் திகதிமுதல் கிட்டத்தட்ட 1,16,000 உக்ரைன் மக்கள் அண்டை நாடுகளான போலந்து, ஹங்கேரி, மால்டோவா, ஸ்லோவாக்கியா மற்றும் ருமேனியா ஆகிய நாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளதாகவும், இது மேலும் அதிகரிக்கும் என்றும் ஐ.நா. அகதிகள் அமைப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதர் லிண்டா தோமஸ்-கிரீன்ஃபீல்ட் தெரிவிக்கையில், ''ரஷ்யாவின் படையெடுப்பால் 1,50,000இற்கும் அதிகமான உக்ரைன் மக்கள் அண்டை நாடுகளுக்கு அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். ஐ.நா. அகதிகள் அமைப்பின் மதிப்பீட்டின்படி, வரும் நாட்களில் உக்ரைனிலிருந்து மக்கள் வெளியேறுவது அதிகமானால் உக்ரைன் அகதிகளின் எண்ணிக்கை 50 இலட்சமாக (5 மில்லியன்) உயரக்கூடும். இவர்கள் வாகனங்கள், கால் நடையாக அண்டை நாடுகளுக்கு அகதிகளாக தஞ்சமடைந்து வருகின்றனர்'' - என்றார்.

## 5 நாட்களை எட்டிய போர்:



# ரஷ்யா உக்கிர தாக்குதல்; பற்றி எரிகிறது உக்ரைன்

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆவேச தாக்குதல் இன்று 5ஆவது நாளாகவும் தொடர்கிறது. அந்நாட்டின் கார்கிவ் நகரை கைப்பற்றியுள்ள ரஷ்யப் படைகள், தலைநகர் கீவ்வை நான்கு திசைகளிலிருந்தும் தாக்கி வருவதால், அந்த நகரின் பல இடங்கள் பற்றி எரிகின்றன.

உக்ரைன் மீது கடந்த 24ஆம் திகதி போர் தொடுத்த ரஷ்யா, முதல் நாளில் ஏவுகணைகளை வீசியும், விமானங்கள் மூலம் குண்டுகளை வீசியும் தாக்கியது. உக்ரைனிலுள்ள இராணுவத் தளவாடங்களை குறிவைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன. உக்ரைன் - ரஷ்ய எல்லை, பெலாரஸ், கிரீமியா தீபகற்பம், கிழக்கு உக்ரைனிலுள்ள ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் பகுதி ஆகியவற்றிலிருந்து ரஷ்ய இராணுவம் தொடர்ந்து தாக்குதலை நடத்தியது. இதில் உக்ரைனின் முக்கிய நகரங்களில் கடும் சேதம் ஏற்பட்டது.

2ஆவது நாளான வெள்ளிக்கிழமை தலைநகர் கீவ்வை நோக்கி ரஷ்ய வீரர்கள் முன்னேறினர். அந்த நகரை சுற்றிவளைக்க இராணுவ பீரங்கிகள் மூலம் முன்னேறி சென்றனர். குறிப்பாக, பெலாரஸின் எல்லையிலிருந்து உக்ரைனுக்குள் ரஷ்யப் படை புகுந்தது. அதேபோல் மற்ற நகரங்களிலும் ரஷ்யப் படைகள் நுழையும் முயற்சியில் ஈடுபட்டன.

இந்நிலையில், 3ஆவது நாளான சனிக்கிழமை ரஷ்ய இராணுவத்தின் பிரதான படைப்பிரிவு கீவ் நகருக்குள் செல்ல வழி ஏற்படுத்தும் வகையில் சிறிய படைக்குழு அந்நகருக்குள் நுழைய முயற்சித்ததாகவும், அதை தாங்கள் முறியடித்ததாகவும் உக்ரைன் தெரிவித்துள்ளது. மேலும் கீவ்விலிருந்து 40 கிலோமீற்றர் தொலைவிலுள்ள வானிஸ் கீவ் நகரத்தில் ஒரு விமானத் தளத்தை கைப்பற்றும் முயற்சியில் முறியடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

மேலும், கீவ் நகரிலுள்ள அணையை குறிவைத்து ஏவப்பட்ட ஏவுகணையை இடைமறித்து தாக்கி அழித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தலைநகர் கீவ்வுக்குள் புகுந்துள்ள ரஷ்ய இராணுவ வீரர்களுடன் உக்ரைன் வீரர்கள் தெருக்களில் துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டு வருகிறார்கள். மேலும் அங்குள்ள குடியிருப்புகள் மீதும் ஏவுகணைகள் வீசப்பட்டன. இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவி வருகிறது.

இந்நிலையில், 4ஆவது நாளான நேற்று உக்ரைன் மீதான ரஷ்யாவின் அதிரடி தாக்குதல் தொடர்ந்தது. நள்ளிரவில் தலைநகர் கீவ்வில் பல இடங்களில் குண்டுகள் வெடித்துச் சிதறின.

கீவ் நகரை கைப்பற்ற ரஷ்யப் படையினர் தீவிரமாகவுள்ளனர். இந்நிலையில், உக்ரைனின் அனைத்து பகுதிகளிலிருந்தும் தாக்குதல் நடத்த ரஷ்ய இராணுவத்தினருக்கு ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் திடீரென்று சனிக்கிழமை நள்ளிரவு உத்தரவிட்டார்.

உக்ரைனின் அனைத்து நகரங்களுக்குள்ளும் நுழையும் வகையில் எல்லா திசைகளிலிருந்தும் இராணுவத்தை விரிவுபடுத்த உத்தரவிடப்பட்டிருக்கிறது.


தாக்குதலை தீவிரப்படுத்த உத்தரவிடப்பட்டதையடுத்து நள்ளிரவு ரஷ்ய இராணுவத்தின் தாக்குதல் பல மடங்கு அதிகரித்தது. நான்கு திசைகளிலிருந்தும் ஏவுகணைகள் வீசப்பட்டன. ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் கீவ் நகரின் வாசில்கீவ் பகுதியிலுள்ள எண்ணெய்க் கிடங்கு வெடித்துச் சிதறியது. அந்த எண்ணெய்க் கிடங்கிலிருந்து தீப்பிழம்பு பல அடி உயரத்திற்கு எழும்பியது. எண்ணெய்க் கிடங்கு மீது தாக்குதல் நடத்தப்பட்டதை அந்நகர மேயர் நடாலியா பலசினோவிச் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேபோல் உக்ரைன் வடகிழக்கு நகரமான கார்கீவிலுள்ள எரிவாயு குழாய் மீது நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் எரிவாயு குழாய் வெடித்துச் சிதறியதில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. ரஷ்யா தற்போது உக்ரைனில் எரிவாயு மற்றும் எண்ணெய் உட்கட்டமைப்புகளை குறிவைத்து தாக்கிவருகிறது. இதனால் தலைநகர் கீவ் உள்ளிட்ட முக்கிய நகரங்களிலுள்ள எண்ணெய்க் கிட்டங்குகள் தீப்பற்றி எரிகின்றன.

### ரஷ்ய விமானங்கள் பெல்ஜியம் வான்வெளியை பயன்படுத்தத் தடை

இந்நிலையில், உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலை கண்டிக்கும் விதமான ரஷ்ய விமானங்கள் தங்கள் நாட்டு வான்வெளியை பயன்படுத்த பெல்ஜியம் அரசு தடை விதித்து உத்தரவிட்டது. ரஷ்ய விமானங்கள் இனி பெல்ஜியம் வான்வெளியை பயன்படுத்தக்கூடாது என்று பெல்ஜியம் அறிவித்துள்ளது.







இதேபோன்று பின்லாந்தும் ரஷ்ய விமானங்கள் தங்கள் வான்பரப்பில் பறக்க தடை விதித்துள்ளதாக அறிவித்துள்ளது. பின்லாந்து ரஷ்யாவுடன் ஏறக்குறைய 1300 கிலோமீற்றர் எல்லையை பகிர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பின்லாந்து உக்ரைனுக்கு ஆதரவாக குண்டு துளைக்காத ஆடைகள், தலைக்கவசங்கள், நடமாடும் மருத்துவமனைகள் ஆகியவற்றை அனுப்பவுள்ளதாக தெரிவித்துள்ளது. மேலும் உக்ரைனுக்கு சுமார் 40 பீரங்கிகளை அனுப்பவும் முடிவு செய்துள்ளது.

தொடர்ந்து டென்மார்க், அயர்லாந்து நாடுகளை தொடர்ந்து பெல்ஜியம் அரசும் நேற்று இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


### தமது படைக்கு நன்றி தெரிவித்த புட்டின்


உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்திவரும் நிலையில், போரில் ஈடுபட்டுள்ள ரஷ்ய இராணுவத்தின் சிறப்புப் படையினருக்கு அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரம்ளின் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

போர்க்களத்திலிருக்கும் வீரர்களின் உண்மையான மற்றும் தன்னலமற்ற, குறைபாடற்ற சேவைக்கு நன்றி கூறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை தொடங்கி இன்று ஐந்து நாட்களாக ரஷ்யப் படைகள் உக்ரைனுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.







உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரமான கார்கீவில் எரிவாயுக் குழாய்க்கு வெடி வைத்ததோடு, உக்ரைனுக்கு தென்மேற்கே வாசில்கிவ் நகரத்தில் எண்ணெய் உற்பத்தி நிலையத்தையும் ஏவுகணைகள் மூலம் ரஷ்யப் படை தாக்கி அழித்துள்ளது.

### கீவ் எங்களது கட்டுப்பாட்டில்தான் உள்ளது

மேலும், ''கீவ் நகரம் இன்னும் எங்களது கட்டுப்பாட்டில்தான் உள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து எங்களுக்கு முழுமையான ஆதரவு கிடைத்து வருகிறது; போரில் நிச்சயம் வெல்வோம்.'' - இவ்வாறு உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

### ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் கார்கிவ்

இதேவேளை, நேற்று உக்ரைனின் தெற்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளில் இரண்டு முக்கிய பெரிய நகரங்களை கைப்பற்றிவிட்டதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரமான கார்கிவ் நகருக்குள் ரஷ்யப் படைகள் நுழைந்துவிட்டதாகவும் உக்ரைன் இராணுவ வீரர்கள் அவர்களை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருப்பதாகவும், கார்கிவ் ஆளுநர் ஓலே சினெகுபோவ் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கார்கிவ் நகர் யுத்தத்தில் உக்ரைன் வீரர்கள் 471 பேர் சரணடைந்துள்ளதாகவும், உக்ரைனின் 975 இராணுவத்தளங்களை அழித்துள்ளதாகவும் ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

உக்ரைனின் அதிக மக்கள்தொகை கொண்ட இரண்டாவது பெரிய நகரமான கார்கிவ் நகரில் ரஷ்ய இராணுவம் நுழைந்து தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றது. இதேபோல் உக்ரைனும் ரஷ்யாவின் 30 விமானங்கள், 11 ஹெலிகொப்டர்கள் ஆகிய இராணுவ விமானங்களை அழித்துள்ளதாக தகவல் தெரிவித்துள்ளது. ரஷ்ய இராணுவம் தொடர்ந்து நேற்று 4ஆவது நாளாக உக்ரைன் மீது தொடர் தாக்குதல் நடத்தியது.

### ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உக்ரைனின் 4 பகுதிகள்

மேலும் உக்ரைனில் கெர்சான், பெர்டியான்ஸ்க், கெனிஷெஸ்க் மற்றும் சேர்னோபேவ்கா ஆகிய 4 பகுதிகளை கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளதாக ரஷ்யப் படைகள் அறிவித்துள்ளன. சரணடைந்த உக்ரைன் வீரர்களை உரிய மரியாதையோடு நடத்தவுள்ளதாகவும், தேவையான உதவிகளை செய்யவுள்ளதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

### ஊரடங்கு நேரம் அதிகரிப்பு

தலைநகர் கீவ்வில் ஊரடங்கு நேரம் இரவு 10 மணியிலிருந்து காலை 7 மணிவரையிலிருந்த நிலையில், மாலை 5 மணிமுதல் காலை 8 மணிவரையாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் வீட்டைவிட்டு வெளியே வரும் பொதுமக்கள், எதிரியின் நாசவேலை மற்றும் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்களாக கருதப்படுவர் என நகர மேயர் தெரிவித்துள்ளார்.

### ரஷ்ய கட்டுப்பாட்டில் மெலிடோபோல்

இரு தரப்பும் தாங்கள் வலுவாகவுள்ளதாகத் தெரிவித்தபோதும், உக்ரைன் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் எவை, ரஷ்ய கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் எவை என தெளிவான தகவல் இல்லை. உக்ரைனின் தெற்கு நகரமான மெலிடோபோல் தங்களது முழு கட்டுப்பாட்டிலுள்ளதாகவும், ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் கிழக்கு பிராந்தியமான டான்பாஸில் முன்னேற்றம் பெற்றுள்ளதாகவும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

தலைநகர் கிவ்வை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதே ரஷ்யாவின் குறியாகும். இதனால், 4ஆவது நாளாக நேற்று தலைநகர் கீவ் நகரில் உச்சகட்டப் போர் முற்றியது. ரஷ்யப் படைகளை முன்னேற விடாமல் தடுக்க கீவ் நகர வீதிகளில் உக்ரைன் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. இதனால், நகரின் தெருக்களில் துப்பாக்கிச்சூடு சத்தங்கள் கேட்டன. அரச கட்டடங்கள் அமைந்துள்ள பகுதிகளில் வெடிகுண்டுகள் வெடித்தன. குடியிருப்புப் பகுதிகளை குறிவைக்க மாட்டோம் என ஏற்கனவே ரஷ்யப் படை கூறியிருந்தது. ஆனால், குடியிருப்புகளையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை.





ரஷ்ய ஏவுகணைகள் பெரிய அடுக்குமாடி குடியிருப்புகளை தாக்கின. புறநகரிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பொன்றின் மீது ஏவுகணை தாக்கி, கட்டடம் பகுதி அளவு சேதமடைந்த வீடியோ காட்சிகள் வெளியாகின. போர் நடக்கும் பகுதிகளிலிருந்து பொதுமக்கள் ஏற்கனவே வெளியேற்றப்பட்டு, சுரங்க ரயில் நிலையங்களிலும் பதுங்கு குழிகளிலும் பாதுகாக்கப்பட்டுள்ளனர். ஆனாலும், தலைநகர் கீவ்வில் குடியிருப்புகளில் தஞ்சமடைந்துள்ள பொதுமக்களின் கதி கேள்விக்குறியாகியுள்ளது. நகரின் முக்கிய வீதிகளில் உக்ரைன் மற்றும் ரஷ்ய டாங்கிகள் வலம் வந்தபடி இருந்தன. வான்வழித் தாக்குதல் சைரன் சத்தங்கள் ஒலித்தபடி இருக்கின்றன.

ரஷ்யப் படைகள் தலைநகரை கைப்பற்றுவதை தடுக்க உக்ரைன் இராணுவமும் தீவிர தற்காப்பு யுத்தத்தில் ஈடுபட்டு வருகிறது. தற்போதுவரை கீவ் நகரம் எங்கள் கட்டுப்பாட்டில்தான் உள்ளது என்றும், தங்களின் எதிர் தாக்குதலால் ரஷ்யாவின் போர் திட்டம் முழுவதும் நிலைகுலைந்து போயிருப்பதாகவும் உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி வீடியோ வெளியிட்டுள்ளார். இதற்கிடையே, பிரான்ஸ், பிரித்தானியா, செக் குடியரசு, பராகுவே உள்ளிட்ட 26 நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவாக அந்நாட்டிற்கு ஆயுதங்களை அனுப்பிவைத்துள்ளன.

ஆயுதங்களை கீழே போட்டு, சரணடைந்தால் பேச்சுவார்த்தைக்கு தயார் என ரஷ்ய ஜனாதிபதி புட்டின் அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பை உக்ரைன் ஏற்க மறுத்து விட்டது. இதன் காரணமாக, ரஷ்யா - உக்ரைன் போர் ஓய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதுவரை 3,500இற்கும் மேற்பட்ட ரஷ்யப் படையினர் கொல்லப்பட்டுள்ளதாக உக்ரைன் இராணுவம் தன் பேஸ்புக் பக்கத்தில் தெரிவித்துள்ளது. மேலும், 200 ரஷ்ய வீரர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் ரஷ்யாவின் 14 போர் விமானங்கள், 8 ஹெலிகொப்டர்கள், 102 டாங்கிகள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் தாக்குதலால் உக்ரைன் தரப்பில் 33 குழந்தைகள் உட்பட 198 பொதுமக்கள் பலியாகியுள்ளதாக தெவிக்கப்படுகிறது.

### ரஷ்யாவுக்கு எதிராக வலுக்கும் போராட்டம்

உக்ரைன் மீது போர் தொடுத்து தாக்குதல் நடத்திவரும் ரஷ்யாவுக்கு பல்வேறு நாடுகளிலும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. ரஷ்ய அரசுக்கு எதிராக சொந்த நாட்டு மக்களைப் போலவே பிற நாட்டினரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பிற்கு ரஷ்யாவிலேயே எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. அதன் எதிரொலியாக மொஸ்கோ, புனித பீட்டர்ஸ்பெர்க் உட்பட 51 நகரங்களில் போராட்டங்கள் நடைபெற்றன. தடியடி நடத்தி போராட்டக்காரர்களை அப்புறப்படுத்திய பொலிஸார் இதுவரை 1,400 பேர் கைது செய்துள்ளனர்.

பிரித்தானிய தலைநகர் லண்டனில் பிரதமர் இல்லம் அமைந்துள்ள வீதியில், ஏராளமானோர் உக்ரைன் தேசிய கொடியுடன் திரண்டு ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

ஸ்பெயின் தலைநகர் மெட்ரிட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள், அந்நகரின் மையப்பகுதி நோக்கி பேரணியாகச் சென்றனர். ஸ்பெயினுடன், அங்கு வசிக்கும் உக்ரைனியர்களும் பேரணியில் பங்கேற்றனர்.

கிரீஸ் தலைநகர் ஏதென்ஸில், ரஷ்ய தூதரகத்துக்கு வெளியே அந்நாட்டு கம்யூனிஸ்ட் கட்சியினர் நடத்திய கண்டனப் பேரணியில் 6,000 பேர் பங்கேற்றனர்.

தாய்வான் தலைநகரிலும், ரஷ்யப் படையெடுப்பை கண்டித்து போராட்டங்கள் நடைபெற்றன. தாய்வானை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர சீனா தீவிரம் காட்டி வருவதால், உக்ரைன் விவகாரத்தில் உலக நாடுகளின் நடவடிக்கைகளை தாய்வான் மக்கள் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர்.

அவுஸ்திரேலியாவில் கனமழையையும் பொருட்படுத்தாமல், ஏராளமானோர் பேரணியாகச் சென்றனர். ரஷ்யாவிற்கு உக்ரைன் தக்க பதிலடி தருமாறு அவர்கள் முழக்கங்கள் எழுப்பினர்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில், ரஷ்ய ஜனாதிபதி புட்டினை கண்டித்து நடைபெற்ற போராட்டத்தில் ஏராளமான ரஷ்யர்களும் பங்கேற்று போரை நிறுத்துமாறு தங்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

### ஓடி ஒளிய மாட்டேன்

உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி நாட்டை விட்டு ஓடிவிட்டதாகவும், ஆயுதங்களை கீழே போடுமாறு தனது இராணுவத்திற்கு அவர் உத்தரவிட்டிருப்பதாகவும் வந்த தகவல்களுக்கு பதிலடி தரும்படி, தலைநகர் கீவ் நகர வீதியில் இருந்தபடி ஸெசெலன்ஸ்கி வீடியோ ஒன்றை வெளியிட்டார்.

அதில், ''ஆயுதங்களை கீழே போட மாட்டோம், நான் ஓடி ஒளிய மாட்டேன், இங்கேயேதான் இருப்பேன். உக்ரைனை காப்போம்'' என அவர் சூளுரைத்துள்ளார். நகைச்சுவை நடிகராக இருந்த ஸெலென்ஸ்கி இன்று துணிச்சலான யுத்தக் கள தலைவராகியுள்ளார்.

# ரஷ்ய – உக்ரைன் போரும், விளையாட்டு உலகமும்

## "தயவுசெய்து யுத்தம் வேண்டாம்'' – ரஷ்ய டென்னிஸ் வீரர் உருக்கம்

டுபாய் ஓபன் சம்பியன்ஷிப் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சம்பியனான ரஷ்ய டென்னிஸ் வீரர் ஆண்ட்ரி ருப்லெவ், இறுதிப் போட்டிக்கு முன்னேறிய பிறகு ரி.வி. கெமரா லென்ஸில் "நோ வார் ப்ளீஸ்'' என எழுதினார்.




,து குறித்து கருத்து கூறிய ருப்லெவ், "டென்னிஸ் வீரராக ,ருப்பதன் மூலம், உலகம் முழுவதும் அமைதியை நிலைநாட்ட விரும்புகிறேன். நாங்கள் பல்வேறு நாடுகளில் விளையாடுகிறோம். இந்தச் செய்திகளை எல்லாம் கேட்பது எளிதல்ல. நான் அமைதிக்காக இருக்கிறேன்'' என்று கூறினார்.



## ஒலிம்பிக் ஒப்பந்தத்தை மீறிய ரஷ்ய அரசு !

உக்ரைன் - ரஷ்யாவுக்கு இடையில் பரபரப்பான சூழ்நிலை நிலவிவரும் நிலையில் ரஷ்யாவில் நடைபெறவிருந்த அனைத்து விளையாட்டுப் போட்டிகளையும் இரத்துசெய்ய சர்வதேச ஒலிம்பிக் பேரவை உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து சர்வதேச ஒலிம்பிக் பேரவை தெரிவித்துள்ளதாவது, "ரஷ்ய மற்றும் பெலாரஷிய அரசாங்கங்கள் ஒலிம்பிக் ஒப்பந்தத்தை மீறியுள்ளன. விளையாட்டு வீரர்களின் பாதுகாப்பிற்கு முழுமையான முன்னுரிமை கொடுக்க வேண்டும். இதனால் ரஷ்யா மற்றும் பெலாரஷியாவில் நடைபெறவிருந்த அனைத்து விளையாட்டு போட்டிகளையும் வேறு இடத்துக்கு மாற்றவும் அல்லது இரத்து செய்யவும் அனைத்து விளையாட்டு கூட்டமைப்புக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.''


## ரஷ்யாவுடன் விளையாட மறுக்கும் போலாந்து
## இதுவே சரியான முடிவு என்கிறார் லெவன்டௌஸ்கி



2022 பீபா உலகக்கிண்ண உதைபந்து தொடரின் தகுதிச் சுற்றின் ப்ளேஆஃப் பிரிவில் போலாந்து அணி எதிர்வரும் மார்ச் 24ஆம் திகதி மொஸ்கோவில் ரஷ்யாவை எதிர்கொள்கிறது. இந்நிலையில், உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளதால் குறித்த போட்டியில் ரஷ்யாவுக்கு எதிராக விளையாட போலாந்து மறுப்பு தெரிவித்துள்ளது.

போலாந்து உதைபந்து கூட்டமைப்பின் தலைவர் இதனை அறிவித்துள்ளார். இந்த முடிவை ஆதரித்து ட்வீட் செய்துள்ள போலாந்து நட்சத்திர உதைபந்து வீரர் ரொபர்ட் லெவன்டௌஸ்கி, உக்ரைன் மீது இராணுவத் தாக்குதல் தொடரும் நிலையில் ரஷ்யாவுடன் விளையாடுவதை நினைத்துப் பார்க்க முடியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் இதுவே சரியான முடிவு என்பதையும் அவர் தெரிவித்துள்ளார்.

## ரஷ்யாவுக்கு எதிராக அணிதிரளும் நாடுகள்




உக்ரைன் மீதான படையெடுப்பிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், அடுத்த மாதம் ரஷ்யாவுக்கு எதிராக போலாந்து விளையாடுவதில்லை என முடிவு செய்துள்ளது.

போலந்து அணி வெளியிட்ட அறிக்கையில் "நாங்கள், போலந்து தேசிய அணியின் வீரர்கள், போலந்து உதைபந்தாட்ட சங்கத்துடன் சேர்ந்து, உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பின் விளைவாக, நாங்கள் பிளே-ஆஃப் விளையாட விரும்பவில்லை என்று முடிவு செய்தோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு பெலாரஸ் ஆதரவு அளித்ததால் அந்நாட்டின் கூடைப்பந்து விசாவை பிரித்தி படேல் இரத்துசெய்தார்.

## ரஷ்யாவில் நடைபெறவிருந்த இறுதிப் போட்டி பிரான்ஸுக்கு மாற்றம்

ஐரோப்பிய கழக அணிகளுக்கிடையிலான சம்பியன்ஸ் லீக் உதைபந்து தொடரின் இறுதிப் போட்டி ரஷ்யாவிலுள்ள செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் எதிர்வரும் மே 28ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளதால், சம்பியன்ஸ் லீக் உதைபந்து தொடரின் இறுதிப்போட்டியை ரஷ்யாவிற்கு பதில் பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடத்த ஐரோப்பிய உதைபந்து கூட்டமைப்பின் அவசர செயற்குழுவில் முடிவு செய்து இதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மறு அறிவிப்பு வரும்வரை ரஷ்யா மற்றும் உக்ரைன் கழக அணிகள் மற்றும் அந்த நாட்டு தேசிய அணிகளின் போட்டியை பொதுவான இடத்தில் நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. உக்ரைனிலிருந்து உதைபந்து வீரர்கள் மற்றும் அவர்களது




குடும்பத்தினரை மீட்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பிரான்ஸ் அரசுடன் இணைந்து ஐரோப்பிய உதைபந்து கூட்டமைப்பு முழுமையான ஆதரவு அளிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## உதைபந்து ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய டக்சனின் மரணம்

இலங்கை தேசிய உதைபந்து அணியின் மிக முக்கிய வீரர்களில் ஒருவரான தடுப்புச் சுவர் என ரசிகர்களால் கொண்டாடப்படும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 31 வயதான டக்சன் பியுஸ்லஸ் நேற்று முன்தினம் இரவு மாலைதீவில் அகால மரணமடைந்தார். மிக நீண்டகாலமாக இலங்கை தேசிய உதைபந்து அணியின் வெற்றிகரமான தமிழ் பேசும் வீரர் என்ற பெருமை பெற்று அனைத்து ரசிகர்களின் இதயங்களை கொள்ளைகொண்ட டக்சனது மரணம் அவரது குடும்பத்தாருக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்தமான இலங்கை ரசிகர்களுக்கும் கவலையும், பேரிழப்பையும் ஏற்படுத்தியுள்ளது. டக்சனின் மறைவுக்கு முன்னாள், இந்நாள் உதைபந்து வீரர்களும் அனுதாபங்களை தெரிவித்து வருகின்றனர். டக்சன் பியுஸ்லஸ் மரணிக்க முன்னர் மாலைதீவுகளில் நடைபெற்றுவருகின்ற திவேகி ப்ரீமியர் லீக் உதைபந்து தொடரில், கிளப் வலேன்சியா அணிக்காக விளையாடி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## 24 வருடங்களின் பின்னர் பாக். மண்ணில் தரையிறங்கிய ஆஸி. அணி

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியானது 24 வருடங்களின் பின்னர் பாகிஸ்தான் மண்ணில் தரையிறங்கியுள்ளது. அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி பாகிஸ்தான் மண்ணில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் தொடர் மற்றும் ஒரு இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடுகிறது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியானது, பாகிஸ்தானில் பாதுகாப்பு குறைபாடு காரணமாக 1998 ஆண்டுக்குப் பிறகு பாகிஸ்தான் மண்ணில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவில்லை. இலங்கை அணி கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தான் மண்ணில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் தொடரில் விளையாடியபோது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதன் பின்னர் பாகிஸ்தான் மண்ணில் இன்றுவரையில் பெரிதாக சர்வதேச போட்டிகள் நடைபெறவில்லை.



இந்நிலையிலேயே அவுஸ்திரேலிய அணி 24 வருடங்களின் பின்னர் இருதரப்பு கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் மண்ணில் தரையிறங்கியுள்ளது. இரு அணிகளுக்கும் எதிரான முதல் டெஸ்ட் போட்டி மார்ச் 4ஆம் திகதி ஆரம்பமாகிறது.

## சுதந்திரக் கிண்ணத் தொடரின் முதற்கட்ட அரையிறுதிப் போட்டிகள் நிறைவு
## சப்ரகமுவ, வடக்கு அணிகளுக்கு வெற்றி

இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் மாகாண அணிகளுக்கிடையிலான சுதந்திரக் கிண்ண உதைபந்து தொடரின் முதற்கட்ட அரையிறுதிப் போட்டிகள் நிறைவடைந்துள்ளன. சொந்த மண், அந்நிய மண் என்ற அடிப்படையில் இரு கட்டங்களாக நடைபெறும் அரையிறுதிப் போட்டிகளின் முதற்கட்ட போட்டிகளே நிறைவு பெற்றுள்ளன.

லீக் போட்டிகள் நிறைவில் அணிகள் நிலையில் முதலாம் இடத்தைப் பெற்ற சப்ரகமுவ மாகாணத்துக்கும், நான்காம் இடத்தைப் பெற்ற தென் மாகாணத்துக்கும் இடையிலான முதலாம் கட்ட முதலாவது அரை இறுதிப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை காலியில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் 62ஆவது நிமிடத்தில் ஏ. முஸ்பிக் பெற்ற கோலின் மூலம் சப்ரகமுவ 1-0 என்ற கோல் கணக்கில் தென் மாகாணத்தை வீழ்த்தியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதற்கட்ட இரண்டாவது அரையிறுதியில் வடமாகாண அணியும், கிழக்கு மாகாண அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற குறித்த போட்டியின் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் பெறவில்லை. இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகி போட்டியின் 75ஆவது நிமிடத்தில் கே. தேனுஷன் கோலடிக்க அந்த ஒரு கோலுடன் இறுதியில் வடமாகாண அணி 1-0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

வடமாகாணத்துக்கும், கிழக்கு மாகாணத்துக்கும் இடையிலான இரண்டாம் கட்ட அரையிறுதிப் போட்டி மார்ச் முதலாம் திகதி மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெறுகிறது. தென் மற்றும் சப்ரகமுவ மாகாண அணிகளுக்கிடையிலான இரண்டாம் கட்ட அரையிறுதிப் போட்டி மார்ச் 2ஆம் திகதி இரத்தினபுரி சீவாளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இரண்டு கட்ட அரை இறுதிப் போட்டிகளிலும் ஒட்டுமொத்த கோல்கள் அடிப்படையில் வெற்றிபெறும் இரண்டு அணிகள் இறுதிப் போட்டியில் விளையாட தகுதிபெறும். ஒட்டுமொத்த கோல்கள் சமநிலையில் இருந்தால், வெற்றி அணி அல்லது பெனல்டி முறையில் தீர்மானிக்கப்படும்.

## டோனியை சந்தித்த அந்த தருணத்தை என்னால் மறக்க முடியாது – பாக். இளம் வீரர் தஹானி

2021 ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணியின் ஆலோசகராக எம்.எஸ்.டோனி செயற்பட்டபோது பாகிஸ்தான் வீரர் ஷாநவாஸ் தஹானி டோனியுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார். இது குறித்து தெரிவித்துள்ள ஷாநவாஸ் தஹானி, எம்.எஸ்.டோனியைச் சந்தித்தது தனக்கு ஒரு கனவு நனவான தருணம் என்றும் அதை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

23 வயதான பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஷாநவாஸ் தஹானி அளித்த பேட்டியில், ''நான் நியூசிலாந்தின் ஷேன் போண்டைப் பின்தொடர்ந்தேன், அவரைபோலவே வேகமான வேகப்பந்து வீச்சாளராக மாற விரும்பினேன், ஆனால், அவர் ஓய்வு பெற்ற பிறகு, இங்கிலாந்தின் ஜோஃப்ரா ஆர்ச்சரைப் பின்தொடரத் தொடங்கினேன், விரைவில் அவரை சந்திக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். டோனியை சந்திப்பது எனக்கு ஒரு கனவு ஆகும், அந்த தருணத்தை என்னால் மறக்க முடியாது - என்றார்.






## மெக்சிக்கோ ஓபன் சம்பியனான நடால்

மெக்சிகோ நாட்டின் அகாபல்கோ நகரில் நடைபெற்ற மெக்சிக்கோ ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு சம்பியனாக ரபேல் நடால் தெரிவானார்.

மெக்சிக்கோ ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் அவுஸ்திரேலிய ஓபன் சம்பியனான 35 வயதுடைய நடால் மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த கேமரூன் நார்ரி ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினர். மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில், 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் பிரிட்டனைச் சேர்ந்த கேமரூனை வீழ்த்தி ரபேல் நடால் சம்பியன் பட்டம் வென்றார்.

அகாபல்கோவில் நடாலுக்கு இது 4ஆவது சம்பியன் பட்டம் ஆகும். நடப்பு 2022ஆம் ஆண்டில் நடாலின் 3ஆவது சம்பியன் பட்டமும் இதுவாகும்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7